கோகுலம்

GOKULAM

நவம்பர் '91 ரூ. 3/-



சைக்கிள் ஓட்டப் பழகிக்கோ;
சிரிச்சு வாழத் தெரிஞ்சுக்கோ!





கோகுலம்

1991 நவம்பர் மாத இதழ்
மலர் : 9 இதழ் : 10







அன்புமிக்க சிறுவர் சிறுமியரே,

உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான தீபாவளி வாழ்த்துகள். கூடவே குழந்தைகள் தின வாழ்த்துகள்!

பிருந்தாவனக் கதையரங்கத்திற்குத் தரமான கதைகள் வருவதில்லை என்று போன இதழில் எழுதியிருந்ததைப் படித்துவிட்டுத் திக்குமுக்காட வைக்கும் அளவுக்கு ஏராளமானவர்கள் எழுதியனுப்பத் தொடங்கியிருக்கிறார்கள். இனி எழுதுவோர் தங்கள் வயதையும் குறிப்பிட்டு எழுதுங்கள்.

உலகத்தின் எதிர்காலம் இன்றைய குழந்தைகளின் கரங்களில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்து குழந்தைகளின் நலத்தில் தனிக் கவனம் செலுத்திய ஆசிய ஜோதி நேருஜியின் பிறந்த நாள் இந்த மாதம். நேருவின் பெருமைகளைக் கூறும் கட்டுரை ஒன்று இந்த இதழில் வருகிறது.

குழந்தை இலக்கியத்திற்குப் புத்துயிரூட்டிய குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் பிறந்த நாளும் இந்த மாதம் வருவது எவ்வளவு பொருத்தமானது! அவரது சிறப்பைக் கூறும் ஒரு கட்டுரையும் இந்த இதழில் வருகிறது.

பிருந்தாவனக் கதையரங்கமும் பிருந்தாவனக் கவியரங்கமும் மீண்டும் முழு அளவில் வெளியாவது குறித்துப் பலரும் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்கள்.

'கேளுங்கள் பகுதிக்கு' பாடப் புத்தகத்தில் உள்ளவற்றையே பலரும் எழுதிக் கேட்கிறார்கள். எல்லோருக்கும் பயன்படக் கூடியதாகவும், அதே நேரத்தில் சுவை யானதாகவும் உள்ளவற்றைக் கேட்டால் இந்தப் பகுதி மேலும் அழகு பெறும். தாங்கள் கேட்ட கேள்விகள் வர வில்லையே என்று பலரும் ஏக்கத்தோடு எழுதுகிறார்கள். இந்தப் பகுதிக்கு நூற்றுக்கணக்கில் கேள்விகள் வருகின்றன. தேர்வு செய்யப்பட்ட கேள்விகளுக்கு, உரியவர்களுக்கு உடனே தெரிவிக்கப்படுகிறது.

விளையாட்டுப் பகுதியை உடனே மறுபடி தொடங்குங்கள் என்று ஏராளமான கடிதங்கள் வருகின்றன. வெகு விரைவில் இப் பகுதி தொடங்கவுள்ளது. உங்களுக்கு மகிழ்ச்சிதானே?

அன்புடன்,

ரேவதி
(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்

பஞ்சலிங்கபுரம் என்ற கிராமத்தில் துரை என்ற விவசாயி இருந்தான். அவனுக்குப் படிப்பறிவு இல்லை என்றாலும் நல்ல புத்திசாலி.

ஒரு நாள் தனது வயலைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினான் துரை.

வழியில் 'மழுங்கலான' ஒரு பொருள் கிடந்தது. அதை எடுத்தான். இதனை தூரத்திலிருந்து குதிரையில் வந்து கொண்டிருந்த வியாபாரி ஒருவர் கவனித்து விட்டார்.

''கீழே இருந்து என்ன எடுத்தாய்?'' என்று கேட்டார் வியாபாரி.

''இதுதான்; இதைப் பாருங்கள், இதற்கு ஏதாவது கிடைக்குமான்னு கூறுங்கள்!'' என்று கீழே எடுத்த பொருளை வியாபாரியிடம் கொடுத்தான் துரை.

ஆயிரம் ரூபாய் மதிப்புப் பெறும் தங்கம் இதில் இருக்கு. இந்த ஏமாளியிடம் பத்து ரூபாய் கொடுத்து இதை வாங்கிடணும்! என்று வியாபாரி மனதுக்குள் நினைத்தார்.

''துரை, இது ஒன்றுக்குமே உதவாத மட்டப் பித்தளை, போனா-ப் போகுதுன்னு உனக்காகப் பத்து ரூபாய் தருகிறேன்'' என்று வியாபாரி சொன்னார்.

துரை கொஞ்சம் யோசித்துப் பார்த்தான். வியாபாரி தன்னை ஏமாற்றுகிறார் என்று அவன் சந்தேகப்பட்டான்.

''என்னப்பா யோசிக்கிறே?'' என்று துரையிடம் கேட்டார் வியாபாரி.


எப்படியிருந்தாலும் சரி என்ற முடிவுக்கு வந்த துரை ''அண்ணே நூறு ரூபாய் தந்தால் தருகிறேன்'' - என்று கூறினான்.

''இதற்கு ஐந்து ரூபாயே அதிகம், போனாப் போகுதுன்னு பத்து ரூபாய் தருகிறேன் என்றால் நூறு ரூபாய் கேட்கிறாயே? இது அநியாயம்!''

துரை மௌனமாக இருந்தான். ''இன்னும் அரைமணி நேரம் கழித்து இதே வழியாக வருவேன். சிந்தித்து முடிவு எடு''- என்று கூறிவிட்டுப் போய் விட்டார் வியாபாரி.

வியாபாரி தான் சொன்னமாதிரி அரைமணி நேரம் கழித்து வந்தார். ''என்னப்பா துரை? என்ன முடிவு எடுத்

நானா ஏமாளி?





தாய்? பத்து ரூபாய்க்கு இதைத் தருகி றாயா?'' - என்று ஆவலோடு கேட்டார்.

''அண்ணே நீங்க போன பிறகு வேறொரு வியாபாரி வந்து நூறு ரூபாய் தந்து வாங்கிட்டுப் போய் விட்டார்'' - என்று கூறினான் துரை.

''ஐயையோ! நீ சுத்த ஏமாளியா இருக்கிறாயே! நீ எடுத்து விற்றது பித்தளை அல்ல நிறம் மங்கிய தங்கம்! இதன் மதிப்பு ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கும் - இப்படிக் கோட்டை விட்டு ஏமாந்துட்டியே நீ?'' என்று வருத்தத் துடன் கூறினார் வியாபாரி.

''அப்படியா!'' - என்று மறைத்து வைத்திருந்த அந்தப் பொருளை எடுத்து. வியாபாரி முன் நீட்டினான் துரை!

''இந்த பொருளின் உண்மையான மதிப்புத் தெரியத்தான் அப்படியொரு பொய்யைச் சொன்னேன். இது வேண்டு மென்றால் ஆயிரம் ரூபாய்தா. இல்லா விட்டால் இடத்தைக் காலி பண்ணு''.

இப்போது 'யார்' ஏமாளி என்று புரிந்து போய் விட்டது வியாபாரிக்கு.

- பஞ்சை ஆறு. அண்ணாதுரை.

யார் தலையில் விழும் - போட்டி முடிவு

கண்ணாடி மூடி பாபுவின் தலைக்கு மேல்தான் **இருந்தது என்றாலும்,** அது கழன்று விடுபடு**வதிலிருந்து** விழும் வரைக் கும் இடைப்பட்ட **ஒரு** சில நொடிகளில் பஸ் இடது பக்கம் வேகமாகத் திரும்பி விடுவதால் அது விழும் இடத்திற்கு நேராக மொட்டைத் தலை யர் வந்து விடுவார். பஸ் இடது பக்கம் திரும்பாமல் சென்றால் அந்த இடைவெளியில் கோபுவின் தலைக்கு நேராக வந்திருந்து, அவன் **தலையில்தான்** விழுந்திருக்கும். பஸ் இடது பக்கம் திரும்பி விட்டதால் கண்ணாடி மூடி மொட்டைத் தலைக்காரர் தலையில் விழுந்திருக்கும் என் பதே சரியான விடை.

இந்தப் போட்டியில் **கலந்து** கொண்ட வர்களின் **எண்ணிக்கையும் வழக்கப்படி** ஆயிரத்தைத் தாண்டி விட்டது. இதில் சரி யான விடையை ஏராளமானவர்கள் எழுதி யிருந்தனர். அதனால் குலுக்கல் முறையி லேயே பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக் கும்படி இருந்தது.

முதல் பரிசு ரூ. 10/- பெற்றவாகள்:

1. எஸ். வள்ளி, 7/156, சலம் குவார்ட்டர்ஸ், அமராய்வாடி அஞ்சல், அக மதாபாத்- 380 026.

2. டி. தங்கமணி, த/பெ. திரு. பி. எஸ். தண்டபாணி, 5, கிருஷ்ணா நகர், சௌரி மாவட்டம், கோவை - 641 028.

3. ஜி. கார்த்திகேயன், தரணி சுகர் காலனி, தரணி நகர் - 627 760.

4. ஆ. ஜார்துராஜ், பிரான்சுவா, 24, குமரப் பிள்ளை வீதி, கோட்டுச்சேரி, காரைக்கால் - 609 609.

5. ஏ. லட்சுமி நாராயணன், த/பெ. திரு. ஆர். அன்பழகன், 1/142, சன்னதி தெரு, வடபாதி மங்கலம் - 610 206.

6. பி. முத்துக்குமரன், 28, எம்.ஜய்.எஸ். காலனி, காரைக்கால் - 609 602.

7. இ. குமுதவல்லி, 1/44, நெடுஞ்சாலை, இலாசுப்பேட்டை அஞ்சல், புதுச்சேரி - 605 008.

8. மா. சென்றாயன், த/பெ திரு. சி. மாரப்பன், தாலகுளம் ஏரிக்கரை, வரத நல்லூர் - 638 302.

9. எஸ். அமீர்அலி, 14/1, சமது ஸ்கூல் தெரு, திருச்சி - 620 020.

10. ஆர். விஜயலக்ஷ்மி, 7, ராகவனார் தெரு, செங்கை - 603 001.

நரி ராஜா!

ஒரு காட்டில் தந்திரக்கார நரி ஒன்று வாழ்ந்தது. அந்தக் காட்டில் புலி, சிங்கம் போன்ற பெரிய மிருகங்கள் இல்லாத தால் அதுவே ராஜா போல நடந்து கொண்டு டாம்பீகமாக வாழ்ந்து வந்தது. நரி மற்ற மிருகங்களை வேலைக்காரர் களாகவும் அடிமைகளாகவும் எண்ணி நடத்தியது.

மந்தரேயன் என்ற ஒரு முயல் மட்டும் நரியைத் தீர்த்துக் கட்டத் திட்ட மிட்டது. அதற்காக அது நரியிடம் மிக வும் விசுவாசமுடையதைப் போல நடித் தது. மிகவும் பணிவாகவும் இனிமை யாகவும் வார்த்தைகளை அள்ளி அள்ளி வீசி அதை மயக்கியது.

ஒருநாள் இரவு மந்தரேயனைச் சந்திக்க வயதான முயல் ஒன்று வந்தது. அதைத் தனியாக அழைத்துச் சென்ற மந்தரேயன் வந்த விபரம் என்ன என்று கேட்டது. அதற்கு அந்த வயதான முயல், பக்கத்துக் காட்டில் உள்ள குகையில் ஒரு சிங்கம் வாழ்கிறது. அதற்கு எருமைக் கறி என்றால் கொள்ளைப் பிரியம்..... நீ... கிசு.... கிசு.....'' என்று காதோடு என்னவோ கூறியது. பிறகு எருமைத் தோலாலான அங்கி ஒன்றை மந்தரேய னிடம் கொடுத்து விட்டுச் சென்றது.

மறுநாள் -

மந்தரேயன் நரியிடம் சென்று, ''அரசே! பக்கத்துக் காட்டில் தங்கள் இனத்தவர் பலர் வாழ்கின்றனர். அவர்கள் அரசராகிய உங்களைக் காண விரும்புகின்றனர். ஆகையால் இன்று மாலை நாம் இருவரும் அங்கு சென்று வருவோம்!'' என்று கூறியது. நரியும், ''அதற்கு என்ன? தாராளமாகச் சென்று வருவோம்'' - என்றது.


தன் திட்டம் நிறைவேறியது குறித்து ம கி ழ் ச் சி ய டை ந் த மந்தரேயன், ''மன்னா! ஒரு வேண்டுகோள்.'' என்று பணிவுடன் கேட்டு கொண்டது.

மகிழ்ச்சியோடு இருந்த நரி, ''என்ன மந்தரேயா? தயங்காமல் கேள்!'' என்று உற்சாகப்படுத்தியது.

''நாம் அங்கு செல்லும் போது அரச ராகிய உங்களுக்கும் உங்கள் இனத்தா ருக்கும் வித்தியாசம் இல்லாமல் போய் விடுமே! நீங்கள் அரசர் என்பதை மற்ற வர்களுக்கு உணர்த்தும் படியாக நான் கொடுக்கும் அங்கியைத் தா ங் க ள் அணிந்து வரவேண்டும்'' என்று கூறி யது. நரியும் அதற்குச் சம்மதம் தெரி வித்தது. வயதான முயல் கொடுத்திருந்த எருமைத்தோல் அங்கியை நரியிடம் மந்தரேயன் கொடுத்தது.

மாலை -

நரியும், மந்தரேயனும் பக்கத்துக் காட்டிற்குக் கிளம்பின. நரி எருமைத் தோல் அங்கியை அணிந்து கொண்டு கம்பீரமாக நடந்தது. காட்டை அடைந்த தும் நரி ''அவர்கள் எங்கே இருக் கிறார்கள், இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்?'' என்று மந்த ரேயனை நச்சரிக்கத் தொடங்கியது. மந்தரேயன் இதோ இங்கேதான் அருகில் என்று கூறிக் கொண்டே அழைத்துச் சென்றது.



இரண்டும் ஒரு குகையை அடைந் தன. உடனே மந்தரேயன், ''அரசே! உங்கள் இனத்தார் வாழும் குகை இதுதான். உள்ளே போங்கள். நீங்கள் அவர்களோடு பேசும்போது நான் இடையூறாக இருக்க விரும்பவில்லை. ஆதலால், நான் வாசலிலேயே நின்று கொண்டிருக்கிறேன்! நீங்கள் உள்ளே சென்று அவர்களிடம் பேசுங்கள்,'' என்று கூறித் தந்திரமாக ஒதுங்கிக் கொண்டது.

நரி இறந்த மகிழ்ச்சிச் செய்தியைத் தெரிவிக்க மந்தரேயன் காட்டை நோக்கி விரைந்தது.

-ப.கா. மணிவண்ணன்,,
நாகமலை.



ஒரு ஸ்வீட் போதாதா?

காட்சி - 1

வீட்டுக் கூடம். அம்மா, அப்பா, மாலதி, மனோகர்.

(மாலதியும் மனோகரும் பள்ளி முடிந்து வீடு திரும்புகின்றனர்.)

மாலதி: (உள்ளே வந்து கொண்டே) அம்மா... அம்மா... இந்த வருஷம் தீபாவளிக்கு எத்தனை ஸ்வீட்... எத்தனை காரம் போடப் போறீங்க...?

அம்மா : கை கால் முகம் கழுவி... முதல்ல காப்பி சாப்பிடு. அதைப் பத்தி அப்புறம் யோசிப்போம்.

மாலதி: அம்மா என்னோட ஃபிரண்ட்ஸ் ஃபாத்திமா, நஸீமா, ரெண்டு பேரையும் தீபாவளி அன்னிக்கு நம்ம வீட்டுல விருந்து சாப்பிடக் கூப்பிட்டிருக்கிறேன்.

அம்மா : ஃபாத்திமா, நஸீமா வரட்டும். ஆனா... எனக்குக் கடலைமா.. திரிக்கிறதுக்குத்தான் ஆளைக் காணும்.

(மனோகர் உள்ளே வருகிறான்)

மனோ : கடலைமா... என்ன... கடலையே கூடக் கடைஞ்சு தர்றோம் நானும் அக்காவும். இந்த வருஷம் தீபாவளி ஸ்வீட்ஸ் பிரமாதமா... டேஸ்டா.. தயாரிச்சுடுங்க அம்மா...

அம்மா : இனிப்பு தயாரிக்கறது அப்படி ஒண்ணும் இனிமையான வேலை இல்லடா மனோ...! இடுப்பு ஒடிஞ்சிடும்! நான்... ஒண்டி ஆளா என்ன செய்ய முடியும்?

மனோ : இனி அந்தக் கவலை வேண்டாம். நானும் அக்காவும் எல்லா உதவியும் செய்து தர்றோம். ஏன்னா... என்னோட நண்பர்கள் ராபர்ட்டும், இம்தியாஸூம் தீபாவளிக்கு நம்ம வீட்டுக்கு வர்றாங்க...

அம்மா : நண்பர்களும்... உறவினர்களும் கூடி சந்தோஷமா... உண்டு மகிழ்றதுக்குத்தான் பண்டிகைகளே கொண்டாடுறோம்... எனக்கோ முன்ன மாதிரி அரைக்க... திரிக்க.... கரைக்க முடியலே.

மனோ : நீங்க ஒரு வேலையும் செய்ய வேண்டாம் அம்மா... 'அவுட்டோர்' ஒர்க் எல்லாம் நான் பார்த்துக்கிறேன்.

மாலதி : 'இன்டோர் ஒர்க்' எல்லாம்... என் பொறுப்பு... எப்படியோ அம்மா. எனக்கு நெய்யுருண்டையும், கைச்சுத்து முறுக்கும் கட்டாயம் வேணும்!

மனோ : மைசூர் பாகு, காராசேவு எனக்கு வேணும்...!

அம்மா : பட்டியல் பெரிசாத்தான் இருக்கு... பட்ஜெட் தாங்குமாப்பா?

மனோ : அப்பா... அதெல்லாம் சமாளிச்சுடுவாங்க.

(அப்பா உள்ளே வருகிறார்)

கமலவேலன்

அப்பா : என்ன அம்மாவும்... பிள் ளைங்களுமா என்ன திட்டம் போட றீங்க..? என் தலை உருளுது!

மாலதி : எல்லாம் தீபாவளிப் பலகா ரங்கள் பத்திதாம்ப்பா...

மனோ : அம்மாவுக்கு ஒத்தாசையா நாங்களே பலகாரத் தயாரிப்புல நேர டியா ஈடுபடப் போறோம்.

அப்பா: உம்... பணத்தோட... பண்ட மும் வீணாகப் போகுது!

மாலதி, மனோ : வீண் கவலை வேண்டாம் தந்தையே! விண்ணவரும் மன்னவரும் போற்றும் வணணம் பட்ச ணங்கள் தயாரிப்போம். இக்ஷணமே பணியினைத் துவக்குகிறோம். பணம் கொடுங்கள் தந்தையே!

அப்பா : அடச்சீ கழுதைங்களா... வசனமா பேசறீங்க..? மீனா... தலைய வலிக்குது காப்பி கொண்டா...

அம்மா : இதோ கொண்டு வர் றேங்க... என்னால ஓடியாடி வேலை செய்ய முடியலே... அவங்களாவே உதவி பண்ணறதா ஒப்புதல் தந்துட் டாங்க.

அப்பா: உதவியா உபத்திரவமா ங் கறது போகப் போகத் தெரியும்.

காட்சி - 2

வீட்டுக் கூடம். மாலதி, அம்மா, மனோகர்.

மாலதி : அம்மா... பாசிப் பருப்பை வறுத்துட்டேன் அப்புறம்...?


அம்மா : என்னை வறுத்து எடு...

மாலதி : கோவிச்சுக்காதேம்மா... மறந்துட்டேன்.

அம்மா : திருவையில போட்டுக் கொஞ்சங் கொஞ்சமா திரிக்கணும்.

மாலதி : திருவையா? அறுவை ஆச்சே. மாவு மில்லுல்ல குடுத்து திரிச் சுடலாம் அம்மா.

அம்மா : மில்லுல திரிச்சா... ருசி இருக்காது. அப்புறம் பாத்திமாவும் நஷீமாவும் பாராட்ட மாட்டாங்களே!



மாலதி : சரிம்மா. திருவையிலேயே திரிச்சுடுடறேன்.

(கை வலிக்க... உடம்பெல்லாம் வியர்க்க... கஷ்டப்பட்டுத் திரிக்கிறாள் மாலதி.)

அம்மா : மனோகர்... இந்தா... இதுல கடலைப் பருப்பும், அந்த அலுமினியத் தூக்குல ஜீனியும் இருக்கு.

மனோகர் : சரிம்மா... மில்லுல போயி திரிச்சுட்டு ஒரு நொடியிலே வந்துடறேன். சாயங்காலம் கிரிக்கெட் விளையாடப் போகணும்.

அம்மா : கடலைப் பருப்பை.. பட்டுப் போல திரிச்சுக்கோ... ஜீனி... நெய்யுருண்டைக்குன்னு சொல்லு... அதையும் நல்லா நைஸாத் திரிச்சுக்கணும். பக்குவம் தவறிடுச்சுன்னா.. உருண்டை... பிடிக்க முடியாது.

மனோ : அம்மா... கச்சிதமா திரிச்சுட்டு வர்றேன்.

மாலதி : ஐய்யோ... அம்மா.. . யெல்லாம் கொப்பளிச்சுப் போச்சே...

மனோ : அக்கா... முன் வைத்த காலை பின் வைப்பது வீராங்கனைகளுக்கு அழகல்ல. மனம் தளரவேண்டாம்! நான் மில்லிலிருந்து வரும்போது நூறு மில்லி தைலம் கடையில் வாங்கிட்டு வருகிறேன். அதைத் தடவினால் வலி பறந்து விடும்.

அம்மா : மாலதி... ரொம்பக் கஷ்டம்னா விட்டுடு. திரிச்ச வரைக்கும் உருண்டை பிடிச்சுடுவோம்.

மாலதி : ஐய்யய்யே... பாத்திமா, நஷீமாவுக்கு நிறையக் கொடுக்கணும். அதுவும் பாத்திமாவுக்கு நம்ம வீட்டு உருண்டைன்னா உயிர்.

அம்மா : பாத்திமா.. பாத்திமா... பாத்து மாவைத் திரிம்மா... டேய் நீ சீக்கிரம் போயிட்டு வாடா.





"எதுக்கு புத்தகம் தர்றே?"

"தீபாவளி பலகாரம் போன தடவையே நல்லால்லே. இது பலகாரம் செய்வதெப்படின்னு புத்தகம். நம்ம அன்பளிப்பு!"

— சி. அருள்மணி, மொரப்பூர்.

காட்சி - 3

மாவு மில். மனோகர், மில் முதலாளி வயதான பெண்மணி.

மனோகர்: அண்ணே... எனக்குப் பின்னால வந்தவங்களுக்கெல்லாம் அரைச்சுக் கொடுத்துட்டீங்க. நா.. எவ்வளவு நேரமா நிக்கறேன்?

மில் முதலாளி : என்ன பண்றது. கடலை மாவு அரைச்சுட்டேன். ஜீனி திரிக்கிறது கஷ்டம். பச்சரிசி மாவு திரிச்ச மிஷின்லதான் அதைத் திரிக்கணும் அப்பத்தான் ஜீனி ருசி கெடாது. யாராவது பச்சரிசி கொண்டு வரட்டும்.

மனோ : பச்சரிசி வரலேன்னா... பகல் பூரா.. நிக்க வேண்டியதுதானா? இது என்ன அநியாயம்?

முதலாளி : மிளகாய் அரைச்ச மிஷின்ல போட்டுத் தரட்டுமா? ஸ்வீட்... நல்ல கார சாரமாயிருக்கும்.

மனோ : நரகாசுரனைக் கொன்று மக்களைக் காத்த மாதவா! என்னையும் இந்தத் தூசு. தும்மலிலிருந்து காப்பாற்ற பச்சரிசியோடு யாரையாவது அனுப்பி, என் இச்சையைத் தீர்க்க மாட்டாயா? தயாபரா! தாமோதரா!

வயதான பெண்மணி : (வந்து கொண்டே) தாமோதரனைத்தான் போகச் சொன்னேன். தடிப்பயல் மாட்டேன்னுட்டான். தள்ளாத வயசுல... நான் இந்தப் பச்சரிசி திரிக்க வர வேண்டியிருக்கு..

மனோ : ஆகா... பச்சரிசி! பச்சரிசி!! (குதிக்கிறான்)

(மில்லில் உள்ளவர்கள் வியப்புடன் அவனைப் பார்க்கிறார்கள்)

காட்சி - 4

வீட்டுக் கூடம். மாலதி, மனோகர், அம்மா, அப்பா.

மனோ : (வந்து கொண்டே) அம்மா... அச்சு... (தும்முகிறான்) கடலை மாவு அச்சு (தும்முகிறான்) திரிச்சுட்டேம்மா.. அச்சு.. அச்சு.. (தும்முகிறான்)

மாலதி : தம்பி.. தைலத்தைக் கொடு. கையெல்லாம் வலி உயிர் போகுது.

அம்மா : அப்புறம் மாலா நாளைக்கு மைசூர் பாகுவுக்குத் தயார் செய்யணும்.

மாலதி : மைசூர் பாகும் வேண்டாம் பெங்களூர் பாகும் வேண்டாம்.

அப்பா : அப்போ காராசேவு?

மனோ : காராசேவு வேஸ்ட்! காசை 'சேவ்' பண்ணணும்ப்பா... நாங்க ரெண்டு பேரும் பட்ட கஷ்டம் போதும்! ஒரு வீடு; ஒரு மரம்.. அது மாதிரி தீபாவளிக்கு ஒரு ஸ்வீட், ஒரு காரம்.

மாலதி : ஆமாம்ப்பா... சிக்கனம் வீட்டைக் காக்கும்.

அம்மா : ஒவ்வொரு தீபாவளிக்கும், அப்பாவும் அம்மாவும் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறாங்கறது இப்பவாவது தெரியுதா?

மனோ : நல்லாவே உணர்ந்துக்கிட்டோம். உழைப்பின் பெருமையையும் தெரிஞ்சுக்கிட்டோம்.

மாலதி : இந்த வருஷம் தீபாவளி.. எனக்கும் தம்பிக்கும் புதுமை தீபாவளி! ஏன்னா எங்க உழைப்பில தயாரிச்ச ஸ்வீட், காரம் சாப்பிடப் போறோமே..?

அப்பா : ஆனா.. பணம் என் உழைப்புல வந்தது ஆச்சே... அத மறந்துடாதீங்க...

மாலதி - மனோகர் : அப்போ... அப்பாவுக்கு டபுள் ஸ்வீட் கொடுத்துடுங்க அம்மா.

(சிரிக்கிறார்கள்)



ஆந்தையார்!



"ஆந்தை" என்ற பெயரைக் கேட்டாலே அபாயத்தின் அறிகுறி, அபசகுனம் பிடித்தது, மூர்க்கத் தனமானது என்று பெரும்பாலோர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். திரைப் படங்களில் கூட பயங்கரமான காட்சிகளின் போது ஆந்தையைக் காட்டுவதைப் பார்த்திருக்கலாம். ஆனால், உண்மையில் ஆந்தை அப்படிப்பட்ட பறவையே அல்ல! இன்னும் சொல்லப் போனால் மனிதனுக்குத் தீங்கு செய்யாமல் நன்மை செய்யக் கூடிய சாதுவான பறவைகளில் ஆந்தை சிறப்பான இடம் பெற்றுள்ள பறவை என்றால் மிகையாகாது.

ஆந்தைகளில் 135 வகைகள் உள்ளன. இவையனைத்திலும் பொதுவானதோர் சிறப்பம்சம் என்னவென்றால் அதன் கண் பார்வை. அவை, இரவில் ஒரு சிறு பொருளைக் கூட எளிதில் அடையாளம் கண்டு கொள்ளக் கூடிய (எவ்வளவு தூரமாக இருந்தாலும் சரி) சக்தி படைத்தவை. ஆனால் இந்த அளவுக் கதிகமான சக்தியின் காரணமாக பகல் நேரத்தில் ஆந்தைகளுக்குக் கண் கூசுவதால் அவை பகலில் வெளியே வருவதில்லை. ஊருக்கு - ஒதுக்குப்புறமாக உள்ள மரங்கள், பாழடைந்த கட்டடங்கள் போன்வற்றில் பகல் முழுவதும் நன்றாகத் தூக்கம் போடுகின்றன.

பார்வைச் சக்தியைப் போன்றே ஆந்தையாருக்குக் கேட்கும் சக்தியும் அதிகமாகும். இதற்கு ஏற்றவகையில் மற்ற பறவைகளைப் போல அல்லாமல் இதன் காதுகள் நன்கு அகலமாக வெளியில் தெரியும்படி அமைந்துள்ளன. இறகுகள் மிகவும் மென்மையாக உள்ளதால் எவ்வளவு வேகமாகப் பறந்தாலும் சத்தம் துளிகூடக் கேட்பதில்லை. இதன் காரணமாக நைஸாக இரையின் அருகில் சென்று எளிதில் வேட்டையாடி விடுகிறது.

மண்புழு எப்படி விவசாயிகளின் நண்பனோ அது போல ஆந்தையும் மனித குலத்திற்கே நன்மை பயக்கும் பறவை. இதன் இரை பாம்பு, தேள், எலி, பல்லி, வண்டு போன்ற விஷ ஜந்துக்களாகும். இவைகளைப் பிடித்துத் தின்றுவிடுவதால் இவைகளிடமிருந்து மனிதனுக்குப் பாதுகாப்புக் கிடைக்கிறதல்லவா? இதன் 'அலகு'கள் மிகவும் உறுதியானவை. ஏதேனும் இரையை இதில் கவ்விக் கொண்டு விட்டால் அதற்குப் பிறகு அந்த இரை தப்புவது அவ்வளவு எளிதல்ல. சாதாரணமாக ஒவ்வொரு ஆந்தையும் 40--லிருந்து 60- - 70 வயது வரை வாழ்கின்றன!

- சத்தி. ஏ.ஜே. ஜப்பார்.

இரண்டு ரஸ்தாளி!



அந்தக் கவிஞர் எல்லோருக்கும் நன்கு அறிமுகமானவர். அவருடன் நெருங்கிப் பழகிய குடும்ப நண்பர் ஒருவர் அவரை ஓர் இலக்கிய விழாவுக்கு மேட்டூருக்கு அழைத்துப் போனார்.

வீட்டை விட்டுக் கிளம்பும் வரை கவிஞருக்கு ஓய்வில்லை. அன்புத் தொல்லை தரும் எவரையும் கடிந்து கூறத் தெரியாது பழகும் கருணை உள்ளம் கொண்டவர் அவர். அதனால் கிளம்புகின்ற நேரம் வரை, அவருக்கு உணவு சாப்பிடக் கூட நேரம் கிடைக்க வில்லை. கடைசியில் பட்டினியாகவே புறப்பட்டார்.

அழைத்துப் போக இருந்த நண்பருக்கு கவிஞர் பட்டினி என்பது ரயிலேறிய பிறகுதான் தெரிந்தது! ஏதோ குற்றம் செய்து விட்டவர் போல் பதறிப் போன அவரைக் கவிஞர் தேற்றினார். அடுத்து வந்த ஏதோ ஒரு ஸ்டேஷனில் ரயில் நின்ற போது, அந்த நண்பர் இறங்கி ஓடி இரண்டு ரஸ்தாளிப் பழங்களை வாங்கி வந்தார். அதையும் கூடக் கவிஞர் சாப்பிடவில்லை. வாங்கி வைத்துக் கொண்டார்.

விடியற்காலை நாலு அல்லது நாலரை மணி இருக்கும். ரயில் சேலம் சந்திப்புக்கு வந்தது. இருவரும் இறங்கினர். எதிர் பிளாட்பாரத்தில் மேட்டூர் செல்லும் ரயில் இருந்தது. அது ஏழு

மணிக்குத்தான் கிளம்பும்.

இருவரும் பல் விளக்கினர். நண்பரின் வற்புறுத்தல் தாங்காது கவிஞர் ரஸ்தாளிப் பழத்தை எடுத்தார். அந்த விடியற்காலை நேரத்திலும் கூட இரண்டொரு சிறுவர்கள் பிச்சை கேட்க வந்து விட்டனர்!

எங்கே கவிஞர் அந்தப் பழங்களையும் பிச்சை கேட்டு வந்த சிறுவர்களுக்குப் போட்டு விடுவாரோ என்று நண்பருக்குப் பயம். அவர்களைக் கடுமையாகக் கடிந்து விரட்டி விட்டார்.

கவிஞர், சாப்பிட எடுத்த பழங்களை உரிக்கவில்லை! மீண்டும் அப்படியே வைத்து விட்டார்! நண்பர் கேட்டதற்கு ''பிறகு சாப்பிடுகிறேன்'' என்று கூறி விட்டார்.

நன்றாக விடிந்தது. இருவரும் ரயில்வே சிற்றுண்டி சாலையில் டிபன் காப்பி சாப்பிட்டு விட்டு, செய்தித்தாள் படித்தனர். மேட்டூர் ரயிலில் ஏறினர்.

''பழங்களை சாப்பிடுங்களேன்'' என்று நண்பர் நினைவுபடுத்தினார். கவிஞர் நிதானமாகப் பழங்களை உரித்துச் சாப்பிட்டார்.

''பழம் எப்படி இருந்தது? நல்ல கனிந்த ரஸ்தாளி'' என்று கேட்டார் நண்பர்.

''பழம் நன்றாகத்தான் இருந்தது. நான் பட்டினி கிடக்கக் கூடாது என்ற பதைப்பில் ஓடோடிப் போய் வாங்கி வந்தீர்களே... அந்த அன்பும் சேர்ந்திருந்ததால் பழம் நன்றாகவே இனித்தது. ஆனால்...''

கவிஞர் என்ன கூறப் போகிறார் என்பதைக் கேட்க நண்பர் ஆவலாக இருந்தார்.

''நீங்கள் மனம் வைத்திருந்தால் இதற்கு இன்னும் இனிப்பைக் கூட்டியிருக்கலாம்!''

நண்பர் புரியாமல் பார்த்தார்.

''ஒட்டிய வயிறோடு பசியென்று வந்த அந்தச் சிறுவர்களுக்கு, ஒரு பழம் தந்திருந்தால் கூடப் போதும், பழத்திற்கு இன்னும் சுவை கூடியிருக்கும்! அதற்கு வழி இல்லாமல் செய்து விட்டீர்கள்!''

நண்பர் கண்கலங்க நின்றார். அந்தக் கவிஞர் கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியரான குழந்தைக் கவிஞர் அமரர். அழ. வள்ளியப்பா அவர்கள்தான்!

சைக்கிள் விடத் தெரியாத சிறுவர் சிறுமியரே இருக்க மாட்டார்கள். சைக்கிள் விடக் கற்பதில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான சுவையான தனி அனுபவம் ஏற்பட்டிருக்கும். இங்கே தங்கள் அனுபவங்களைச் சில தம்பி தங்கைகள் உங்களோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

ஆர். கோகுலகிருஷ்ணன் : ''சைக்கிள் ஓட்டக் கத்துக்கறேம்ப்பா''ன்னு என் அப்பாகிட்டே சொன்னேன். ''இப்ப வேணாண்டா. கொஞ்ச வருஷம் போகட்டும்; அப்புறமா நானே சொல்லித் தரேன்''னார். ஆனா, அவருக்குத் தெரியாது நான் ஏற்கெனவே சைக்கிள் விடக் கத்துக்கிட்டேங்கறது! சும்மா சொல்லி வச்சேன். ஆனா, ஒரு நாளைக்கு அவர் ஆபீஸ்லேருந்து வர்ற வழியில் நான் சைக்கிள் ஓட்டிக்கிட்டுப் போறதைப் பார்த்திட்டார். திரும்ப வீட்டுக்குப் போறதுக்கு





பயம்மா இருந்தது! ஆனா அப்பா என்னைக் கோவிச்சுக்கவே இல்லே. சைக்கிள் ஓட்டத் தெரியாத மாதிரி நான் நடந்துக்கிட்டதை அவர் கோவிச்சிக்குவாரோன்னு ஒரே பயந்தான். அதுக்கு மாறா, ''நல்லா சைக்கிள் ஓட்றேடா நீ! ஆனா, ரோட்ல எடது ஓரமா போ, நடுவுல வராதே''ன்னு அட்வைஸ் பண்ணினார். எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது.

என். சீதா : சைக்கிள் விடக் கத்துக்கிட்டதும் 'இந்தப் பொண்ணு என்னமா சைக்கிள் ஓட்டுது!' அப்படின்னு தெருவில போற,

சைக்கிள் விட்ட அனுபவத்தைச் சுவையாய்ச் சொல்றோம் கேளுங்க !

- 5 பேர் அனுபவம்



என். ரேவதி

வர்றவங்க பேசிகிட்ட போது ரொம்பப் பெருமையா இருக்கும். எங்க வீட்ல கூட எல்லாரும் பாராட்டுவாங்க. இதனாலேயே ரோட்ல போற போது ரொம்ப வேகமா போவேன். அப்படி ஒரு வாட்டி சைக்கிள்ல வேகமா போன போது கொஞ்ச தூரத்ல எதிர்ல ஒரு லாரி வந்திட்டுது. நடு ரோட்ல வேறே போய்க்கிட்டிருந்தேனா, என்ன பண்றதுன்னே தெரியலே. சடன்னா பிரேக் போட்டு எறங்கிடலான்னாலும் முடியலே. என்ன பண்றதுன்னு நான் யோசிக்கறதுக் குள்ளேயே, அந்த லாரி சட்னு வலது பக்க ரோட்ல இரும்பிடுச்சு. நல்ல வேளையா நேரா வரலே. நான் தப்பிச்சேன்! அதுக் கப்புறம் யார் எப்படிப் பாராட்டிப் பேசி னாலும் சைக்கிள்ல போறப்ப மெது வாத்தான் போறேன்; ஜாக்ரதையா இருக் கேன்.

டி. தினேஷ் : அம்மா அப்பப்ப குடுக்கற காசை சேர்த்து வெச்சு வாடகை சைக்கிள் எடுத்து ஓட்டறது என் வழக்கம். ''ஏண்டா இந்த மாதிரி செலவு பண்றே? நீ டென்த் ஸ்டாண்டர்டு பாஸ் பண்ணப்புறம் நானே ஒரு நல்ல சைக்கிள் வாங்கித் தரேன்''னு அப்பா அடிக்கடி சொல்வார். ஒருவாட்டி அவர் தன்னோட பர்ஸை எடுத்துக்க மறந்து ஆபீசுக்குப் போயிட்டார். அம்மா என் கிட்டே வந்து, ''டேய், அப்பா பஸ் ஸ்டாண் டிலே நின்னுகிட்டிருப்பார். பஸ்ல ஏறி டிக்கெட் எடுக்க பர்ஸைத் தேடித் தவிப்பார். சீக்கிரமா போய் குடுத்திட்டு வா''ன்னு சொல்லி பர்ஸைக் குடுத்தாங்க. ஓடிப் போய் அப்பாவைப் பிடிக்க முடியாது. பக்கத்து கடைல வாடகை சைக்கிள் எடுத்திண்டு, வேகமாப் போய், பஸ் ஏறப் போன அப்பா வைப் பிடிச்சிட்டேன். விவரம் தெரிஞ்சுக் கிட்ட அப்பா என்னை ரொம்பப் பாராட்டி னார். இப்பல்லாம், ''எப்பவாவது ஒருதரம் வாடகைக்கு சைக்கிள் எடுத்துக்க. மிச்ச காசை சேத்து வை. அதை வெச்சே நீயே ஒரு



கோகுலகிருஷ்ணன்

சைக்கிள் வாங்கிக்கலாம்''னு அட்வைஸ் பண்றார்!



சு. எஸ். ஆனந்த்

ஜி. கற்பகம் : ஒரு ஞாயிற்றுக் கிழமை மத்யானமா என் ஃப்ரெண்டு அவளோட சைக்கிள்ல என் வீட்டுக்கு வந்தா. அப்ப தான், ''எனக்கும் சைக்கிள் ஓட்டக் கத்துத் தரியா?''ன்னு அவகிட்ட கேட்டேன். சரின்னா. அவளோட அப்பா ரொம்பக் கண்டிப்பானவர்னு எனக்கும் தெரியும். அவர் அன்னிக்கு எங்கேயோ வெளில போயிருக்கறதினால எனக்கு சொல்லித் தரேன்னு அவ சொன்னா. ஏறி ஒக்காந்துக் கிட்டேன். பெடல் பண்ணேன். ஏற்கெனவே ஒரு, ரெண்டு தரம் ஓட்டியிருக்கறதனால சுமாரா ஓட்னேன். பின்னால அவ கேரி யரைப் பிடிச்சுகிட்டு ஓடி வந்தா. கொஞ்ச தூரத்துல அவ எங்கூட ஓடி வராத மாதிரி



என். சீதா

தோணிச்சு. திரும்பிப் பார்த்தேன். ஆமா, அவ இல்லே! ஒடனே பயம் வந்திடுச்சு! அதுக்குள்ள எதிர்ல வந்த ஒருத்தர் மேல மோதப் போனேன். அவர் சைக்கிளைப் பிடிச்சு நிறுத்திட்டார் - என் ஃப்ரெண்டோட அப்பாவேதான்! அவரைப் பார்த்துட்டுதான் அவ பயந்து ஓடியிருக்கா! ''சாரி அங்கிள்'' அப்டீன்னு சொல்லிட்டு சைக்கிளை வீட்டுக்குத் தள்ளிக்கிட்டு போனேன். நல்ல வேளை, அவருக்கு அது அவங்க வீட்டு சைக்கிள்தான்னு ஞாபகமேயில்லே. நானும் ஃப்ரெண்டும் தப்சோம்!

டி. எஸ். ஆனந்த் : எங்க தெருவிலே இருக்கற ஒரு வீட்டு வாசப்படிதான், சைக்கிள்ல ஏறி இறங்க எனக்குச் சொல்லிக் குடுத்தது. எப்படீன்னு கேக்கறீங்களா? சைக்கிள்ல யாரேனும் என்னை ஏத்தி ஒக்கார வெச்சிட்டா நான் நல்லா ஓட்டுவேன். ஏற, எறங்கத்தான் தெரியாது! எங்க வீட்ல இருந்ததோ பெரிய சைக்கிள். அதை உருட்டிக்கிட்டே போய் அந்த வீட்டு வாசப்படிகிட்டே வெச்சுப்பேன். படி மேல ஏறி, சைக்கிள்ல ஒக்காந்துகிட்டு உதைச்சுத் தள்ளிக்கிட்டு ஒரு ரவுண்டு போவேன். எறங்கும் போதும் அப்படித்தான் அந்தப் படி ஹெல்ப் பண்ணும். ஒருவாட்டி அந்த வீட்டுக்காரர் ''என்னடா தம்பி, தெனம் தெனம் என் வீட்ல எட்டிப் பார்க்கறே?'' அப்டீன்னு கோவிச்சுக்கிட்டார். எங்க அப்பாகிட்டே வந்து சொன்னேன். அவர், வாடகை சைக்கிள் கடைல சின்ன சைக்கிள் எடுத்து விடச் சொன்னார். கீழே தரைல கால் வெச்சா தரைலபடறா மாதிரி! அதிலே கொஞ்சம் கொஞ்சமா ஏறி, எறங்கப் பழகிட்டேன். இப்ப எங்க வீட்டு பெரிய சைக்கிள்ல கூட நானே ஏறி, ஓட்டி வந்து, எறங்குவேன் வாசப்படி துணையில்லாம!

என். ரேவதி : எங்க அப்பா ஆபீஸ் போற போது எங்கிட்ட சைக்கிளை வெளில எடுத்து வைம்பார். எனக்கு ரொம்ப சந்தோஷமாவும் பெருமையாவும் இருக்கும். சைக்கிளே விடத் தெரியாத எனக்கு இப்படி ஒரு பொறுப்புக் கொடுத்தாரேன்னு சந்தோஷப்பட்டேன். வீட்டுக்கு வெளில மெல்ல சைக்கிளைத் தள்ளிக்கிட்டு வந்து ஸ்டாண்டு போட்டு வெப்பேன். கொஞ்ச நாளக்கி அப்புறம் அப்பா ஆபீசுக்குப் புறப்பட கால் மணி நேரம் இருக்கறதைப் பார்த்து நாமே ஓட்டினா என்னன்னு தோணிச்சு. தள்ளிக்கிட்டுப் போனேன். அப்புறம், அப்பா ஓட்டிகிட்டுப் போறதை கவனிச்சுப் பார்த்திருக்கேனா, அதே மாதிரி பெடல்ல கால் வெச்சு உந்தினேன். இப்படி ரெண்டு நாள்... அப்புறம் கொரங்குப் பெடல். இப்படிக் கொஞ்ச நாள்... அப்புறம் நானே சூப்பரா ஓட்ட ஆரம்பிச்சிட்டேன். பெருமையா அப்பாகிட்ட சொன்னேன். ''தெரியுமே!''ன்னார் அப்பா. ''நான் கவனிச்சுக்கிட்டுதான் இருந்தேன்! ஒனக்குத் தெரியாமலேயே ஒனக்கு ட்ரெயினிங் குடுத்தேனாக்கும்''ன்னு சொன்னார். ரொம்ப சந்தோஷமா இருந்தது.


படங்கள், பேட்டி : பிரபு சங்கர்

அட்டையில் : பாலாஜி, திவ்யா
வண்ணப்படம் : உத்ரா

''என்னடா, உங்க வீட்லே வெடியே வாங்கலேன்னே..! டமால் டுமீல்னு சத்தம் கேட்குதே?''

''போன வருஷம் வெடிச்சதை டேப் செஞ்சு வைச்சதுதான் இது...!''

- எஸ். மாதவன், திருச்சி 14.





''ராமு ஏன் ஊசிப் பட்டாசை நூல்ல கோத்து வெடிக்கறான்?''

''அவங்க அப்பா டெய்லராச்சே?''

- மொரப்பூர் அ. நவ்சாத்.

நாணயங்கள்

ஆழி


அச்சடிக்கப்பட்ட உலோக நாணயங்களுக்கு முன், பலவிதப் பொருள்கள் நாணயங்களாகப் பயன்படுத்தப் பட்டன.



யானைத் தந்தங்களில் செதுக்கப்பட்ட சட்டங்கள், அபூர்வமான பறவைச் சிறகுகள் கூட இலங்கையில் ஆதிகாலத்தில் நாணயங்களாகப் பயன் படுத்தப்பட்டன!



நூறு ஆண்டுகளுக்கு முன்பு கூட போர்னியோவில், மனித வேட்டையாடும் ஆதிவாசிகள், மனிதர்களின் மண்டை ஓடுகளை நாணயங்களாகக் கொடுத்துப் பொருள்களை வாங்கிக் கொண்டார்கள்!



பசிபிக் தீவுகளின் ஆதிவாசிகள் 2 மீ. உயரம் உள்ள கல்லால் ஆன நாணயங்களைப் பயன் படுத்தினார்கள். உலகில் இதுதான் மிகப் பெரிய நாணயம்.

பொலினீஷியாவில் ஆதிவாசிகளிடையே இதுமாதிரிப் பயன்படுத்தப் பட்ட கற்களுக்கு 10,000 தேங்காய்கள், அல்லது ஒரு படகு வாங்கப் பட்டது. இதன் எடை 90 கிலோ. இதன் பெயர் 'யாப்' கல்.

மிகப் பழங்காலத்தில் இதுமாதிரி கூட நாணயங்கள் இருந்தன!



ஜப்பான் நாணயம்   சீன் நாணயம்   கிரேக்க நாணயம்.



உலகில் முதல் உலோக நாணயங்கள் சீனாவில் பயன்படுத்தப் பட்டிருக்கும் என்று நம்பப்படுகிறது. சீனா கி.மு.1000-இல் முதல் நாணயங்களை வெளியிட்டது. தங்கம், வெள்ளி, செப்புக்காசுகள் அவை. சில நாணயங்களில், நடுவில் சதுரமான துவாரமும் இருந்தது. பிற்காலத்தில் சீன நாணயங்களில், எருது, சிங்கம், கடல் ஆமை முதலியவை பொறிக்கப்பட்டன.

லிடியா, கி.மு. 700-இல், நாணயங்களை வெளியிட்டது.

அடுத்து, உலோக நாணயங்களை வெளியிட்ட நாடு கிரேக்கம். இவற்றில் சிங்கம், எருது, குதிரை, கப்பல், கழுகு, ஆந்தை, அரசர்தலை, முதலிய உருவங்கள் பொறிக்கப்பட்டன.





நாணயங்களில் முதன் முதலாகத் தன் தலையைப் பொறித்த மன்னன் மகா அலெக்ஸாண்டர். கி.மு. 336


இந்தியாவில், நாணயத்தில், தன் தலையைப் பொறித்த முதல் மன்னன் கௌதமி புத்திர சாதகர்ணி.



பல மதிப்புகளில் பல நிறங்களில் கண்ணாடியாலான நாணயங்கள் கி.பி. 908 முதல் கி.பி. 1171 வரை எகிப்தில் பழக்கத்தில் இருந்தன.




சீஸரின் கொலையை நினைவுபடுத்தும் வகையில் கிரேக்கத்தில், கி.மு. 43-இல், கொலை நடந்த மார்ச் 15-ஆம் நாள், இரண்டு கத்திகளைப் பொறித்து நாணயம் வெளியிடப்பட்டது.



1621-இல், ஜெர்மனியில் முதன் முதலில் சதுர வடிவில் நாணயங்கள் அச்சடிக்கப் பட்டன!

1639-இல், ஜெர்மனியில் 12.5 செ.மீ. குறுக்களவும் 56 கிராம் எடையும் உள்ள 16 டாலர் வெள்ளி நாணயம் தான், இதுவரை புழக்கத்தில் விடப்பட்ட நாணயங்களில் மிகவும் பெரியது!






பசிபிக் கடலின் கோகோஸ் தீவுகளில் செம்மறியாட்டின் தோலில் 1910-1913 ஆண்டுகளில் நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன.



சோழர் தங்க நாணயம் –



குப்தர் தங்க நாணயம்.

● வட மொழியில் 'ரூபயம்' என்றால் வெள்ளி என்பது பொருள். அதிலிருந்துதான் 'ரூபாய்' என்ற சொல் வந்தது!

இந்தியாவில் ஷெர்ஷா மன்னர்தான் (கி.பி.1538-1545) ரூபியா என்ற பெயரில் வெள்ளிநாணயங்களை வெளியிட்டார்.



ஆங்கிலேயர்கள் 'ரூபியா' என்ற சொல்லை 'ரூபாய்' என்று மாற்றி, 1 ரூபாய், ½ ரூபாய், ¼ ரூபாய் நாணயங்களை வெள்ளியில் வெளியிட்டார்கள்.

பிரான்ஸ் நாட்டின் நாணயம் 'பிராங்க்'. பிராங்க் என்பதற்கு விடுதலை என்பது பொருள். 14-ஆம் நூற்றாண்டில் ஜான் II என்னும் மன்னரை ஆங்கிலேயர்கள் சிறைப்படுத்தியபோது மீட்புப்பணம் செலுத்த அச்சடிக்கப்பட்ட தங்க நாணயம் 'பிராங்க்' (விடுதலை) என்று பெயரிடப்பட்டது.



முதன் முதல் 7 பட்டை ஓரங்களை உடைய 50 பென்ஸ் நாணயத்தை வெளியிட்டது பிரிட்டன்.

உலகிலேயே மிகப் பெரிய தங்க நாணயம் 12 கிலோ எடையுள்ளது. 17-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் முகம்மதியர் ஆட்சிக்காலத்தில் தயாரிக்கப்பட்டது. அதன் இன்றைய மதிப்பு ரூ.11 கோடி! ஜெனிவாவில் இருக்கிறது இப்போது.





நியூயார்க்கின் சுதந்திர தேவியின் சிலையைக் கௌரவிக்கும் வகையில் 5 டாலர் தங்க நாணயத்தை வெளியிட்டது அமெரிக்க அரசாங்கம்.

இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் காலத்தில் ஆங்கிலேயர்கள், மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்ட நாணயங்களைப் புழங்கச் செய்தார்கள். சென்னையில் ஆற்காட்டு ரூபாய், பம்பாயில் சூரத் ரூபாய், வங்காளத்தில் ஸிக்கா ரூபாய், காசியில் பனாரஸ் ரூபாய். இதனால் ஏற்பட்ட குழப்பத்தைத் தவிர்க்க சென்னை மாநிலத்தில் இருந்த ரூபாய் இந்தியா முழுவதற்கும் புழங்கப்பட்டது.



அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டைக் குறிக்கும் வகையில் நம் நாட்டில் வெளியிடப்பட்ட நாணயம் இது. 50 ரூ. 10 ரூ. 10 காசுகள், 5 காசுகள்.

விடுதலைக்கு முன் இந்தியாவில் வழங்கப்பட்ட சில நாணயங்கள்:



ஒரு பைசா. ஒரு ரூபாய்க்கு 192 பைசாக்கள். (காசுகள்)



நடுவில் துவாரமுள்ள காலணா. ஒரு காலணாவுக்கு 3 பைசாக்கள்.



இரண்டு அணா. 1935. ஒரு ரூபாய்க்கு 8 இரண்டு அணாக்கள்.



ஓர் அணா - 1936. ஒரு ரூபாய்க்கு 16 அணாக்கள். ஓர் அணாவுக்கு 12 காசுகள்.



இந்திய விடுதலைக்குப் பிறகுதான் நாணயங்களில் அசோகர் தூணின் சிங்கம் பொறிக்கப்பட்டது.



தூக்கத்திற்குத் தண்டனை!

பார்சியாவை ஆண்ட பிரெடிரிக் மன்னர் மிகவும் நல்லவர். மக்கள்' நலமே தன் நலமாக எண்ணி வந்தவர். இரக்கமுடைய அருளாளர். அவரிடம் பணிபுரிந்தவர்கள் அவரைக் கடவுளாகவே எண்ணி மரியாதை காட்டினர்.

ஒரு நாள் மன்னர் தனது அறையில் ஏதோ பணியாக இருந்தார். வெளியே காவல் காத்து வரும் பணியாளனை அழைக்க மணியை அடித்தார். மணியடித்ததும் ஓடோடி வரும் பணியாளன், மன்னர் பலமுறை மணியடித்தும் அன்று என்ன காரணமோ வரவில்லை.

மன்னர் என்னவாயிற்று என்பதை அறிய வெளியே வந்து பார்த்தார். அந்தக் காவல் செய்யும் பணியாளன் தன்னை மறந்த நிலையில் தூங்கிக் கொண்டிருந்தார்! அவனுக்கு என்னவோ நடந்திருக்கிறது என்பதை ஊகித்துக் கொண்டார்.

அந்த நிலையில், பணியாளனின் சட்டைப் பையில் ஒரு கடிதம் வெளியே நீட்டிக் கொண்டிருப்பதை அரசர் கவனித்தார். அதை எடுத்துப் படித்தார். அது அந்தப் பணியாளனின் தாய், வெளியூரிலிருந்து எழுதியிருந்த கடிதம்.

''மகனே, உன் சம்பளம் எவ்வளவு குறைவானது என்பதை அறிவேன். இதில் மாதம் தவறாமல் எனக்கு வேறு அனுப்பி விடுகிறாய். இரண்டு மாதங்களாக நான் நோய்வாய்ப்பட்டு மிகவும் சிரமப்படுகிறேன் என்று கூடுதல் பணம் வேறு அனுப்பியிருந்தாய். இந்தக் கூடுதல் பணத்தை அனுப்ப நீ எவ்வளவு தியாகம் செய்திருக்கிறாய் என்பதை மற்றவர்கள் கூறக் கேட்கும் போது நான் கண்ணீர் வடிக்கிறேன்! நீ ஒரு நாளைக்கு ஒரு வேளைதான் சாப்பிடுகிறாயாமே! இது அடுக்குமா? நான் வயதானவள்! நீ வளர வேண்டிய துளிர். உன்னைப் பட்டினி போட்டுக் கொண்டு எனக்குப்

பணம் அனுப்புவது நியாயமா? மகனே... நீ வயிறாரச் சாப்பிடு. அப்பொழுதுதான் உற்சாகமாக வேலை செய்ய முடியும். அரசரது நன்மதிப்பைப் பெறவும் கூடும். என்னைப் பற்றிக் கவலைப்படாதே!''

கடிதத்தைப் படித்து முடித்ததும் பிரெடிரிக் மன்னரின் கண்களில் நீர் திரண்டது! கடிதத்தை முன்போலவே மடித்து அந்தப் பணியாளனின் சட்டைப் பையில் வைத்தார். அதோடு இரண்டு தங்க நாணயங்களையும் போட்டு விட்டு வந்த சுவடு தெரியாமல் திரும்பினார்.

மன்னன் திரும்பும் போது இன்னொரு பணியாளன் பார்த்து விட்டான். அவன் ஓடோடி வந்து காவல் பணியாளனைத் தட்டி எழுப்பினான்.

''நீ தூங்குவதை மன்னர் பார்த்து விட்டார். உனக்குத் தண்டனை கிடைப்பது நிச்சயம்'' என்று கூறி விட்டுப் போனான்.

பணியாளன் எழுந்து தனது சட்டைப் பையைப் பார்த்தான். அதில் இரண்டு தங்கக் காசுகள் இருப்பது தெரிந்தது. அவன் உடலெல்லாம் நடுங்கியது. உள்ளே வந்து மன்னரின் கால்களில் விழுந்து வணங்கினான்.

''மன்னவா, என்னை மன்னித்து விடுங்கள். நான் தூங்கி விட்டேன். தண்டனை கொடுங்கள்! எழுந்ததும் பார்த்தால் என் சட்டைப் பையில் இந்த இரண்டு பொற்காசுகள் கிடக்கின்றன. இவை என்னுடையது அல்ல,'' என்று பொற்காசுகளை எடுத்து மன்னன் முன் வைத்தான்.


அரசர் அந்தப் பணியாளனைப் பரிவோடு பார்த்தார்.


''தாய்க்காகத் தியாகம் செய்யும் உன் போன்ற பிள்ளைகளைப் பெற்ற இந்த நாடு புண்ணியம் செய்தது. தாயிடம் உனக்குள்ள அன்புக்கும் உன் நேர்மைக்கும் நான் தலைவணங்குகிறேன். காசைப் போட்டவன் நானே. உடனே உன் தாய்க்கு நல்ல சிகிச்சை அளிக்க நீயே அதை எடுத்துக் கொள். இன்றே ஊருக்குக் கிளம்பு. உன் தாய்க்கு வைத்தியம் செய்து, அவளையும் இங்கேயே அழைத்து வந்து விடு. இன்று முதல் உனக்குப் பதவி உயர்வு! நீ தலைமைச் சேவகன் இதுதான் தண்டனை!''

''அரசே!'' என்று கண்ணீர் மல்க நின்றான் பணியாளன்.

- சாலிகா, உடுமலை.

இன்று மட்டும் தீபாவளி...!





பூவாக கொட்டுதுபார் மத்தாப்பு கோலம்
புஸ்வாணம் போகுது பார் வானிலொரு பாலம்
பாவாக பொங்குதுபார் பாம்புவெடி நீளம்
பட்டென்று கேட்குதுபார் பொட்டுவெடி தாளம்!

சாமிபடம் போட்டவெடி சக்கரமாய் சுற்றுதே
சர்ரென்று ராக்கெட்வெடி விண்முகட்டை எட்டுதே
பூமியதிர புல்லட்வெடி திக்குகளை தட்டுதே
புத்தம்புது பட்டாசு வீதியெங்கும் கத்துதே!

இன்றுமட்டும் தீபாவளி கொண்டாட போதுமா
இன்பமான தீபாவளி விட்டுவிட தோணுமா ?
நன்மைதரும் சுற்றுப்புறம் மாசுபட வேணுமா?
நல்லதுதான் இன்றுமட்டும் தீபாவளி போதுமா?

•••••• கதி. கதிர்வேலன், திருப்புத்தூர்



முடி திருத்திய மாதவன்!

ஹரிசிங்

இப்ராஹீம்ஷா உள்ளே வந்து அக்பர் பாதுஷாவை வணங்கினார். பாதுஷா நிமிர்ந்து பார்த்தார்.

''ஒரு தாழ்மையான விண்ணப்பம். நான் கூறுவதைத் தவறாகத் தாங்கள் எண்ணக் கூடாது. தங்களுக்கு தினமும் முடிதிருத்தி வரும் நாவிதர் சக்சேனாவைப் பற்றி ஒரு வார்த்தை.''

பாதுஷாவின் முகத்தில் ஆவல் நிறைந்தது.

''அவர் தீவிரமான இந்து. கிருஷ்ண பக்தியில் ஊறித் திளைப்பவர். ஒவ்வொரு நாளும் அவர் தங்களுக்கு முகம் மழித்து, முடிதிருத்தி முடிக்கும் வரை நாங்களெல்லாம் பதைபதைப்போடு காத்திருக்கிறோம்.''

''ஏன் இப்ராஹீம்?''

''நீங்கள் இந்துஸ்தானமே போற்றும் சர்வ வல்லமை மிக்க மொகலாயப் பேரரசர். முஸ்லீம். ஆனால், சக்சேனாவோ ஒரு தீவிரமான இந்து; கிருஷ்ண பக்தர். ஆயிரம் அரசர்கள் ஒன்று கூடித் திரண்டு படையெடுத்து வந்தாலும் கூட வெற்றி கொள்ள முடியாத உங்கள் வாழ்க்கையை, இந்த அற்ப சச்சேனா எளிதில் முடித்து விடலாம். அவருடைய கையில் கத்தி; உங்கள் கழுத்து!''

பாதுஷா பெரிய நகைச்சுவையைக் கேட்டவர் போல் ஒரேயடியாகச் சிரித்தார்.

'சிரிப்பதோடு சற்றுத் தீவிரமாகச் சிந்தித்தும் பாருங்கள் பாதுஷா. நான் உங்கள் மெய்க்காப்பாளன். என்னுடைய நிலையில் இருந்து இதைப் பாருங்கள்'— இப்ராஹீம் மீண்டும் பணிவோடு கேட்டுக் கொண்டார்.

''இப்ராஹீம், நீங்கள் பயப்படுவது பைத்தியக்காரத்தனம் என்று நான் கூறவில்லை. ஆனால், சக்சேனா விஷயத்தில் இப்படி அஞ்சத் தேவையே இல்லை.''

அக்பர் சிறிது நிறுத்தி யோசித்து விட்டு மறுபடி தொடர்ந்தார்.

''உலக மக்கள் அனைவரையும் கிருஷ்ணனாகவே காணும் உயர்ந்த உள்ளம் கொண்டவர் சக்சேனா. கத்திக்குச் சாணை பிடிக்கும் சேணப் பக்கிரி, பழம் விற்கும் முக்தாம்பாள், குதிரைக் கொட்டடி கரீம், வாயில் காக்கும் சலீம், பாதுஷாவின் மெய்க்காப்பாளரான இந்த இப்ராஹீம்ஷா, இந்துஸ்தானத்தின் சர்வ வல்லமை பொருந்திய மொகலாயப் பேரரசரான இந்த அக்பர் பாதுஷா ஆகிய அனைவருமே அவருக்கு ஒன்றுதான்! வேறுபாடு காண முடியாத உயர்ந்த உள்ளம். எல்லோரையும் அவர் 'கிருஷ்ணா' என்றுதான் அழைக்கிறார்! எவ்வளவு மனவளர்ச்சியும் பக்தியும் இருந்தால் என்னைக் கூட அவர் 'கிருஷ்ணா' என்று அழைப்பார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்? இப்படிப்பட்ட ஒரு எளிய பக்தரையா ஆபத்தானவர் என்று கற்பனை செய்து நீங்கள் கலங்குகிறீர்கள்! ஒருவேளை சக்சேனா என் கழுத்தைத் தன் சவரக் கத்தியால் அறுத்து விட்டால், உலகம் மூழ்கி விடப் போகிறது என்று பொருள். அவர் ஜாதி, மதம், மொழி எல்லாம் கடந்த ஞானி.''

அதற்கு மேல் வாதாட விரும்பாது

இப்ராஹீம்ஷா பாதுஷாவை வணங்கி விடைபெற்றார்.

வழக்கம் போல் கக்கத்தில் பெட்டியை இடுக்கிக் கொண்டு பாதுஷாவை வணங்கினார் சக்சேனா. பாதுஷா தரையில் அமர்ந்து கொள்ள, கண்ணாடியை எடுத்து அவரிடம் கொடுத்து விட்டு, கத்தியைத் தீட்ட ஆரம்பித்தார் சக்சேனா.

சக்சேனாவிடம் பெரிய மாற்றம் இருப்பதை அக்பர் உணர்ந்தார். இத்தற்குள் அவர் நூறு முறை ''கிருஷ்ணா''வை அழைத்து, ''போலோ நந்தலாலா'' என்று பஜன் பாடிக் களித்திருப்பார். அப்படி வாய்க்கு ஓய்வே தராத அவர், அன்றைக்கு வாயைத் திறக்காது மௌனமாகத் தன் தொழிலைச் செய்வதில் முனைந்தது அக்பருக்கு அதிசயமாக இருந்தது.

''சக்சேனா! என்ன ஆச்சு உங்களுக்கு? நீங்கள் இப்படி மௌனமாக இருப்பது என்னை வதைக்கிறது!'' என்றார் பாதுஷா.

சக்சேனாவின் கண்களில் நீர் திரையிட்டது.

''உங்களுக்கு மட்டுமா? எனக்கும் வதையாக இருக்கிறது பாதுஷா. அதோடு பயமாகவும் இருக்கிறது. இது நாள் வரை நான் எல்லோரையும் கண்ணனாகவே எண்ணி வந்திருக்கிறேன். பாதுஷாவைக் கூட நான் கிருஷ்ணனாகவே எண்ணி அழைத்து வந்திருக்கிறேன். இப்ராஹீம்ஷா அவர்களின் பேச்சு எனக்கும் கேட்டது. என்னுடைய எண்ணமும், செய்யும் செயலும் கிருஷ்ணனுடையதாவே இருக்க வேண்டும் என்றுதான் நொடிக்கு நூறு தரம் கிருஷ்ணனைத் துணைக்கு அழைத்து வந்தேன். தங்கள் மெய்க்காப்பாளரின் பேச்சைக் கேட்ட பிறகு எனக்கு ஒரு பயம் வந்து விட்டது பாதுஷா! என்னை அறியாது என் கத்தி தவறி, ஏதாவது விபரீதம் ஏற்பட்டு விடுமோ என்று பயப்படுகிறேன்! எனக்கும் உங்களுக்கும் இடையே உள்ள அன்புக்கு ஜாதி வண்ணம் பூசிப் பெரிதுபடுத்தி விடுவார்களோ என்று பயப்படுகிறேன்.''

''சக்சேனா, இப்ராஹீம்ஷா கூறியதை மட்டும்தான் நீங்கள் கேட்டீர்களா? அதற்கு நான் பதிலளித்ததை நீங்கள் கேட்கவில்லை?''

''கேட்டேன் பாதுஷா. என் மேல் நீங்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு ஏற்ப நான் கடைசி வரை நடந்து கொள்ள வேண்டுமே என்றுதான் பயமாக இருக்கிறது. கத்தியை எடுக்கும்போதே கை நடுங்குகிறது பாதுஷா!'' என்று அழுதார் சக்சேனா.

பாதுஷா அன்போடு சக்சேனாவைத் தடவிக் கொடுத்தார்.

''சக்சேனா, கிருஷ்ணனைத் தரிசிக்க நீங்கள் எனக்கு வழிகாட்டப் போகிறீர்கள் என்று பெரிதும் நம்பிக் கொண்டிருக்கிறேன்! இப்படிச் சிறு குழந்தையைப் போல் கலங்கித் தவிக்காதீர்கள்.''

சிறிது நேரத்திற்குள்ளேயே சக்சேனா தன் நிலையை அடைந்து விட்டார். ''போலோ நந்தலாலா'' சத்தம் விதம் விதமான ராகங்களில் கேட்டது. இடையிடையே, ''கிருஷ்ணா இப்படி



அசக்கினா நான் என்ன செய்வேன்?'' என்று பாதுஷாவைக் கண்ணனாக்கி அதட்டுவதும் கேட்டது! பாதுஷா சிரித்துக் கொண்டார்.

அன்று என்ன காரணமோ தெரியவில்லை. உடல் அசதியும் காய்ச்சலும் சேர்ந்து சக்சேனாவை நெடு நேரம் தூங்க வைத்து விட்டன! பதறிக் கொண்டு எழுந்தார். குளித்து விட்டு அவசரம் அவசரமாகப் பூஜைக்கு அமர்ந்தார்.

''இன்னுமா சக்சேனா வரவில்லை! போய்க் கையோடு அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டார் பாதுஷா. சேவகர்கள் விரைந்தனர்.

''இதோ நானே வந்து விட்டேன் கிருஷ்ணா. உடம்பு அசதி தாங்காது தூங்கி விட்டேன் கிருஷ்ணா'' என்று பெட்டியோடு உள்ளே வந்தார் சக்சேனா.

''இன்றைக்கு மகாராணிக்குப் பிறந்த நாள். விருந்துக்கு வருவதாகக் கூறியிருந்தேன். இன்றைக்குப் பார்த்து தாமதமாக வந்து நிற்கிறீர்களே சக்சேனா! உம் சீக்கிரம்'' என்று அவசரப் படுத்தினார் பாதுஷா.

''இதோ!'' என்று தொடங்கினார் சக்சேனா. ''போலோ நந்தலாலா'' துரித



கதியில் கேட்டது. ''நீ இன்றைக்கு முடி திருத்துவதே தெரியவில்லையே சக்சேனா! தைலம் என்ன இவ்வளவு வாசனையாக இருக்கிறது! வலது கை சுண்டு விரல் நுனியைச் சுற்றிலும் என்ன வடு? புதுமையாக இருக்கிறதே!'' என்று பாதுஷா வியந்து சொன்னது கேட்டது!

''பூஜையை முடித்து விட்டு நொடியில் வருகிறேன்'' என்று சேவகர்களிடம் கெஞ்சினார் சக்சேனா. அவர்கள் அதை அனுமதிக்காது இரும்புப் பிடி போட்டு இழுத்து வந்தனர். ''பாதுஷா கோபத்தில் இருக்கிறார். இன்று உம் தலை உருளப் போகிறது'' என்று உள்ளே தள்ளினர் முரட்டுத்தனமாக.

கையில் பெட்டியை இடுக்கிக் கொண்டு நடுங்கியபடி நிற்கும் சக்சேனாவை வியப்போடு பார்த்தார் பாதுஷா.

''சக்சேனா! இப்பொழுதுதானே முடிதிருத்தி விட்டுப் போனீர்கள்!''

சக்சேனா வியப்போடு பாதுஷாவை நோக்கினார். அழகாக முடிதிருத்தப் பட்ட முகம்!

''கிருஷ்ணா! நான் இப்பொழுது தானே தாமதமாகி விட்டது என்று பதறிக் கொண்டு வருகிறேன்! பூஜையைக் கூட முடிக்க விடாமல் உங்கள் சேவகர்கள் இப்பொழுதானே இழுத்து வந்திருக்கிறார்கள்!''

''அப்படியானால் வந்தது யார்? எனக்கு முடிதிருத்தித் தைலம் பூசியது யார்?''

பாதுஷா அக்பர் அங்குமிங்கும் பரபரப்போடு ஓடினார். சட்டென்று ஏதோ தோன்றியது. சக்சேனாவின் வலது கை சுண்டு விரலைப் பார்த்தார். விரல் நுனியில் வடு ஏதும் இல்லை!


''பாதுஷா அவர்களே, வந்தது கிருஷ்ணனேதான்! சக்கரம் தாங்கிய அடையாளம்தான் அந்த சுண்டு விரல் கறுப்பு. பாதுஷாவின் கோபத்திலிருந்து என்னைத் தப்ப வைக்கத்தானே என் வடிவில் வந்திருக்கிறான்!'' என்று விம்மினார் சக்சேனா.

''ஐயோ! மாதவனையா முடிதிருத்த வைத்தேன்?'' என்று அழுது புலம்பினார் பாதுஷா.

''நீங்கள் அதற்குத் தகுதியானவர் தான் பாதுஷா'' என்று அவரைத் தேற்றினார் சக்சேனா.

'ஐன் ஈ அக்பர்' போன்ற பல தகவல் தொகுப்பு நூல்களும், கர்ண பரம்பரைக் கதைகளும் அக்பரின் சமய வேறுபாடற்ற இதுபோன்ற பெருமைகளை விளக்குகின்றன.





கடிப்பது எந்தக் கொசு?

திருமணத்திற்கு வந்திருந்த உறவினர் கூட்டம் அந்தப் பெரிய கூடத்தில் படுத்திருந்தது. சிலர் கொசுக்கடி தாங்காது அவதிப்பட்டனர். சிலர் குறட்டை விட்டுச் சத்திரத்தையே அதிர வைத்துக் கொண்டிருந்தனர்.

இடது கையால் வலது கையில் 'பட்' டென்று அடித்துக் கொண்ட ரங்கம்மா ''என்ன பாழாய்ப் போன கொசு! இப்படிக் கடித்துக் குதறுதே சனியன்!'' என்று அலுத்துக் கொண்டே எழுந்து உட்கார்ந்தாள்.

அருகே படுத்திருந்த அவள் கணவன் ரங்கப்பா, எந்தக் கொசுக்கடியும் தெரியாது, வாயைப் பிளந்து ஆனந்தமாகக் குறட்டை விட்டு உறங்கிக் கொண்டிருந்தார்!

அவருடைய நிம்மதியான உறக்கத்தைப் பார்த்து ரங்கம்மாவுக்குப் பொறாமையாகக் கூட இருந்தது. ஆத்திரமாகவும் வந்தது! 'என்ன மனிதர் இவர்! இப்படி கொசுக்கடி கூட உறைக்காது இந்த மாதிரி தூங்குகிறாரே!' என்று தனக்குள்ளேயே புழுங்கிக் கொண்டாள்.

பொழுது புலர்ந்தது. கொசுக்கடியால் தூக்கமின்றி அவதிப்பட்டதோடு, ரங்கம்மாவின் முகம் முழுவதும் கொசுக்கடி ரணங்கள்!

''இன்னிக்கி ராத்திரி நான் இங்கே இருந்தால் இந்தக் கொசுக்களெல்லாம் என்னை உயிரோடு கடித்துத் தின்று விடும்! எனக்குத் தாங்காது!'' என்று எரிச்சல் தாங்காது அரற்றினாள் ரங்கம்மா.

''அதென்ன இப்படிச் சொல்றே ரங்கம்மா! ராத்திரி துளிக்கூடக் கொசு இல்லையே! என்னமா தூக்கம் வந்தது தெரியுமா? பொழுது விடிஞ்சதே தெரியலையே?'' என்றான் ரங்கப்பன்.

''நான் என்ன பொய்யா சொல்றேன்? என் முகத்தைப் பாருங்க. என்ன கடி கடிச்சிருக்கு! அதென்னமோ எதுவுமே உறைக்காம நீங்க எப்படித்தான் குறட்டை வேற விட்டுக்கிட்டுத் தூங்கினீங்களோ? ஒருவேளை உங்க குறட்டை சப்தத்துக்குப் பயந்துதான் கொசுக்கள் உங்களைத் தொடாது என்னையே கடிச்சதுங்களோ என்னவோ?'' என்று தன் மன எரிச்சலைக் கொட்டினாள் ரங்கம்மா.

மொட்டை மாடியில் உடைந்த பானையின் அடிப்பாகத்தில் தேங்கியிருந்த நீரைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்த பெண் கொசுவை ஆண் கொசு வெறுப்போடு பார்த்தது.

''உனக்கு இந்த ஓரவஞ்சனை கூடவே கூடாது. கடிச்சு இரத்தம் குடிக்கும் உனக்கு, யார் உடம்பா இருந்தா என்ன வந்தது? அந்த அம்மாவை மட்டும் கடிச்சு இரத்தம் குடிச்சுட்டு, அந்த ஐயாவை இப்படி எதுவுமே கடிக்காம விட்டிருக்கியே...! இது பாவம் இல்லையா? எல்லா மனிதர்களும் நமக்கு ஒன்றுதானே?'' என்று கேட்டது ஆண் கொசு.

''உங்களுக்கு என்ன? தத்துவமா சொல்லிட்டுப் போய்டுவீங்க! பூக்களில் இருக்கிற தேனையும், தேனைச் சுமந்து வரும் தேன் எறும்புகளை வழிமறிச்சும் உங்களுக்கு வேண்டிய உணவை எளிதா எடுத்துக்கறீங்க. ஆனால், என்னைப் போன்ற பெண் கொசுக்களால் அப்படி இருக்க முடியாதே? மனித இரத்தம் தானே எங்கள் உணவு? முட்டையிட

ரேவதி



''அரசு உன் பேரை இங்கிலீஸ்ல சொல்லு...!''

''கவர்ன்மெண்ட் சார்...!''

– ஏ. வி. இளங்கோ.

வும், உணவுக்காகவும் நாங்க மனிதர்களைத் தேடி அலையோ அலைன்னு அலைந்து பறக்கிற துன்பம் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கணவனை வசைபாடியது பெண் கொசு.

''கடிச்சா எல்லாரையும் சமமாக் கடிக்கணும். சிலரை மட்டும் கடிக்கிறது, இன்னும் சிலரை விட்டுடறது போன்ற பாகுபாடு ஏன்னுதான் கேட்கிறேன். நான் கேட்டதற்கு சரியான பதில் சொல்லாம என்னென்னவோ பேசறியே?'' என்று கேட்டது ஆண் கொசு.

''எங்களுக்கு சிலரைக் கண்டால் தான் பிடிக்கும். அவர்களுடைய உடலின் ஈரப்பதம், கதகதப்பு, வியர்வையில் உள்ள வாடை இதையெல்லாம் பொறுத்துத்தான் நாங்க மனிதர்களைத் தேர்ந்தெடுக்கிறோம். இப்போ கடிச்சேனே... இந்த ரங்கம்மா, இவங்களை ரொம்ப எனக்குப் புடிச்சுது! அதனால கடிச்சேன். நான் மட்டுமில்லே... என் போன்ற பல பெண் கொசுக்களுக்கும் அந்த அம்மாவைத்தான் ரொம்பப் புடிச்சிருந்தது. அந்த ஐயா ரங்கப்பனை யாருக்குமே புடிக்கலே. அதனால, அவர் 'ஒரு கொசு கூட என்னைக் கடிக்கலியே...! இங்கே போய் கொசு இருக்குன்னு சொல்றதே அநியாயம்னு சொல்லி எல்லோருடைய எரிச்சலையும் வாங்கிக்கிறார்'' என்றது பெண் கொசு.

மேல்நிலைத் தொட்டியில் வசித்து வந்த பெண் கொசுப் பட்டாளம், சட்டிக் கொசுவைத் தேடி வந்து இறங்கியது. அவை பகல் கொசுக்கள்.

''என்ன அக்கா, நேத்து ராத்திரி நல்ல விருந்தா?''

''அந்த வயித்தெரிச்சலை ஏன் கேட்கிறே? விளக்கை வேற அணைச்சுட்டாங்களா? எனக்குத்தான் இருட்டில் கண் தெரியாதே... எப்படியோ மூச்சு விடும் காற்றில் உள்ள கரியமில வாயுவைக் குறியாக வைத்துக் கொண்டு மோப்பம் பிடித்துப் பறந்து போனேன். ரங்கம்மான்னு ஒரு பெண்மணி. அவள் இரத்தம் என்னமா சுவையா இருந்தது தெரியுமா?'' என்று வியந்தது குட்டிக் கொசு.

''அப்போ ஒரு புடி புடிச்சேன்னு சொல்லுங்க.''

''அதுதான் இல்லே! நம்ம இனத்தைச் சேர்ந்த அத்தனை பெண் கொசுக்களும் என்னை மாதிரியே ரங்கம்மாவையே வந்து மொய்த்துக் கொண்டன! தாங்க முடியுமா அந்த அம்மாவால்?''

''அப்புறம்?''

''நான் மெதுவா எனது மூக்குப் பகுதிக் கண்களுக்கு அடியில் மடித்து வைத்திருந்த ஆறு ஊசிக் கருவிகளையும் கொண்டு மிக மிக மெதுவாக அந்த அம்மாவின் கையில் குத்தினேன். எச்சிலைக் கொட்டி இரத்தம் உறையாம பார்த்துக்கிட்டேன். உறிஞ்சு குழாய்ல இரத்தத்தை உறிஞ்ச ஆரம்பிச்சேன். நமக்குத்தான் ஒரு நிமிஷம் போதுமே நம்ம வயிறை நிரப்பிக்க. அதுக்குள்ள அந்தம்மா முழிச்சுக்கிட்டு இன்னொரு கையை விரிச்சு அடிச்சாங்க. அவங்க கட்ட விரலுக்கு இடையே புகுந்து உயிர் தப்பி வரதே பெரும்பாடாப் போச்சு.''

''அட பாவமே! அப்புறம்?'' என்று ஆர்வமாகக் கேட்டது தொட்டிக் கொசு

''அந்தம்மா மின்சார விசிறிக் கடியில போய்ப் படுத்துக்கிட்டாங்க. அனுபவமில்லாத நம்ம கொசுங்கல்ல பாதிக்கு மேல பின்வாங்கிக்கிட்டாங்க. நான் விடலே. மின் விசிறிக் காத்தோட வேகத்துக்கு எப்படி ஈடுகொடுக்கறதுன்னு பறந்து பார்த்தேன். ஈடு கொடுத்து, காற்றுக்கு நடுவிலேயே நிக்க முடிஞ்சது! அப்புறம் அந்த வேகம் பழகிப் போச்சு. அங்கிருந்தபடி அந்தக் காற்றுக்கு நடுவிலேயே வட்டமிட்டுக் காட்டினேன்! தலைகுப்புற விழுந்து குட்டிக்கரணம் போட்டுக் காட்டினேன்!

நம்ம ஆட்களில் பல பேர் அப்படியே திகைச்சு நின்னுட்டாங்க. அப்புறம் என்ன, அந்தம்மாவின் வலது கையில் உட்கார்ந்து துளை போட்டு, ஒரு நிமிஷத்துல இரத்தம் குடிச்சு வயிறை நிரப்பிக்கிட்டேன். இப்ப முட்டையிட இது போதும்'' என்றது சட்டிப் பெண் கொசு.

''எங்க அக்கா முட்டையிடப் போறீங்க?''

''நான் இருக்கிற சட்டியில கொஞ்சம்தான் நீர் இருக்கு. அதோட அது நாளுக்கு நாள் வற்றிக்கிட்டே வரது. அதனால தெரு முனையில் இருக்கிற குட்டையில இடலாம்னு நினைச்சுக்கிட்டிருக்கேன்.''

''அந்தக் குட்டையைக் கூடத் தூற்று விடப் போறாங்களாம்.''

''நல்லா தூற்றட்டுமே! நாம்ப அதுக்கு பயப்படத் தேவையே இல்லே. கொசுவான பிறகு, நமக்கு ஆயுள் இரண்டே மாதம்தான். ஆனால், நாம் இடும் முட்டைகளுக்கு, ஐந்து ஆண்டுகள் வரை உயிர் இருக்கும். ஐந்து ஆண்டுகளுக்குள் ஒரு மழை பெய்தால் கூடப் போதும். நமது முட்டைகள் பொரிந்து விடும்!''

''சரி அக்கா, நாங்களும் அந்தக் குட்டையிலேயே முட்டையிடறோம். எங்களுக்கு ஏதாவது உணவு கிடைக்குமான்னு பார்க்கிறோம். எங்களை மாதிரி பகல் கொசுக்களை விட, உங்களைப் போல் இராக் கொசுவாக இருப்பது எவ்வளவோ வசதியானது'' என்று சத்திரத்திற்குள் பறந்து சென்றன தொட்டிப் பெண் கொசுப் பட்டாளம்.

முகூர்த்த நேரம். மாப்பிள்ளையையும் பெண்ணையும் ஊஞ்சலில் உட்கார வைத்திருந்தார்கள். ஏகக் கூட்டம், ஒரே புழுக்கம், நசநசப்பு.

''நமக்கு வேட்டையாடப் பொருத்தமான சூழ்நிலை. சட்டி அக்கா குறிப்பிட்டது மூன்றாவது நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் அந்தப் பெண்மணி



தானே?'' என்று தன் சிநேகிதியிடம் கேட்டது ஒரு பெண் கொசு.

''ஆமாம். அடையாளமெல்லாம் சரியா இருக்கு. இந்த அம்மா தலைக்குக் குளிக்கலே போல இருக்கு. வியர்வை நாறுது தலையில்! நமக்கு வசதிதான். நாம்ப கழுத்துப் பக்கமே கடிப்போம். உனக்கு இடது பக்கம், எனக்கு வலது பக்கம்'' என்று இறங்கியது சிநேகிதிக் கொசு.

மகிழ்ச்சிப் பெருக்கால் சில கத்துக்குட்டிக் கொசுக்கள் சிறகடித்து 'கொய்ங்' என்று ரீங்காரம் செய்து ரங்கம்மாவை வட்டமிட்டுக் கழுத்தில் அமர்ந்தன.

காசு மாலையும், வைரத்தோடும் போட்டுக் கொண்டிருந்த ஒரு பெண் மணி பாடினாள்.

''என்ன சனியன்! பகலிலேயே இப்படிப் பாடித் தொலைக்கிறதே இந்தப் பீடைகள்!'' என்று அலுத்துக் கொண்டாள் ரங்கம்மா.

''யாரைப் பார்த்து சனியன், பீடைன்னு சொன்னே?'' என்று காசுமாலை பாய்ந்து வர, ''என் மனைவி பாடுவதை எப்படி நீங்கள் கேவலப்படுத்தலாம்?'' என்று காசு மாலையின் கணவனும் மனைவிக்காகப் பரிந்து வர அங்கே ஒரு கலவரப்பகுதி உருவானது.

''நாம்ப வேற இடத்தைப் பார்க்க வேண்டியதுதான்!'' என்று கொசுக்கள் நகர்ந்தன!

அறிவியல் உண்மைகள்

★ மனிதனைக் கடிப்பது பெண் கொசுவே. முட்டையிட அதற்கு இரத்தம் தேவை. இரத்தமே அதன் உணவும் கூட. சிலரை மட்டுமே இவைகளுக்குக் கடிக்கப் பிடிக்கும்!

★ ஆண் கொசு தேனை விரும்பி உண்ணும்.

★ இரவுக் கொசுக்களுக்குக் கண் தெரியாது. மோப்ப சக்தியாலேயே அது மனிதனைக் கண்டுபிடிக்கும்.

★ காற்றின் வேகத்திற்கு ஏற்ப இவை தம்மைப் பழக்கிக் கொள்ளும்.

★ ரீங்காரம் செய்யும் போது கொசு வினாடிக்கு 250 முதல் 600 முறைகள் சிறகை அசைக்கின்றன. இதுவே கொசு பாடும் பாட்டு!

★ ஆறு வகைப் பணிகளைச் செய்யும் கொசுவின் ஆறு உணர்வு ஊசிகளும், அவை பாதுகாப்பாக மடித்து வைக்கும் விதமும், வேலை செய்வதும் இயற்கையின் பெரிய வித்தை!

★ ஒரு சொட்டு இரத்தத்தில் 40 முதல் 50 கொசுக்கள் வரை வயிறை நிரப்பிக் கொள்ளும். இதை உறிஞ்ச ஒரு நிமிஷம் கூட ஆகாது!

★ முட்டைகள் பொரிய, நீர் தேவை. ஐந்து ஆண்டுகள் வரை கூட நீருக்காக இவை உயிருடன் இருக்கும்!


★ கொசு நிலைக்கு வந்த பிறகு கொசுவின் ஆயுள் இரண்டு மாதங்களே! இதற்குள் இவை 5 தலைமுறைகளை உருவாக்கி விடும். ஒருமுறைக்கு 40 முதல் 400 முட்டைகள் இடும்!

★ கொசு இல்லாத நாடே உலகில் இல்லை! இவை ஏராளமான நோய்களைப் பரப்புகின்றன.

''ஏய் பாபு! உலக அதிசயங்கள் ஏழில் ஆறை கோபு சொல்லிட்டான். ஏழாவது என்ன சொல்லு...!''

''அந்த ஆறையும் கோபு சரியாய்ச் சொல்லிட்டானே... அதுதான் ஏழாவது அதிசயம்.''





''பாக்ஸிங் பக்கிரிக்கும் நாக்அவுட் மன்னன் நாகுவுக்கும் குத்துச் சண்டை நடந்ததே முடிவு என்ன?

''நாக் அவுட் மன்னனின் நாக்கு அவுட்!''

– ச. காணிக்கைராஜ்.

பிருந்தாவனக் கவியரங்கம்



கிளியைப் பார்!

எங்கள் வீட்டுக் கிளியைப் பார்;
எடுத்து அதையே கொஞ்சிப் பார்;
பறந்து மேலே செல்லுது பார்;
பாங்காய்ப் பழத்தை உண்ணுது பார்!

பச்சை நிறமாம் உடம்பைப் பார்;
பறந்து ஓடி மறையுது பார்;
சிவந்த மூக்கின் அழகைப் பார்;
சிறகை விரித்துப் பறப்பதைப் பார்!

அக்கா என்றே அழைக்குது பார்;
அச்சம் இன்றி அமருது பார்;
கோவில் கோபுரம் தாண்டுது பார்;
கோபம் வந்தால் கொத்துது பார்.

– எல். பத்மாவதி.



மேலோர் வார்த்தையைத் தட்டாதே




நாயைக் கல்லால் அடிக்காதே!
நகத்தைப் பல்லால் கடிக்காதே!
நோயை உடலில் சேர்க்காதே!
நொந்தவர்க் குதவிடத் தயங்காதே!

தாயை என்றும் மறவாதே!
தந்தை சொல்லை மீறாதே!
வாயைச் சும்மா மெல்லாதே!
வம்பை விலைக்கு வாங்காதே!



செய்யும் நன்றியை மறக்காதே!
சேட்டைகள் வீணாய்ச் செய்யாதே!
மெய்யைப் பொய்யால் மறைக்காதே!
மேலோர் வார்த்தையைத் தட்டாதே!

– ஜி. கே. அருண்பிரசாத்.





கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர். கு. கணேசன்

★ எஸ். மனோகரன், சங்கமங்கலம்.

கக்குவான் இருமல் ஒரு தொற்று வியாதியா, டாக்டர்? இதை வருமுன் காப்பது எப்படி? வந்தபின் காப்பது எப்படி?

கக்குவான் இருமல் ஒரு தொற்று நோயே! இதைத் தவிர்க்க குழந்தைப் பருவத்திலேயே 'டிரிபிள் ஆன்டிஜென்' (TRIPLE ANTIGEN) என்ற முத் தடுப்பு ஊசியைப் போட்டுக் கொள்ள வேண்டும். அதாவது குழந்தை பிறந்த $1\frac{1}{2}$, $2\frac{1}{2}$, $3\frac{1}{2}$ மாதங்களிலும், $1\frac{1}{2}$, 3, 5 வயதிலும் மேற்சொன்ன முத்தடுப்பு ஊசியை முறையாகப் போட்டுக் கொண்டால் கக்குவான் இருமலை முற்றிலும் தவிர்த்து விடலாம்! துரதிர்ஷ்டவசமாக யாருக்கேனும் கக்குவான் இருமல் வந்துவிட்டால், நோயின் ஆரம்பக் கட்டத்திலேயே மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். தகுந்த நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகள் மூலமும், சுத்தம், சுகாதாரம், சத்துணவு இவை மூன்றையும் நோயாளிக்குக் கிடைக்கச் செய்வதன் மூலமும் கக்குவான் இருமலைக் குணப்படுத்த இயலும்!

★ கு. சுவாமிநாதன், தஞ்சாவூர்.

சிறு வயதில் காது குத்தும் போது துளை பெரிதாகி, எவ்வளவு வயதானாலும் அத் துளை சிலருக்கு மறைவதில்லையே! அதை எவ்வாறு சரி செய்வது டாக்டர்?

சிறிய, எளிய அறுவை சிகிச்சை மூலம் இக் குறையை முற்றிலும் சரி செய்து விடலாம், தம்பி! தகுதி வாய்ந்த அறுவை சிகிச்சை நிபுணரிடம் சென்று காண்பியுங்கள். பலன் கிடைக்கும்.

★ தா. ஷேக் உசேன், செஞ்சி - 2.

இளைப்பு எதனால் வருகிறது, டாக்டர்?

ஆஸ்த்துமா எனும் நோயில் இளைப்பு வரும்; சுவாசப்பைக் கோளாறுகளின் போதும் இளைப்பு வரும்; இதய வால்வுகளில் கோளாறுகள் இருக்கும் போதும், இதயம் சரிவர இயங்காத நிலையிலும் இளைப்பு வரும்; இரத்த சோகை நோயின் போதும் இளைப்பு வரும். நீரிழிவு, சிறுநீரகக் கோளாறுகள் போன்றவை முற்றிய நிலையில் இருக்கும் போதும் இளைப்பு வரும்! ஒருவருக்கு இளைப்பு வந்தால் எந்த நோயின்




காரணமாக இளைப்பு வருகிறது எனக் கண்டறிந்து மருத்துவம் பெற வேண்டியது அவசியம்!

★ எஸ். ப்ரதீப், பாண்டமங்கலம்.
சி. யூ. சிவசுந்தரம், சென்னை - 85.

விளையாடி விட்டு வியர்வையுடன் குளிர்பானம் குடித்தால் சளி பிடித்துக் கொள்ளும் என்கிறார்களே, டாக்டர்! இது உண்மையா?

உண்மையில்லை, தம்பிகளே! சளி பிடிப்பதற்கும் வியர்வையுடன் குளிர் பானம் குடிப்பதற்கும் எத் தொடர்பும் இல்லை!

★ கே. சோம சேகர், காவேரிப் பட்டணம்.




தொடை இடுக்குகளில் அடிக்கடி எரிச்சல் ஏற்படக் காரணம் என்ன? அதை நீக்க வழி கூறுங்கள், டாக்டர்!

தொடை இடுக்குகளில் அதிகமாக வியர்வை உண்டாவதால், அக் குளிர்ச்சியான சூழ்நிலையில் 'ஃபங்கஸ்' (FUNGUS) எனும் காளான் நோய்க் கிருமிகள் நன்கு வளர்கின்றன. அவை தொடை இடுக்குகளைப் பாதித்து எரிச்சலை உண்டாக்குகின்றன. இதைத் தவிர்க்க தொடை இடுக்குகளை எப்போதும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அடிக்கடி துடைத்து, வியர்வை தங்குவதைத் தவிர்க்க வேண்டும். சுத்தமான உள்ளாடைகளை அணிய வேண்டும். எரிச்சல் அதிகமாக இருந்தால் மருத்துவர் ஆலோசனையின் பேரில் காளான் கொல்லிக் களிம்புகளை தொடை இடுக்குகளில் தடவலாம்!

★ ஜி. கே. கண்ணன், முத்துராமலிங்கபுரம்.

எக்ஸ்ரே-ஸ்கேனர் இரண்டுக்குமுள்ள வேறுபாடு என்ன, டாக்டர்?

நல்ல கேள்வி கண்ணா! சமீபத்திய மருத்துவக் கண்டுபிடிப்புகளில் அரிய பல சாதனைகளை நிகழ்த்தி வருவது 'ஹௌன்ஸ்பீல்ட்' கண்டுபிடித்த 'ஸ்கேனர்' (SCANNER) எனும் கருவிதான்! இதற்கும் ராண்ட்ஜன் கண்டுபிடித்த எக்ஸ்-ரேக்கும் பல வித்தியாசங்கள் இருப்பதும் உண்மைதான். எல்லாவற்றையும் இங்கே குறிப்பிட முடியாவிட்டாலும், முக்கியமான சிலவற்றை மட்டும் உனக்குக் கூறுகிறேன். நம் உடம்பிலுள்ள எலும்புகளின் நிலை பற்றியும், நுரையீரல், இரைப்பை, இதயம், சிறுநீரகம், கல்லீரல் போன்ற மிகச் சில உறுப்புகளின் மேலோட்டமான நிலை பற்றியும் முன்பின் பிம்பமாகவோ, பக்கவாட்டு பிம்பமாகவோ எக்ஸ்ரே படம் பிடித்துக் காட்டும். உடம்பிலுள்ள எல்லா உறுப்புகளையும் எக்ஸ்ரேயினால் கண்டறிய இயலவில்லை! ஆனால், ஸ்கேனர் உடம்பிலுள்ள அனைத்து உறுப்புகளையும் படம் பிடித்துக் காட்டுகிறது. மேலிருந்து கீழோ, பக்கவாட்டிலோ, குறுக்காகவோ எந்தக் கோணத்தில் வேண்டுமென்றாலும் நம் வசதிக்கேற்ப ஸ்கேனர் படம் பிடிக்கும். உடம்பில் எந்த மூலையில் எந்த நோய் இருந்தாலும் கண்டறிந்து விடும்! இது தவிர எக்ஸ்ரேயில் படம் எடுத்த பிறகு அதற்கென உரிய கரைசலில் கழுவிய பிறகே படம் நமக்குத் தெரியும். ஆனால், ஸ்கேனரில் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள கம்ப்யூட்டர் திரையில் நாம் பார்க்க வேண்டிய உறுப்பின் பிம்பத்தை உடனுக்குடன் வீடியோ படம் பார்த்த மாதிரி மிகத் தெளிவாகப் பார்க்க இயலும்! எனவேதான், மருத்துவர்கள் நோயைக் கண்டறிய இப்போதெல்லாம் எக்ஸ்ரேயை விட ஸ்கேனரையே அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள்!



கட்டுப்பாடு

கோவையில் விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த ராஜாவிடமிருந்து கடிதம் வந்திருந்தது.

''எனக்கு விடுதி பிடிக்கவில்லை. உடனே அழைத்துப் போகவும்'' என்று எழுதியிருந்தான்.

அப்பா பதறிக் கொண்டு போனார். அழைத்து வந்தார். வீட்டுக்கு வந்த பிறகு அப்பா கேட்டார்.

''உனக்கு விடுதியில் அப்படி என்ன கஷ்டம்? அந்தப் பள்ளியில் இடம் கிடைத்தாலும் விடுதியில் இடம் கிடைப்பது எவ்வளவு கஷ்டம் தெரியுமா?''

''நீங்கதான் மெச்சிக்கணும். மாலை ஆறு மணியிலிருந்து ஏழரை மணி வரை படிச்சாகணுமாம்! ஏழரையிலிருந்து எட்டு மணிக்குள் சாப்பிட்டாகணுமாம்! அட, இதெல்லாம் போகட்டும்னா, காலையில் ஐந்தாவது மணிக்கு எழுந்தாகணும், இல்லேன்னா தண்டனைங்கறாங்க! நினைச்சப்போ சினிமாவுக்குப் போகக் கூடாதாம்! டி.வி. பார்க்க முடியாதாம்! இது ஒரு வாழ்க்கையா! எனக்கு வேண்டவே வேண்டாம்'' - உறுதியோடு கூறினான் ராஜா.

விடுதியில் உள்ள கட்டுப்பாடு ராஜாவுக்குப் பிடிக்கவில்லை. இஷ்டப்படி வளர்ந்தவன் இல்லையா? அதுதான் காரணம்.

''எனக்கு என்னவோ நீ செஞ்சது சரின்னு தோணலே ராஜா. மறுபடியும் யோசித்துப் பார்'' என்று கூறினார் அப்பா. யாரையும் கண்டித்துப் பேசி அறியாதவர் அவர்.

அன்று மாலை. பழைய நண்பர்களைப் பார்த்து விட்டு வரக் கிளம்பி





''பஞ்சநாதன் சுத்த அல்பம்''
''எப்படிச் சொல்றே?''
''ஒரு பல்பம் கேட்டேன். இல்லேன்னுட்டான்!''

- செவல்குளம் 'ஆச்சா'.



''ஹோட்டல் நடத்திட்டு இருந்த வரை உங்க ஆபீஸ் மானேஜர் ஆக்கினது தப்புன்னு ஏன் சொல்றீங்க?''
''சம்பளம் கொடுக்கும் நாளில் 'சம்பளம் ரெடி'ன்னு வாசலில் 'போர்டு' வைக்கிறாரே.''

- தக்கோலம். அ. முஸ்தபா.



''மஞ்சள் பாவாடை, மஞ்சள் பை, மஞ்சள் பொட்டுமா எங்கே கிளம்பிட்டே?''
''மஞ்சள் காமாலை வந்து மருத்துவமனையில் படுத்துக் கிடக்கும் என் சிநேகிதியைப் பார்க்கத்தான்!''

- ஜி. ராஜேஷ்.

னான் ராஜா. தெப்பக்குளத்துத் தெருவில் மளிகைக் கடையிலிருந்து யாரோ அழைத்தார்கள். நண்பன் ராமுதான்.

''ராஜாவா! எப்போ வந்தே? விடுதி வாழ்க்கை எப்படி இருக்கு?''

''காலையில்தான் வந்தேன். எனக்கு விடுதியின் கட்டுப்பாடுகள் ஒத்து வரலே ராமு. அதனால திரும்பி வந்துட்டேன்.''

ராமு அவனைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''ராஜா, வீட்டிலே ஒரே பையன். செல்லமாக இருந்தவன். அதனால், கட்டுப்பாடுகள் உனக்குப் புதிதாக இருக்கு. வாழ்க்கையில் முன்னேற கட்டுப்பாடுகள் அவசியம் ராஜா. கறிகாய் விற்பவனும், பால் வியாபாரம் செய்பவனும் அதிகாலையில் எழுந்து கடை போட்டால்தான் வியாபாரமாகும். தூக்கத்தை விட முடியாது என்று பன்னிரெண்டு மணிக்கு மேல் கடை போட்டால் என்னவாகும்? சாலையில் இடது பக்கமாகப் போகாது வலது பக்கமாக சைக்கிளில் போனால் என்னவாகும்? நம்ம ஊரிலிருந்து எத்தனையோ பேர் அந்தப் பள்ளியில் அந்த விடுதியில் சேர விண்ணப்பித்தார்கள். உன் ஒருவனுக்குத்தான் இடம் கிடைத்திருக்கு. இவ்வளவு கட்டுப்பாடுகள் இருப்பதால்தான் அந்தப் பள்ளி மாநிலத்திலேயே முதலாவதாக வருகிறது. எனக்கெல்லாம் பத்தாவதுக்கு மேல் படிக்க முடியவில்லை. சம்பாதித்தாக வேண்டிய நிர்ப்பந்தம். ஆனால், உன் நிலை அப்படி இல்லையே! ஐந்தாவது மணிக்கு எழுந்திருக்க வேண்டும் என்பதும், ஆறு முதல் ஏழரை வரை படிக்க வேண்டும் என்பதும், எட்டு மணிக்குள் சாப்பிட வேண்டும் என்பதும் தாங்க முடியாத கட்டுப்பாடுகள் என்றால், இடது பக்கமாக சாலையில் போவதும் கூட ஒரு கட்டுப்பாடுதான். அதற்காக சாலையில் சைக்கிள் ஓட்ட மாட்டேன் என்று இருந்து விடுவாயா?" என்று எடுத்த எடுப்பிலேயே படபடவென்று பேசி, தன் ஆற்றாமையைக் கொட்டினான் ராமு.

''அப்பா, நான் விடுதியிலேயே தங்கிப் படிக்கிறேன்'' என்று ராஜா பெட்டி படுக்கையைத் தயார் செய்தது அப்பாவை அயர வைத்தது!

- ஏ. பி. திருமக செல்வி,
கோவை - 8.



ஜெர்மன் கதை

மூன்று சோதனைகள்

மூலம் : கிரிம் சகோதரர்கள்

தமிழில்: தம்பி சீனிவாசன்

ஜெர்மனி நாட்டின் சிற்றூரில் ஒரு தையற்கார இளைஞன் தொழில் செய்து வந்தான். அவன் கடைக்குப் போனால் ஜன்னல் அருகே கால்களை மடித்துத் தரையில் அமர்ந்து வித விதமான ஆடைகளைத் தைப்பதைக் காணலாம்.

ஒருநாள் பிரபு ஒருவருடைய மேலங்கியைத் தைத்தபடி இருந்தவன், பசிக்கவே வேலையை நிறுத்திக் கொண்டு உணவுப் பொட்டலத்தை எடுத்தான், சாப்பிட. ரொட்டி, அதிலே தடவ ஜாம் என்று பரப்பினான். திடீரென்று நிறைய ஈக்கள் பறந்துவந்தன. தையற்காரன் எரிச்சலடைந்தான். 'பிடி! அடி! அடி!' என்று கூவியபடி இப்படியும் அப்படியுமாகக் கைகளை வீசி வீசி அடித்தான்! ஈக்கள் செத்து விழுந்தன!

தையற்கார இளைஞன் செத்த ஈக்களை எண்ணிப் பார்த்தான். ஒன்று-இரண்டு-மூன்று-நான்கு-ஐந்து-ஆறு-ஏழு. ''அட ஏழு! ஒரே அடியில் ஏழு!'' என்று உற்சாகமாகத்துள்ளினான் வாலிபன்.

''ஒரே அடியில் ஏழு பேரை எமலோகம் அனுப்பியவன்!'' என்று திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்த்துக் கொண்டான். ''அட, அழகாக இருக்கிறதே!'' என்று எழுந்தான். எல்லா வேலைகளையும் அப்படியே விட்டு விட்டு ஒரு துணி எடுத்து அதிலே ''ஒரே அடியில் ஏழு பேரைக் கொன்றவன்'' என்று பெரிய எழுத்தில் வரைந்து தோளில் மாட்டும் பட்டையாகத் தைத்தான் தோளிலிருந்து இடுப்புவரை குறுக்காக மாட்டிக் கொண்டான்.

உற்சாகமடைந்த அந்தத் தையற்கார இளைஞனை ''ஒரே அடியில் ஏழு பேரைக் கொன்றவன்'' என்ற வாசகம் ஊக்கப் படுத்தியது. ''ஒரேயடியில் ஏழு பேரைக் கொன்ற நாம் இனி இந்தச் சிறு கிராமத்தில் இருப்பதாவது! உலகம் முழுவதும் நம் புகழ் பரவ வேண்டும்'' என்று தீர்மானித்தான்.

வழிக்கு ஆகுமென்று கொஞ்சம்

பாலாடைக் கட்டியை எடுத்து முடிந்து கொண்டான். நீண்ட மேலங்கி அணிந்து அதைப் பையிலே எடுத்துச் சென்றான். சற்றுத் தூரம் சென்றதுமே முள்புதரில் மாட்டிக் கொண்ட ஒரு கரும் குருவியைப் பார்த்தான்.

''இதுவும் வழித்துணை ஆகும்'' என்று குருவியைப் பிடித்து நாசுக்காக சட்டைப் பையிலே அடைத்துக் கொண்டான். தையற்காரன்.

நடந்தான். உற்சாகமாக மலை மேட்டில் ஏறினான். மறுநாள் அவன் எதிரே, வழியில் இரண்டு பெரிய கால்கள் தெரிந்தன. மனிதர்கள் கணுக்காலிலிருந்து முழங்கால் வரை ஓர் ஆள் உயரம். இப்படி இருந்த ஒரு இராட்சச உருவத்தின் கால்களையே பார்த்தான் தையற்கார இளைஞன். பிறகு கழுத்தை நிமிர்த்திப் பார்த்தால் அது ஒரு உண்மையான ராட்சசன்!

தையற்கார இளைஞன் பயப்படவில்லை. ''நல்ல துணையாச்சு! நடப்பதற்குத் தயாரானால் என்கூட வா'' என்று இராட்சசனிடம் சொன்னான் துணிவாக.

ராட்சசனோ உறுமினான். 'அட, பயலே! என்ன பேசுகிறாய்? என்னையா வழித்துணைக்குக் கூப்பிடுகிறாய்! நான் ஒரு தட்டுத் தட்டினால் செத்து விழும் பயல் நீ!'' என்று கரகரத்த குரலில் பல்லைக் கடித்தபடி சொன்னான்.

வாலிபன் சிரித்து, தனது மேலங்கியை அகற்றி ''இதைப்படி'' என்று தன் தோளிலே இருந்த தொங்குபட்டை வாசகத்தைக் காட்டினான்.

இராட்சசனுக்குக் கொஞ்சம் புத்தி மந்தம். குனிந்து மெல்ல எழுத்துக் கூட்டிப் படித்தான்.

''ஒரே அடியில் ஏழு பேரை எமலோகம் அனுப்பியவன்!'' இராட்சசன் கலங்கிப் போனான்! தெரியாத்தனமாக இவனிடம் வந்து சிக்கிக் கொண்டோமே! என்று எண்ணி வருந்தினான்! ஆனாலும், இதை வெளியே காட்டிக் கொள்ளாது, 'இவன் சாதாரண ஆள் இல்லை. பலசாலி. சோதனை செய்து பார்ப்போம்.' என்று முடிவு செய்தான்.

''ஏழுபேரை எமலோகம் அனுப்பியவனா! சந்தோஷம். எங்கள் வீட்டுக்கு



வாப்பா. அங்கே என் அண்ணன்மார் இரண்டு பேர் இருக்கிறார்கள். மாவீர னான உன்னைப் பார்த்தால் சந்தோஷப் படுவார்கள். முதலில் நமது பலத்தை சோதனை செய்து பார்க்கலாம்'' என்றான்.

''தாராளமாகப் பார்க்கலாமே'' என்றான் வாலிபன்.

''முதலிலே இந்தக் கல்லைக் கையால் பிசைந்து நீர்சொட்டச் செய்ய வேண்டும்'' என்று சொல்லி, தரையி லிருந்து ஒரு சிறு கல்லை எடுத்தான் இராட்சசன். அவன் உள்ளங்கையில் வைத்து அழுத்த அழுத்த அது பொடிந்து கல்லிலிருந்து நீர் கசிந்தது.

இப்பொழுது தையற்காரனின் முறை! 'இதோபார்' என்ற இளைஞன் தனது சட்டைப் பையிலிருந்து பாலா டைக்கட்டியை எடுத்தான். உள்ளங் கையிலே வைத்து அழுத்தினான். அது திரவ திரவமாகச் சொட்டியது!

இராட்சசன் அரண்டு போனான்! ஆனாலும் ''இது சரி, இந்தத் திறமை யைப்பார்,'' என்று சொல்லி ஒரு கல்லை எடுத்துப் பலமாக வீசினான். கல் பறந்து போய் வெகு தூரத்திலிருந்த ஒரு மலை யில் விழுந்தது.

'இவ்வளவுதானே!'' என்றான் வாலிபன். தரையிலிருந்து ஒரு கல்லை எடுத்தான். சட்டைப்பையில் அடைத்து வைத்திருந்த சிறு குருவியைக் கையிலே பிடித்துக் கொண்டான். கல்லை எறிவது போல பாவனை செய்து கையை வீசி னான். தப்பித்தோம் பிழைத்தோம் என்ற மகிழ்ச்சியில் விர் என்று வீசிப் பறந்தது குருவி. மேலே மேலே இன்னும் மேலே என்று வானத்தின் உச்சிக்கே போய் மறைந்து விட்டது!

''கல்லை தூர எறிவதிலே என்ன திறமை இருக்கிறது. அது காணாமல் போகும் அளவு உயர எறிவதுதானே அதைவிடச் சிறப்பு?'' என்று சீண்டி னான் வாலிபன்.

இராட்சசன் யோசித்தான். "சரி, இதோ கீழே விழுந்துள்ள ஆல மரத்தை அப்படியே ஏந்தித் தூக்கலாம். வீட்டுக்கு விறகாக எடுத்துப் போக வேண்டும். நீ சுமப்பாயா?''





''என்ன வௌவால் மாஸ்டர், யோகாசனம் கத்துத் தாரேன்னுட்டு எப்பவும் சிரசாசனம் மட்டுமே சொல்லித் தர்றீங்களே....!''

''செய்யலாமே. நீ அடிப்பகுதியை உனது தோளிலே வைத்து நட. அடியை விட உயரமான கிளைப் பகுதியே அடர்த்தியானது. அதை நான் ஏந்திப் பிடித்துக் கொள்கிறேன்'' என்றான் வாலிபன்.

பாவம், இராட்சசன். தூக்க முடியாமல் ஒரு மரத்தைத் தூக்கித் தன் தோளிலே சாத்திக் கொண்டு நடந்தான். அவன் முதுகுக்குப்பின் தொங்கிவந்த கிளை இலைகளைப் பிடிப்பது போல சும்மா ஏந்தி வந்து அப்படியே ஒரு கிளையில் தொத்திக் கொண்டான் இளைஞன்.

''என்ன, பின்னால் வருகிறாயா?'' என்று கேட்டான் இராட்சசன்.

''கிளைப் பகுதியிலே வருகிறேன்'' என்றான் வாலிபன்.

அசட்டு இராட்சசன் முழு மரத்தின் பாரத்தைத் தாங்கியதோடு வாலிபனையும் சேர்த்துச் சுமந்து நடந்தான்.

இராட்சசனின் வீடு வந்தது. ''என்னால் இனி சுமக்க முடியாது. நான் மரத்தைக் கீழே போடப்போகிறேன்'' என்று கூவியபடி இராட்சசன் அதைக் கீழே போட்டான்.

சட்டென்று சரியான சமயத்தில் மேல் கிளையிலிருந்து தொப்பென்று குதித்தான் வாலிபன்.

''அப்பப்ப! என்ன சுமை!'' என்று இராட்சசன் அலுத்துக் கொண்ட போது, ''நீ சும்மா இருந்திருந்தால் நானே இன்னும் எளிதாகச் சுமந்திருப்பேன்'' என்றான் இளைஞன்.

பெரிய குகைக்குள் நுழைந்தான் இராட்சசன். தையற்கார இளைஞனை அங்கே இருந்த தனது இரண்டு சகோதரர்களுக்கும் அறிமுகப்படுத்தினான். 'ஒரேயடியில் ஒன்பது பேரைக் கொன்றவன்' என்று வாலிபனைப் பற்றி அவர்களிடம் சொன்னான்.

மூன்று இராட்சசர்களும் இரவுச் சாப்பாடு என்று ஆளுக்கு ஒரு முழு ஆட்டை வதக்கித் தின்றார்கள். வாலிபன் தனக்கு விரதம் என்று எளிய உணவு உண்டான்!

'இந்தப் படுக்கையில் இரவு படு' என்று மூன்று இராட்சசர்களும் அவனை ஓர் அறையில் விட்டனர். அந்தப் படுக்கை மிகப் பெரிய மேடை போல இருந்தது. வாலிபனுக்கு அதிலே தூக்கம் வரவில்லை. கீழே இறங்கி ஒரு சிறு மேசைக்குக் கீழே சுகமாகத் தூங்கினான்.

மூன்று இராட்சசர்களும் கூடிப் பேசினார்கள். ''இந்தப் பொடியன் ஒரே அடியில் ஏழு பேரைக் கொல்லக் கூடியவனாம். நாம் இவனிடமிருந்து தப்பிக்க வேண்டுமானால் இவனைத் தீர்த்துக் கட்ட வேண்டும்'' என்று முடிவு செய்த அவர்கள் அவனுக்கு அளித்த கட்டிலுக்குச் சென்று கத்தி அரிவாளால் ஓங்கி ஓர் பலத்த வெட்டுப் போட்டார்கள். 'ஒரேயடியில் ஏழுபேரைக் கொன்றவன் ஒழிந்தான்!' என்று நிம்மதியாக உறங்கப் போனார்கள்! கட்டிலில் மட்டும் தையற்கார இளைஞன் படுத்திருந்தால் அவன் உடனே தீர்ந்திருப்பான்!

காலையில் வாலிபனை உயிரோடு பார்த்த இராட்சசர்கள் பயந்து போனார்கள். தப்பித்தோம் பிழைத்தோம் என்று அந்த இடத்திலிருந்து ஓடிப் போனார்கள்!

தையற்கார இளைஞன் மேலும் பயணம் செய்தான். ஓர் அரசு மாளிகை இருந்த கோட்டைக்கு வந்தான். கோட்டை வாயிலிலே பயணக் களைப்பில் படுத்துத் தூங்கி விட்டான்.

அந்தக் கோட்டை வாசலில் இருந்த வீரர்கள் இளைஞனைப் பார்த்தார்கள். அவன் மார்பு அங்கியுடன் தோளில் தொங்கிய அலங்காரப் பட்டையிலே ''ஒரே அடியில் ஏழுபேரைக் கொன்றவன்'' என்ற வாசகத்தைப் பார்த்து, திகைத்துப் போய்த் தங்கள் அரசரிடம் சொன்னார்கள்.

இளைஞன் அரசரது படையில் சேர்ந்தான். அரசர் அவனுக்கு மட்டும் பல சலுகைகள் அளித்தார். இவ்வாறு அந்த தையற்கார இளைஞன் சில நாள்

வசதியாக வாழ்ந்தான். எங்கேயும் போல் அந்த நாட்டிலும் பொறாமை தலையெடுத்தது. மற்ற வீரர்களுக்கு இளைஞன் மட்டும் அ ர ச ரி ட ம் சலுகை பெறுவது பிடிக்கவில்லை. இவனுக்கு மட்டும் என்ன மாளிகையும் தங்கக் காசு சம்பளமும்! நாங்கள் இனி எதற்கு இங்கு இருக்க வேண்டும்? நாங்கள் வேலையை விட்டுப் போய் விடுகிறோம்,'' என்று முணுமுணுத்தார்கள். அரசர் காதுக்கு இது எட்டியதும், ''அப்படியா? வீரர்படையை எந்தக் காரணத்தை முன்னிட்டும் விரோதித்துக் கொள்ள முடியாது. அவசியமானால் இந்த வாலிபனையே வேண்டுமானாலும் தீர்த்துவிடலாம். அவனுக்கு சோதனைகள் என்ற பெயரில் இடைவிடாத சங்கடங்களை ஏற்படுத்துவோம்'' என்றார் அரசர். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு பணியாள் இளைஞனிடம் வந்து இரகசியமாக எச்சரித்து விட்டான்.

இளைஞனை அழைத்தார் அரசர். தேன்ஒழுகப் பேசினார்: வீரனே, உன் புகழ் எல்லாருக்கும் தெரியும். ஒரே அடியில் ஏழு பேரைத் தீர்க்கும் வல்லமை பெற்றவன் நீ. இப்போது இந்த நாட்டிற்கு ஒரு ஆபத்து வந்துள்ளது. இதை நீ தான் போக்க வேண்டும். பக்கத்துக் காட்டில் இரண்டு இராட்சசர்கள் திரிகிறார்கள். அவர்கள் அடிக்கடி ஊருக்குள்ளே வந்து ஆட்களையும் ஆடுமாடுகளையும் கொன்று போடுகிறார்கள். நீ போய் அவர்களை அழிக்க வேண்டும். மக்களின் துயர் துடைக்க வேண்டும்''என்றார்.

''அப்படியே செய்கிறேன்'' என்றான் இளைஞன்.

''நீ வெற்றிபெற்றால் உனக்குப் பாதி ராஜ்யம் தருவேன். ராஜகுமாரியையும் நீ மணக்கலாம்'' என்று ஆசை காட்டினார் அரசர்.

இளைஞன் சில குதிரை வீரர்களுடன் பக்கத்துக் காட்டிற்குப் போனான். எல்லையிலேயே மற்றவர்களை நிறுத்திவிட்டுத் தான் மட்டும் உள்ளே சென்றான். இரண்டு இராட்சச சகோதரர்களும் நன்றாகத் தின்றுவிட்டு



ஒரு மரத்தடியில் குரட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். இளைஞனுக்கு ஒரு யோசனை தோன்றியது. பை நிறையக் கூழாங்கற்களை எடுத்துக் கொண்டான். ஓசைப்படாமல் இராட்சசர்கள் தூங்கும் இடத்தில் இருந்த மரத்தின் மீது ஏறினான். மெல்ல ஒரு கல்லை எடுத்து மூத்தவன் தலையிலே 'டொக்' என்று வீசினான்.

தூக்கம் கலைந்து எழுந்த மூத்தவன் முணுமுணுத்தான். இ ளை ய வ னை உலுக்கி எழுப்பி, ''என்ன என் தலையிலே ஏன் குட்டினாய்?'' என்று கேட்டான். ''நான் குட்டவில்லையே'' என்றான் அவன். எரிச்சலுடன், மூத்தவன் முணுமுணுத்தபடி மறுபடி தூக்கப் போனான். அரைமணிநேரத்துக்குப்பின் இளைஞன் இளையவன் மண்டையைக் குறி பார்த்து ஒரு கல்லை எறிந்தான். இப்போது இவன் எழுந்து மூத்தவனை உலுக்கி சண்டைக்கு இழுத்தான். இப்படி மாறிமாறி இருவருக்கும் கோப மூட்டிவிட, இருவரும் ஒருவர் மீது ஒருவர் ஆத்திரப்பட்டு சண்டை போட்டுக் கொண்டார்கள். இருவருமே பலசாலிகள். அவர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு மடிந்தார்கள்!

இளைஞன் மரத்திலிருந்து கீழே இறங்கினான். வீரர்களை அழைத்துக் காட்டினான். எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.


இராட்சசர்கள் செத்து ஒழிந்தது பற்றி மகிழ்ச்சியடைந்தாலும் அரசர் தான் வாக்களித்தபடி பரிசு வழங்கத் தயங்கினார். "தம்பி இன்னொரு தடங்கல் இருக்கிறது. அதையும் போக்கினால் உனக்கே அரசகுமாரி" என்று மற்றொரு சோதனை வைத்தார்.

இதன்படி மற்றொரு காட்டிலே தன்னிச்சையாகத் திரிந்து வந்த ஒரு ஒற்றை மூக்கு ஒற்றைக் கொம்பு முரட்டுக் குதிரையை அவன் அடக்க வேண்டும். இளைஞன் தந்திரமாக அந்த மிருகத்தைச் சீண்டிப் பாயவிட்டு தான் ஒரு மரத்தின் மீது சாய்ந்து நின்றான். அது சீறிப் பாயும் சமயம் சரேலென்று நகர்ந்து விட்டான். மிருகம் தனது கூரான கொம்பை மரத்திலே குத்தி மாட்டிக் கொண்டது. இளைஞன் தன் வாளினால் கொம்பை அறுத்து விட்டான். கொம்பறுந்த மிருகத்தைக்கட்டி அரசன் முன் கொண்டு வந்து நிறுத்தினான்.

அரசர் இளைஞனின் திறமையைப் பாராட்டினார். இருந்தாலும் அப்பொழுதும் கூட அரசகுமாரியை அவனுக்குத் தரத் தயங்கினார். மற்றும் ஒரு சோதனை நடத்தினார். அதே காட்டில் உள்ள முரட்டுத் தங்கக் காட்டுப் பன்றியை உயிருடன் பிடித்து வரும்படி கட்டளையிட்டார்.


இளைஞனுக்கு இப்படி மறுபடி மறுபடி சோதனை நடப்பது பற்றி ஏமாற்றம் தான். இருந்தாலும் தீரமாகச் சென்று காட்டுப் பன்றி வேட்டையாடினான். ஒரு பாழடைந்த கோவிலைச் சுற்றி வரும்போது பன்றி இவனைப் பார்த்து விட்டுப் பாய்ந்து வந்தது. உடனே இவன் சட்டென்று கோவில் உள்ளே ஒதுங்கினான். காட்டுப் பன்றியும் அந்த வழியில் விரைந்து துரத்தியது. வாலிபன் ஒரு ஜன்னல் வழியோரம் ஏறி வெளியே குதித்தான். திரும்பச் சுற்றி வந்து கோவில் வாசல் கதவை மூடி அடைத்தான். உள்ளே காட்டுப் பன்றி உயிருடன் பிடிபட்டது.

அரசர் வைத்த மூன்று சோதனைகளிலும் வெற்றி பெற்ற இளைஞன் அரசகுமாரியை மணந்தான். சிலநாளில் அந்த நாட்டின் அரசனும் ஆனான்.



★ அமெரிக்காவில் கவனமின்றி மோட்டார் வண்டியை ஓட்டிப் பிறருக்குத் தீங்க விளைவிப்பவர்களுக்கு நீதிபதிகள் விநோதமான தண்டனையை அளிக்கிறார்கள். அது என்னவென்று தெரியுமா? தம்மால் கொல்லப்பட்டவர்களின் பிணங்களோடு சில நாட்களுக்கு மோட்டார் ஓட்டிகள் தனியே இருக்க வேண்டும் என்பதுதான் அத் தண்டனை!

- கே. எல். குமணன்.



சுந்தரபுரி மன்னன் சிவசேனனின் மகன் வயிற்று வலியால் அவதிப் பட்டான். அரண்மனை வைத்தியர்கள் வந்தனர்.

தலைமை வைத்தியர் ராஜாவிடம், ''இது பரம்பரை வியாதி. புலிக் கொழுப்பை எடுத்து வந்து வீரனின் வயிற்றில் தடவினால் குணமாகி விடும்'' என்றார்.

மந்திரியை உடனே வரவழைத் தார் ராஜா. வைத்தியர் சொன்னதை மந்திரியிடம் சொன்னார். உடனே புலிக் கொழுப்பைக் கொண்டு வர ஆளை அனுப்புங்கள் என்று கட்டளை யிட்டார். மந்திரி உடனே வேடன் ஒரு வனை அழைத்து புலிக் கொழுப்பை உடனே கொண்டு வருமாறு உத்தர விட்டார். குறித்த காலத்திற்குள் புலிக் கொழுப்புடன் வரவில்லையென்றால் மரண தண்டனை விதிக்கப்படும் என்று எச்சரித்து அனுப்பினார்.

மந்திரியிடம் விடைபெற்றுக் கொண்டு காட்டிற்குச் சென்றான் வேடன். காட்டின் நடுப் பகுதியில் சென்று கொண்டிருக்கும் போது அரு காமையில் புலி ஒன்று போவதைக் கண்டான். உடனே ஒரு அம்பு எடுத்து எய்தான். அம்புகுறி தவறி வேறு இடத்தில் போய் விழுந்தது. மற்றொரு அம்பைத் தொடுப்பதற்குள் புலி வேடனைத் துரத்த ஆரம்பித்தது. இனி அம்பு எய்து பலனில்லை என்று நினைத்த வேடன் ஓட ஆரம்பித்தான். புலி அவனை விட்டபாடில்லை. வேட னும் ஓட்டத்தை நிறுத்தவில்லை.

வேடன் உயிருக்கு அஞ்சி விரை வாக ஓடி வருவதை அருகாமையில் மரக் கிளைகளில் உட்கார்ந்திருந்த இரண்டு குரங்குகளில் ஒன்று பார்த்தது. உடனே, மரக்கிளையைத் தாழ்த்தியது வேடன் அதைப் பற்றிக் கொண்டு மரத்தின் மேல் ஏறிக் கொண்டான்.

புலி வந்து மரத்தின் கீழேயே நின்று கொண்டது. வேடன் களைப்புற்று ரொம்பப் பசியாய் இருப்பதைக் கவ னித்த குரங்குகள், மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த பழங்களைப் பறித்துக் கொடுத்தன. தாங்கள் காயைத் தின்றன.

பசியாறிய வேடன் கீழே பார்த் தான். புலி படுத்துக் கொண்டிருந்தது. குரங்குகளும் இதைக் கவனித்தன. இப் படியாகப் பொழுது போனது. புலியும்



''சாயந்திரம் அஞ்சு மணியிலேர்ந்து எட்டு மணி வரைக்கும்தான் நான் பார்ப்பேன்னு உங்களுக்குத் தெரியாதா?''

''எனக்குத் தெரியும் டாக்டர். ஆனா என்னைக் கடிச்ச நாய்க்குத் தெரியாதே.''

- இரா. ஷாகிர் பாட்சா,
சென்னை - 106.

போன பாடில்லை.

குரங்கு வேடனிடம், ''என் மடியில் படுத்துக் கொள். உன்னை நான் பத்திரமாகப் பார்த்துக் கொள்கிறேன்'' என்றது. வேடனும் படுத்து சிறிது கண்ணயர்ந்தான். இதைக் கவனித்துக் கொண்டிருந்த புலி, குரங்கைப் பார்த்து 'அவன் நம் எதிரி; நம்மை வேட்டையாடற ஜாதி. அவனைத் தள்ளி விடு. எனக்கு ரொம்பப் பசியாய் இருக்கிறது. அவனைச் சாப்பிட்டு விட்டு நான் போய் விடுகிறேன்'' என்றது. அதற்குக் குரங்கு சொன்னது, ''அவன் நம் எதிரியாய் இருந்தாலும், இப்போது எனது விருந்தாளியாக இருக்கிறான். என்னை முழுவதும் நம்பி விட்டான். என்னை நம்பியவனை நான் மோசம் செய்யலாமா?''

புலி அந்த இடத்திலேயே படுத்துக் கொண்டது. பாதி இரவு கழிந்திருக்கும். வேடன் கண் விழித்தான். முதலில் கீழே பார்த்தான். புலி அந்த இடத்திலேயே இன்னும் இருந்து கொண்டு மேலேயே பார்த்துக் கொண்டிருந்தது. வேடனுக்கு தூக்கம் எல்லாம் பறந்து போயிற்று. குரங்கு வேடனிடம் சொல்லி விட்டுப் படுத்துக் கொண்டது. படுத்துத் தூங்கியும் போயிற்று.

புலி இப்பொழுது மேலே பார்த்து வேடனிடம் பேசியது. ''வேடனே எனக்கோ ரொம்பப் பசி. அந்தக் குரங்கைக் கீழே தள்ளி விடு. நான் அவைகளைச் சாப்பிட்டு விட்டுச் சென்று விடுகிறேன். நீ உன் இருப்பிடம் போய் விடலாம்.'' குரங்கு செய்த உதவியெல்லாம் மறந்து அந்த வேடன் குரங்கைக் கீழே தள்ளி விட்டான்.

கீழே விழுந்த குரங்கு பட்டென்று வேறொரு கிளையைப் பிடித்து மரத்தில் ஏறிக் கொண்டது. வேடனை நோக்கிச் சென்றது.

குரங்கு தன்னை நோக்கி வருவதைக் கண்ட வேடன், எங்கே அது தன்னைப் புலியிடம் தள்ளி விடப் போகிறதோ என்று அஞ்சினான்.

பயந்து கொண்டிருந்த வேடனைப் பார்த்து குரங்கு, ''பயப்படாதே. நான் உன்னைக் கீழே தள்ள மாட்டேன். என் விருந்தாளியை நானே சாகடிப்பேனா?'' என்றது. இதற்குள் பொழுதும் புலர்ந்தது. புலி இனியும் வேடனைப் பார்த்தால் பட்டினியோடு சாக வேண்டியதுதான் என்று அந்த இடத்தை விட்டுப் போய் விட்டது.


புலி ரொம்ப தூரம் சென்றதைப் பார்த்துக் கொண்டிருந்த வேடன் மரத்திலிருந்து இறங்கி நடந்தான். சில அடி தூரம் சென்றிருப்பான். மந்திரி எச்சரித்தது நினைவுக்கு வந்தது. நன்றி கெட்ட வேடன், குரங்கு செய்த உதவியெல்லாம் மறந்து அம்பு தொடுத்து ஒரு தாய்க் குரங்கை வீழ்த்தினான். அதன் கொழுப்பை எடுத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான். தாய்க் குரங்கின் இரு குட்டிகளும் வேடனைப் பின்தொடர்ந்தன.

அரண்மனையில் ராஜாவிடம் கொழுப்பைக் கொடுத்தான். ராஜா வேடனுக்குப் பரிசு கொடுத்து அனுப்பி விட்டார். அப்போது அரண்மனைச் சுவரில் அமர்ந்து இரண்டு குட்டிக் குரங்குகள் கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். சிப்பாய்கள் எவ்வளவு விரட்டியும் அவை போகவில்லை. மந்திரிக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டது. வேடனை அழைத்து வரச் சொன்னார். மந்திரி வேடனைப் பார்த்து ''உண்மையைச் சொல். கொண்டு வந்தது எந்த விலங்கின் கொழுப்பு?'' என்று கேட்டார். வேடன் பயந்து காட்டில் நடந்த எல்லாவற்றையும் ஒன்று விடாமல் கூறினான். ராஜாவுக்கு உடனே கோபம் வந்தது. சிப்பாய்களை கூப்பிட்டு, ''இந்த நன்றி இல்லாத வேடனைச் சவுக்கால் அடியுங்கள். இவன் கையால் மருந்தை வாங்குவது கூடப் பாவம்'' என்றார்.

வேடனுக்குத் தகுந்த தண்டனை கிடைத்தது.

- அ. முஸ்தபா, தக்கோலம்.

காகிதக் கூட்டு!



அரியாங்குடி என்னும் கிராமத்தில் சுப்பையன் என்பவன், விறகு வெட்டி வாழ்ந்து வந்தான். அவனது மனைவியின் பெயர் கருப்பாயி. கருப்பாயி சுப்பையனைப் பணத்திற்காக தினமும் நச்சரிப்பாள். ஒரு நாள் வழக்கம் போல் அவன் காட்டுக்கு விறகு வெட்ட வெகு தூரம் சென்றான். அவன் அங்கிருந்த ஒரு கருவேல மரத்தை வெட்டுவதற்காக,தன் கோடாரியை ஓங்கிய பொழுது வன தேவதை ஒன்று அவன் முன் தோன்றியது. ''இந்த மரத்தை மட்டும் வெட்டாதே. நான் உனக்கு மூன்று வரங்கள் தருகிறேன். நீ இந்த மூன்று வரங்களையும் எப்பொழுது வேண்டுமானாலும் கேட்கலாம். ஆனால்,அவற்றை இன்னும் மூன்றே நாட்களில் கேட்க வேண்டும்'' என்றது.

சுப்பையன் உடனே வீட்டுக்குச் சென்று தன் மனைவியிடம் நடந்தவற்றை விவரமாகக்கூறினான். பிறகு இருவரும் யோசனையில் ஆழ்ந்தனர். என்ன வரம் கேட்கலாம் என்று கருப்பாயி தொணதொணத்துக் கொண்டே இருந்தாள். ஆத்திரமடைந்த சுப்பையன், மனைவி கழுதையாக மாற வேண்டும் என்று வேண்டினான்! தேவதை, அப்படியே ஆகட்டும்' என்றது. கருப்பாயி கழுதையாக மாறினாள். பிறகு சமைத்துப் போட, தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க அவன் மனைவி இல்லாது மிகவும் வருந்தினான்.

மறுநாள் தேவதையிடம், கழுதையை மீண்டும் மனைவியாக்குமாறு வேண்டினான். தேவதையும் அப்படியே ஆகட்டும்' என்றது. கழுதை மீண்டும் கருப்பாயி ஆனது!

கருப்பாயிக்குத் தன் கணவனிடம் கோபமான கோபம். அவளைக் கழுதையாக்கினான் அல்லவா? அன்று சமைக்கும் போது காய்கறிஎதுவும் போடாமல் காகிதத்தைப் போட்டுக் கூட்டு வைத்தாள். சுப்பையன் சாப்பிட வந்ததும், தட்டை வைத்து காகிதக் கூட்டைப் பரிமாறினாள்.

''என்னைக் கழுதையாக்கினாய் அல்லவா? இதுதான் அதற்குத் தண்டனை. இந்தக் காகிதக் கூட்டு முழுவதையும் தின்றால்தான் நீ வெளியே வரலாம்'' என்று அறைக் கதவை வெளியே பூட்டிக் கொண்டு போனாள்.


சுப்பையன் யோசித்தான். மூன்றாவது வரம் நினைப்பு வந்தது. தேவதையை நினைத்துக்கொண்டான். ''ஏதாவது ஒரு கழுதை வேண்டும். இந்தக்





காகிதக் கூட்டு அத்தனையையும் தின்று விட வேண்டும்'' என்று மூன்றாவது வரத்தைக் கேட்டான். அப்படியே நடந்தது.


தேவதை மூன்று வரங்கள் கொடுத்தும் கணவன் - மனைவியின் கோபத்தால் அவர்களுக்கு அதன் பலன் கிடைக்காது போனது.


– ர. ஹேமமாலினி, காரைக்கால்.



ராம-ஆஞ்சநேய யுத்தம்
கதை: ஆனந்தி
படம்: செல்வம்
சகுந்தன் என்ற அரசனைக் காண ஒரு நாள் முனிவர்கள் வந்தனர்...
வசிஷ்டாதி முனிவர்களே, வருக! வருக!
விசுவாமித்திரர் மகா கோபக்காரர்.
நாரதர், விசுவாமித்திரரிடம்...
என்னதான் இருந்தாலும் வசிஷ்டருக்குத்தான் முதல் மரியாதை...நீரும் பிரும்மரிஷி தானே? உமது பெயரைச் சொல்லி வரவேற்றிருக்கக் கூடாதா?
என்னை அவமானப் படுத்திய சகுந்தன் தலை என் காலடியில் புரளும்!
எல்லோரும் திடுக்கிட, விசுவாமித்திரர் கோபமாக வெளியேறினார்...
என்ன அபசாரம் நடந்தது?
புரியலையா? 'வசிஷ்டாதி முனிவர்களே!' என்று அழைத்தாய் அல்லவா?
நாரதரே, இது உமது கலகமா?



சகுந்தன் கவலையுற்றான்...
நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பார்கள்... அப்படி நடக்குமா? என் கதி என்ன ஆகப் போகிறதோ...?
விசுவாமித்திரர் ராமரைக் காணச் சென்றார்...
நாளை மாலைக்குள் சகுந்தராஜன் தலை என் காலடியில் புரள வேண்டும்.
...என் சபதத்தை நிறைவேற்றிக் கொடு!...
குருவின் கட்டளையை நிறைவேற்றுவேன்.
நாரதர் சகுந்தனிடம் பரபரப்புடன்...
சகுந்தா! ஆபத்து! ஆபத்து! விசுவாமித்திரருக்கு ராமர் வாக்குக் கொடுத்து விட்டார்!
சுவாமி! இது உங்களால் நேர்ந்த ஆபத்து. தப்பிக்கவும் நீங்கள்தான் வழி சொல்ல வேண்டும்...
ம்...என்ன செய்யலாம்?



ஆ! இப்படிச் செய்!
ஆஞ்சநேயரிடம் சரண் அடைந்து விடு! அவரை மீறி ராமர் உன்னைக் கொல்ல மாட்டார்!
சகுந்தன் ஓடிச் சென்று மலைப் பிரதேசத்தில்...
ஆஞ்சநேயரை எங்கே காண்பேன்? எவ்வளவு நேரம் தேடுவேன்
ஆஞ்சநேயரின் தாய் அஞ்சனா எதிர்ப்பட...
அன்னையே, காப்பாற்றுங்கள்.
அபயம்! என் வீர மகன் உன்னைக் காப்பான்; கலங்காதே!
அயோத்தி ராமர் என் தலையைச் சீவி விடுவதாக விசுவாமித்திரருக்கு வாக்களித்திருக்கிறார்!
அஞ்சனா திடுக்கிட்டு
ஆ! ராமரா!
அன்னையே! அபயம் அளித்து விட்டீர்கள்; கைவிடக் கூடாது!


அப்போது அனுமார் வர...
மைந்தா! இவர் பேராபத்தில் சிக்கியிருக்கிறார். இவருக்கு நான் அபயம் அளித்து விட்டேன். காப்பாற்று...
சீதா பிராட்டியார் மீது ஆணையாக உங்கள் வாக்கைக் காப்பாற்றித் தருவேன், அன்னையே!
சகுந்தா, பயப்படாதே! உனக்கு என்ன ஆபத்து? சொல்!
ஸ்ரீராமபிரான் என்னைக் கொல்வதாக விசுவா-மித்திரருக்கு வாக்களித்திருக்கிறார்!
அனுமார் அதிர்ச்சியுற்று...
ராமபிரானா! அன்னையே இது என்ன, என்னை இப்படி சிக்கலில் மாட்டி வைத்து விட்டீர்கள்!
மைந்தா! ராவணனை வெல்ல ஸ்ரீராமருக்கு எவ்வளவோ உபகாரம் செய்யவில்லையா? உன் வேண்டுதலை அவர் மறுக்க மாட்டார்.
அது சரி. ஆனால் அவர் கொடுத்த வாக்குறுதியை மீறுபவர் அல்லவே!


மைந்தா, நானும்தான் உன்னை நம்பி, சகுந்தனுக்கு வாக்குக் கொடுத்து விட்டேன்!
இந்தச் சிக்கலிலிருந்து மீள, சீதா பிராட்டியிடம் தஞ்சம் அடைய வேண்டியதுதான்.
அனுமன் அயோத்தி அடைந்து...
சிரஞ்சீவியாய் வாழ்வாயாக!
தங்கள் வாக்கு பொய்க்கப் போகிறது!
என்னது!
அனுமன் நடந்ததைக் கூற...
என் வாக்கு பொய்க்காது. உன் மீது ராமபிரான் ஏவும் அம்புகள் மலர்களாக மாறும்!
இதற்கிடையில்...
லக்ஷ்மணா, குருவுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். சகுந்தன் இருக்கும் இடத்தைத் தேடுவோம்.
பரதன்...
அண்ணா! சகுந்தன், அஞ்சனா தேவியின் குகையில் ஒளிந்திருப்பதாக நமது சாரணர் கூறுகிறார்கள்.


சத்ருக்னன்
அனுமான், சுகுந்தனைக் காப்பதாக வாக்களித் திருக்கிறா ராம்...
என்ன அனுமானா! ம்... யாரானாலும் சரி நான் கொடுத்த வாக்கைக் காக்க வேண்டும்...
லக்ஷ்மணா! நீ போய் அனுமனைத் தோற்கடித்து, சுகுந்தனை இழுத்து வா...
மன்னிக்க வேண்டும். மனம் இடம் தர வில்லை...
அனுமனிடம் எங்களால் சண்டை போட முடியாது.
அப்படியானால் நானே போகி றேன்!
இதற்டையில்...
சுகுந்தா! பயப் படாதே! உன்னைச் சுற்றி என் வாலால் கோட்டை அமைக் கிறேன்!
ராமர் வந்து...
சுகுந்தன் என் குருவை அவமதித்தான். அதற்கு அவன் தண்டனை பெற்றே ஆக வேண்டும்! அவனை விட்டு விடு.


பிரபோ! நான் என் தாயாருக்கு வாக்களித்து விட்டேன். சத்ருக்னனை நான் காப்பாற்றியே தீரவேண்டும்.
அப்படியானால் யுத்தம் செய்!
இருபக்கங்களிலிருந்தும் பாணங்கள் கிளம்பி, வானையே மறைத்தன.
மாருதியை அசைக்க முடியலையே! என்னமாய் என் பாணங்களைத் தடுக்கிறான்!
அனுமானால் தடுக்க முடியாமல் போன ராமபாணங்கள் மலர்களாக மாறின...
ராம ஜபம் செய்த படியே ராமனுடன் யுத்தம் புரிவேன்!
ராமர் கோபமு...
என் வீரமும் நேர்மையும் உண்மையானால், இந்த சக்தி ஆயுதம் சத்ருக்னனின்...


சிவபெருமான் தோன்றி...
ராமா! நில்! நீ சக்தி ஆயுதத்தைப் பிரயோகித்தால் பிரளயமே வந்து விடும்!
நாரதரும் வந்து சேர...
நான் கொடுத்த வாக்கு என்னாவது?
சகுந்த ராஜனே! உன் தலை விசுவாமித்திரர் பாதங்களில் புரளட்டுமே!
புரிந்து கொண்ட சகுந்தன், விசுவாமித்திரர் கால்களில் தன் தலை பட வணங்க...
தீர்க்காயுளுடன் வாழ்க!
இந்திரன்...
மாவீரர்களான அனுமனும் நீங்களும் போரிடுவதைக் காணும் ஆசையில், நாரதர் மூலம் நாங்கள் செய்த கலகம் இது... மன்னியுங்கள்...
அனுமார் தம் இதயத்தைத் திறந்து காட்ட...
ஜெய் ஹனுமான்!
எம்பிரானே! இந்த யுத்தம் உங்களுக்கும், என் இதயத்தில் உள்ள உங்களுக்கும் இடையில் தான் நடந்தது!



கிண்டல் செய்த வேலை!

செல்வத்துக்கு முருகனைக் கண்டால் ஒரே ஏளனம். செல்வம் பணக்காரர் வீட்டு மகன். முருகன் அவர்கள் வீட்டு கார் டிரைவரின் ஏழை மகன். இருவரும் பள்ளி நண்பர்கள்.

விடுமுறை நாட்களில் காரை சுத்தம் செய்ய, துடைக்க, மற்ற பாகங்களுக்கு எண்ணெய் போட்டுச் சீர் செய்யத் தந்தைக்கு உதவ முருகனும் வந்து விடுவான். செல்வம் அவனைக் கேலி செய்வான். முருகன் அதையெல்லாம் பொருட்படுத்தவே மாட்டான். தந்தையோடு வேலை செய்து பழகி, கார் பற்றி பல நுணுக்கமான தகவல்களை முருகன் அனுபவ பூர்வமாக அறிந்து கொண்டிருந்தான்.

செல்வத்தின் தந்தைக்கு வியாபாரத்தில் எதிர்பாராத நஷ்டம் ஏற்பட்டது. செல்வம் நடுத் தெருவுக்கு வந்து விட்டான். படிப்பு நின்று விட்டது. வேலை போய் விட்டதால், முருகனின் குடும்ப நிலையும் அப்படித்தான். அதோடு, வேலை போன அதிர்ச்சியில் முருகனின் அப்பா வேறு படுத்த படுக்கையாகி விட்டார். ஆனாலும், அப்பாவிடம் கற்றுக் கொண்ட கார் நுணுக்கங்கள் அவனுக்குக் கை கொடுத்தன. ஒரு ஆட்டோ ரிப்பேர் கடையில் அவனுக்கு எளிதில் வேலை கிடைத்தது. இரவு 'ஷிப்டில்' வேலை பார்த்துக் கொண்டு, பகலில் பள்ளிக்குச் சென்றான்.

ஒரு நாள் எதிர்பாராத விதமாக முருகன் செல்வத்தை ஒரு பெட்ரோல் பங்கில் சந்திக்கும்படி நேர்ந்தது. முருகன் ஒரு ஆட்டோவுக்கு டீசல் போடப் போயிருந்தான். அங்கே எடுபிடிப் பையனாக, பரிதாபமான நிலையில் செல்வம் இருந்தான். முருகனைக் கண்டதும் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.


''செல்வம், இந்த ஊரிலா இருக்கே!'' என்று வியப்போடு கேட்டான் முருகன்.

''ஆமாம் முருகா. இப்பத்தான் வந்து ஒரு வாரமாச்சு. அப்பா போய் விட்டார். நான் ஏதாவது சம்பாதித்துக் கொண்டு போனால்தான் சாப்பாடு. இது கூட சில நாள்தான். வெளியூர் போயிருக்கும் பையன் வந்தால் கழற்றி விடுவார்கள்'' என்று கண்ணீர் விட்டான் செல்வம்.

முருகன் தன் முதலாளியிடம் சொல்லி, செல்வத்தை அறிமுகப்படுத்தினான். ஒரு வேலையும் வாங்கிக் கொடுத்தான்.

முருகன் எந்த வேலையைச் செய்கிறான் என்பதற்காக, செல்வம் அவனைக் கிண்டல் செய்தானோ, அதே வேலையே செல்வத்திற்கு சாப்பாடு போட்டது!

– ஜே. கார்த்திகேயன், தரங்கை.




சிட்டுக்குருவியின் பட்டுக்கோட்டு!

சின்னப்பா

எவ்வளவோ இலட்சக் கணக்கான வருஷங்களுக்கு முன்பு, பறவைகளுக்கு இப்பொழுது இருப்பதுபோல் மென்மையான சிறகுகள் இருக்கவில்லை. முண்டு முண்டாக சிறகுகளால் மூடப்படாத தோல்தான் இருந்தது. குளிர் காலம் வந்து விட்டால், குளிரைத் தாங்க முடியாது அவை தவிக்கும்.

குளிர் காலத்தில் பனியைத் தாங்க வேண்டும் என்பதற்காக பறவைகள் எல்லாம் தங்களுக்குத் தெரிந்தவரை இலை தழைகளால் ஆன போர்வையைத் தயார் செய்து கொள்ளும்.

சிட்டுக் குருவிக்கு மட்டும் பஞ்சைக் கொண்டு கோட்டுத் தயார் செய்யத் தெரிந்திருந்தது. சிலந்தி வலை பின்னுவதையும், தூக்கணாங் குருவியும், தையற்காரப் பறவையும் கூடு கட்டுவதையும் அது கவனித்து வந்தது. இவைகளெல்லாம் கூடு கட்டும் போது, இதே முறையில் நாம் கூட ஏன் ஒரு கோட்டுச் செய்து கொள்ளக் கூடாது என்று அந்த புத்திசாலிக் குருவி எண்ணியது. வெடித்த பஞ்சை எடுத்து வந்து இழையெடுத்தது. வாழை மரத்திலிருந்து மெல்லிய நார் எடுத்தது. எப்படியோ கோணல் மாணலாக ஒரு கோட்டைச் செய்து கொண்டது.





முதலில் குருவியின் முயற்சியைப் பார்த்துக் கேலி செய்த மற்ற பறவைகள் எல்லாம், அது செய்து கொண்ட கோட்டு, அழகாக இல்லாவிட்டாலும், குளிரைத் தாங்கக் கூடியதாக இருப்பதைக் கண்டு திகைத்தன. தங்களுக்கும் கூட அப்படி ஓர் கோட்டைச் செய்து தரும்படி நச்சரித்தன.

மற்றவர்களுக்கு உதவும் குணமுடைய குருவி மற்ற பறவைகளுக்கும் கோட்டைத் தைத்துத் தந்தது. இப்படிக் கோட்டைத் தைத்துத் தைத்து அனுபவம் வந்து விட்டதால், நாளடைவில் மிக அழகாகக் கோட்டுத் தைக்கும் திறமை அதற்கு வந்து விட்டது.

ஒரு நாள் சிட்டுக் குருவிக்கு இறந்த ஒரு பட்டுப் புழுவின் கூடு கிடைத்தது. குருவி அதன் இழைகளைச் சேர்த்துக் கொண்டது. இலவம் பஞ்சைக் கொண்டும் இழையெடுத்தது. இதையெல்லாம் வைத்து ஒரு அழகான பட்டுக் கோட்டைச் செய்து கொண்டது. மற்ற பறவைகளெல்லாம் பார்த்துப் பொறாமைப் படும்படி அவ்வளவு அழகாக இருந்தது அந்தப் பட்டுக் கோட்டு.

குளிர் காலம் வந்தது. பனி கடுமை

யாகக் கொட்டியது. சிட்டுக் குருவி தன் பட்டுக் கோட்டைப் போட்டுக் கொண்டு, கூட்டுக்குள் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது.

கதவை யாரோ தட்டினார்கள்.

''யாராக இருக்கும்!'' என்ற வியப் போடு குருவி கதவைத் திறந்தது. ஒரு கிழட்டுக் கிளி குளிரில் நடுங்கியபடி நின்று கொண்டிருந்தது. கிளியை உள்ளே அழைத்துச் சென்றது குருவி. உள்ளே வந்த பிறகும் கூட, கிளியின் உடல் நடுக்கம் குறையவில்லை. குருவி, தான் போட்டுக் கொண்டிருந்த பட்டுக் கோட்டைக் கழற்றியது. கிளிக்கு அதைப் போட்டுவிட்டது. இப்பொழுது குருவி குளிரால் நடுங்க ஆரம்பித்தது!


''கோட்டை எனக்குக் கொடுத்து விட்டதற்காக வருத்தப் படுகிறாயா?'' என்று கேட்டது கிளி.

''இல்லவே இல்லை. இந்தப் பனி யும் குளிரும் எனக்குப் பழக்கமானவை தான். கோட்டுச் செய்து கொண்டது போன வருஷம்தானே? அதற்கு முன்னா லெல்லாம் நான் அவஸ்தைப் படாத குளிரா? என்னை விட நீங்கள் வயதில் பெரியவர், உங்களால்தான் குளிரைத் தாங்க முடியாது. இந்தவரை உங்களுக்கு உதவ முடிந்ததற்காக நான் மகிழ்ச்சி யடைகிறேன்'' என்றது சிட்டுக் குருவி.

அடுத்த நிமிஷம், அங்கே ஒரு மின்னல் மின்னியது! கிளி இருந்த இடத்தில் அழகான ஓர் தேவதை, காட்சி யளித்தது! அதைச் சுற்றிலும் கண்கவர் ஒளி வெள்ளம்!

குருவி திகைப்போடு தேவதையை வணங்கியது.

''சிட்டுக் குருவி, நான் பனி தேவதை. பறவைகளுக்கெல்லாம் ஏதா வது நல்லது பண்ண வேண்டும் என்று வந்தேன். எல்லாப் பறவைகளுக்கும் நீ கோட்டுச் செய்து கொடுத்தது எனக்கும் தெரியும். நான் எல்லாப் பறவை யிடமும் சென்று குளிருக்கு ஒண்டிக் கொள்ள இடம் கேட்டேன். எதுவும் உதவ முன் வரவில்லை. அடித்துத் துரத் தாத குறைதான்! ஆனால் நீயோ, நான் கேட்காமலேயே என்னை உள்ளே அழைத்து வந்தாய். கோட்டை எனக்குத் தந்துவிட்டு, நீ நடுங்குகிறாய்! எனக்கு வருகின்ற கோபத்தில் அவைகளை யெல்லாம் சபித்துவிட முடிவு செய் திருக்கிறேன். நல்ல குணமுடைய



உனக்கு, ஏதாவது வரம்தர ஆசைப்படு கிறேன். என்ன வேண்டுமோ கேள்'' என்றது தேவதை.

''நான் கேட்பது எதுவாக இருந்தா லும் தருவீர்களா? பிறகு மாட்டேன் என்று மறுக்கக் கூடாது?'' என்று உறுதி செய்யக் கேட்டது சிட்டுக் குருவி.

''மறுக்க மாட்டேன். கண்டிப்பாகத் தருவேன். கேள்?'' என்றது தேவதை.

''எந்தப் பறவையையும் நீங்கள் சபிக்கக் கூடாது. இதுதான் நான் கேட் கும் வரம்'' என்றது குருவி.

தேவதை திகைப்போடு குருவி யைப் பார்த்தது.

"உங்களுக்கு உதவ மறுத்த பற வைகள் எல்லாமே கெட்டவை அல்ல. பனியின் கொடுமை, அவைகளை அப்படிப் பேச வைத்துள்ளது. அவ்வ ளவுதான்,'' என்றது சிட்டுக் குருவி.


''உனக்கு என்று ஏதாவது கேட்பாய் என்று எதிர் பார்த்தேன். என்னை மடக்கிவிட்டாய்! உன் விருப்பப்படியே யாரையும் சபிக்க மாட்டேன். சரி தானே?'' என்று கேட்ட தேவதை, குனிந்து சிட்டுக் குருவியைத் தன் கை களால் எடுத்து அணைத்துக் கொண்டது.

''இப்பொழுது உனக்கு மகிழ்ச்சி தானே?'' என்று கேட்டது தேவதை.

குருவி கீழே இறங்கிக் கொண்டது.

''மகிழ்ச்சிப் பெருக்கில் உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்'' என்று குனிந்து வணங்கியது.

''நல்ல மனமுடைய உனக்கு, ஏதா வது பரிசுதர விரும்புகிறேன்'' என்று கூறிய தேவதை கையை அசைத்தது.



உடனே, தேவதையின் கைகளில் ஒரு அழகான கோட்டு வந்தது! தங்க இழைகளால், பளபளக்கும் சித்திர வேலைகள் செய்யப்பட்டு, தகதகத்தது அந்தப் பட்டுக் கோட்டு.

''உனக்குத்தான். இந்தப் பட்டுக் கோட்டு நான் தரும் பரிசு. வாங்கிக் கொள்'' என்றது தேவதை.

குருவி வாங்கிக் கொள்ளவில்லை.

''குருவி! இந்த அழகான பட்டுக் கோட்டு உனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லையா? இது உனக்கு வேண்டாமா?'' என்று திகைப்போடு கேட்டது தேவதை.

''கோட்டு அற்புதமாக இருக்கிறது. ஆனால், குளிரால் வாடித் துன்பப்படும் என் இனத்தவர்களுக்குக் கிடைக்காத ஒருதனி வசதியை நான் மட்டும் அடைய எனக்கு விருப்பமில்லை. நீங்கள் மனம் வைத்தால் எல்லாப் பறவைகளுக்கும் பனி, வெயில், மழை எதுவுமே தாக்காத, கழற்ற முடியாத ஒரு மென்மையான அற்புதக் கோட்டைத் தரலாம். கருணை செய்யுங்கள்'' என்று வணங்கிக் கேட்டது குருவி.

''உன்னுடைய உயர்ந்த குணத்திற்கு நான் அளிக்கும் பரிசாக நீ கேட்டதைத் தருகிறேன்'' என்றது தேவதை.

குளிர், மழை, வெயிலால் தாக்காத, கழற்ற முடியாத பட்டுப் போன்ற மென்மையான சிறகுக் கோட்டு பறவைகளுக்கு எப்படி வந்தது என்பது இப்பொழுது தெரிந்ததா?

எருதுக்கு தெரியும்!

பக்கத்துத் தெருவில் இருக்கும் ஒருவருடைய எருது, தன் வீட்டு வேலியை அழித்துத் தோட்டத்துக்குள் புகுந்து செடி, கொடிகளைச் சாப்பிடுவதைக் கண்ட முல்லா, ஒரு தடியை எடுத்துக் கொண்டு அதைத் துரத்துவதற்காக விரைந்தார். முல்லாவின் குரலைக் கேட்ட எருது வெளியே ஓடி தன் சொந்தக்காரனின் வீட்டை அடைந்த சமயம், முல்லாவும் விடாமல் அதன் பின்னே ஓடி அதை எட்டிப் பிடித்து, தம்மிடம் இருந்த தடியால் எருதின் முதுகில் ஆத்திரம் தீரும் வரை அடித்தார்.

இதைக் கண்ட எருதுக்குச் சொந்தக்காரர், ''முல்லா, எதற்காக என் எருதை அடிக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.


அதைக் கேட்ட முல்லா, ''எதற்காக நான் எருதை அடிக்கிறேன் என்பது உமக்குத் தெரியாவிட்டால் பரவாயில்லை. எருதுக்குத் தெரியும்,'' என்று பதில் கூறினார்.

- ஏ. ஹரிகிருஷ்ணன்,
மேலப்பாளையம்.

ஆந்தையார்

பகல் தூக்கம்
சோம்பல் தரும்
ஆந்தை, ஆந்தை - நீ
பள்ளிக்கூடம்
போய் வருவாய்
ஆந்தை, ஆந்தை.


குயிலைப் போல
மறைந்து வாழும்
ஆந்தை, ஆந்தை - இரவில்
கூவிக் கூவிக்
கத்துவதேன்
ஆந்தை, ஆந்தை?



இரவில் முதியோர்
பள்ளி உண்டு
ஆந்தை, ஆந்தை - அங்கே
இசைப் பாட்டுப்
படித்திடலாம்
ஆந்தை, ஆந்தை.

பகல் குருடாய்ப்
போய் விட்டாலும்
ஆந்தை, ஆந்தை - உலகில்
படித்துப் பட்டம்
பெற்றிட லாம்
ஆந்தை, ஆந்தை.

- வரகூர்.
நாரணமணிவண்ணன்.



உடற்பயிற்சி

உயர்ந்த பயிற்சி செய்திடு
உடலைப் பேணி வைத்திடு
வியர்வை பொழிய ஆடுவாய்!
விளங்க நலத்தை நாடுவாய்.

உதைபந் தாட்டம் சடுகுடு
உயரத் தாண்டல் பழகிடு
இதயம் விரிய ஆடுவாய்
இன்பக் காற்றில் ஓடுவாய்

உடலு றுப்பு யாவுமே
உறுதி வந்து மேவுமே
தடையில் குருதி யோட்டமே
தவழச் செய்யும் ஆட்டமே.

- சங்கமங்கலம்,
எம். எஸ். ரவிச்சந்திரன்.



வானவில்

வளைந்து நிற்கும் வானவில்
வண்ணம் ஏழு கொண்ட வில்!
கலைந்து போகு முன்னமே
காண ஓடி வாருங்கள்!

பச்சை நீலம் சிவப்பு என்று
பார்க்க பல வண்ணங்கள்
உச்சி வானம் பூமிக்கு
ஒன்றாய் தோன்றி நிற்குது!



தூவும் மழைத் தூரலை
துளைக்கும் கதிர் வீச்சிலே
தோன்றுகின்ற வான வில்
தொலைவில் ஏனோ நிற்குது!

வான மேகக் கூட்டத்தை
வந்து தொட்டுப் பார்க்கணும்
ஏணியாக நிற்பாயா
என்னைக் கூட்டிச் செல்வாயா?

- கூடலூர் வே. சுந்தரம்.

பிருந்தாவனக்

அறிவுள்ள அரசன்



வெகு காலத்திற்கு முன் நரசிம்ம புரம் என்ற நாடு இருந்தது. அந்நாட்டில் ஒரு வினோதப் பழக்கம். அரசனைத் தேர்ந்தெடுக்க அந்நாட்டின் பட்டத்து யானையின் கையில் மாலையைக் கொடுத்து அனுப்பி விடுவார்கள். யானை யார் கழுத்தில் மாலை அணி விக்கிறதோ, அவரே அந்நாட்டு அரசரா வார். அவருடைய ஆட்சிக் காலத்தின் போது அவருக்கு அனைத்து உரிமையும் உண்டு. ஆனால், தொடர்ந்து நான்கு ஆண்டுகள் மட்டுமே அவர் அரச பதவியில் இருக்க முடியும். நான்கு ஆண்டுகள் கழிந்ததும் அவரை அந்நாட் டிலுள்ள பெரிய கானகத்தில் கொண்டு போய் விட்டு விட்டு வந்துவிடுவார்கள். அங்கு விலங்கிற்கு இரையாகிவிடு வார்கள். இதுவே அந்நாட்டின் பழக்க மாகும்.

அந்நாட்டில் வீரசிம்மன் என்ற ஏழை ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் சிறந்த அறிவாளி. ஒருநாள் அவன் தெருவில் சென்று கொண்டிருந்த போது பட்டத்து யானை அவன் கழுத்தில் மாலையை அணிவித்தது. உடனே அவன் அந்நாட்டின் அரசனாக்கப்பட் டான். அவனுக்கு அப்பொழுது மகிழ்ச் சியாக இருந்தாலும், இன்னும் நான்கு ஆண்டுகள் கழித்து நடக்கப் போகும் நிகழ்ச்சிகளை எண்ணிக் கவலைப் பட்டான். அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

நான்கு ஆண்டுகள் முடிந்தன. வீரசிம்மன் சிறப்பாக ஆட்சி புரிந்தான். மக்கள் அனைவரும் கவலைப்பட்டனர் ஒரு நல்ல அரசரை இழக்கப் போகி றோமே என்று, ஆனால், வீரசிம்மன் மிக வும் மகிழ்ச்சியாக இருந்தான். அதைக் கவனித்த அனைவரும் அதிசயப்பட்ட னர். இதற்கு முன் இருந்த அரசர்கள் அனைவரும் காட்டில் விலங்குகளுக்கு இரையாகப் போவதை நினைத்து மிக வும் மனம் வருந்திச் செல்வர். எனவே, வீரசிம்மன் மகிழ்ச்சியாக இருந்தது அவர்களுக்கு அதிசயமாக இருந்தது. நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கக் காரண மென்ன' எனக் கேட்டனர்.


"நான் ஏன் கவலைப்பட வேண்டும். நான் ஆட்சியில் இருந்த போதே என் நம்பிக்கைக்குரிய காவலாளிகள் மூலம் காட்டை சீர்படுத்தி,மாளிகைகள் மற்றும் வீடுகளைக் கட்டி அதை நாடாக்கி விட் டேன். இனி அங்கு செல்ல நான் ஏன் கவலைப்பட வேண்டும்?'' என்று கேட் டான் வீரசிம்மன்.

தங்கள் அரசனின் அறிவை எண்ணி எல்லோரும் மகிழ்ந்தனர். வீரசிம்மனே ஆயுள்முடியும் வரை அரசனாக இருக்க வேண்டுமெனக் கூறி அவனையே அரச னாக மீண்டும் தேர்ந்தெடுத்தனர். வீர சிம்மன் காட்டை நாடாக்கிய பகுதியை யும் நாட்டையும் சிறப்பாக ஆண்டு வந்தான்.

– எஸ். ஜெகதீசன், இராமநாதபுரம்.

கதையரங்கம்

மழையும் முல்லாவும்



மதக் கொள்கைகளைத் தவறாது கடைப்பிடித்து அறநெறியோடு வாழும் பெரியவர் ஒருவர் முல்லாவின் ஊரில் வாழ்ந்து வந்தார். மக்கள் அனைவரும் அவரிடம் மரியாதை காட்டினர்.

ஒருநாள் திடீரென கனத்த மழை பெய்தது. தெருவில் சென்று கொண்டிருந்த அனைவரும் ஓட ஆரம்பித்தனர். ஓடியவர்களில் மதப்பெரியாரும் இருப்பதைக் கண்ட முல்லா அவரிடம் சென்றார்.

''ஐயா, நீங்களெல்லாம் இப்படிச் செய்யலாமா? கடவுள் மக்கள் மேல் கொண்ட கருணையால் பெய்விக்கும் மழையைக் கண்டு ஓடினால், அது கடவுளை அவமதிப்பதாகாதா?'' என்று வினவினார்.

கடவுள் அருளையும் உயர்வினையும் உணர்ந்த பெரியவர், ''நான் மழைக்கு அஞ்சி ஓட மாட்டேன்'' என்று கூறிவிட்டு மழையில் நனைந்தவாறே மெதுவாக வீட்டிற்குச் சென்றார். அதனால் அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டு நான்கைந்து நாட்கள் சிரமப்பட்டார்.

பிறகு ஒரு நாள் மதப்பெரியார் அவரது வீட்டில் உட்கார்ந்திருக்கையில் மழை பெய்தது. மழையில் நனைந்து கொண்டு முல்லா ஓடுவதைப் பார்த்து அவரைக் கூப்பிட்டு, ''என்ன முல்லா, எனக்குப் புத்திமதி கூறிவிட்டு மழையைக் கண்டு நீங்கள் ஓடுவது கடவுளை அவமதிப்பதாகாதா?'' என்று திருப்பிக் கேட்டார்.

அதற்கு முல்லா, ''ஐயா, கடவுளின் அருள் தான் மழை என்பதை நான் மறுக்கவில்லை. மழையில் நனைவதற்கு அஞ்சி நான் ஓடவில்லை. ஆனால் கடவுள் அருள் பெற்ற மழையை மிதிக்கக் கூடாதே என்றுதான் வேகமாக ஓடுகிறேன்'' என்று சொன்னாரே பார்க்கலாம்.

பெரியவர் வாயடைத்துப் போனார்.

- கண. சிவகுமார்.



கறுப்புக் கைகள்!

ஆலம்பட்டி ஓர் அழகான மலையடிவார கிராமம். செழித்த சோலைகளையும் மரங்களையும் காடுகளையும் கொண்டது. அரச மரத்தடிப் பிள்ளையார் கோயில்தான் சிறுவர்களின் விளையாட்டிடம். இந்த ஊரில் ஆறும் இருந்தது.

சரவணனும், மகேஸ்வரனும் நண்

பர்கள். எட்டாம் வகுப்புப் படிக்கிறார்கள். இதில் சரவணனுக்கு ஏழைகளைக் கண்டால் வெறுப்பு. ஆனால், மகேஸ்வரன் நல்லவன்; ஏழைகளிடம் அன்பும் ஆதரவும் காட்டுவான். சரவணன்,அவர்கள் ஊரிலே உள்ள நாச்சிமுத்துவைக் கண்டாலே கேலியும் கிண்டலும் செய்வான்.

நாச்சிமுத்துவின் தந்தை அவனை வசதியின்மை காரணமாக ஐந்தாம் வகுப்பிலேயே நிறுத்தி விட்டார். நன்றாகப் படிப்பவர்களுக்கு என்றும் சோதனை தானே? நாச்சிமுத்துவும் நன்றாகப் படிப்பவன் தான்.


ஏழை கருப்புசாமியின் மகனான நாச்சிமுத்து சரவணனின் பெரியப்பா முருகவேலிடம் வேலை பார்க்கிறான். முருகவேலின் மாடுகளை ஓட்டிச் சென்று மேய்த்து வருவதுதான் நாச்சிமுத்துவின் வேலை. நாச்சிமுத்து தனது மாடுகளை அங்குள்ள குன்றுக்கு ஓட்டிச் சென்று மேய்த்துவிட்டு மதியம் அங்குள்ள காட்டாற்றில் தண்ணீர் காட்டி விட்டு மந்தைக்கு ஓட்டுவான். நாச்சிமுத்து வெயிலில் இருப்பதால் கருப்பாக இருப்பான். சரவணன் அவன் கருப்பு நிறத்தையே அதிகமாகக் கிண்டல் செய்வான்.

சரவணனும், மகேஸ்வரனும் விடுமுறை நாள்களில் பள்ளியில் படிக்கும் ஓரிரு நண்பர்களைக் கூட்டி வந்து அங்குள்ள ஆற்றின் கரையிலும் தண்ணீரிலும் ஓடி ஆடி விளையாடுவார்கள். ஆனால், சரவணனுக்கும் மகேஸ்வரனுக்கும் நீந்தத் தெரியாது.

"கிட்டு ஸ்கூலுக்குப் போறப்ப ஏணியையும் கொண்டு போறானே... எதுக்கு?"

"அவன் இப்போ ஹைஸ்கூலுக்குப் போறானாம்."

- ஆர். மகாதேவன்,
திருநெல்வேலி - 6.



ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை சரவணன் இரண்டு புதிய சிறுவர்களைக் கூட்டி வந்திருந்தான். அவர்களைக் கூட்டிக் கொண்டு ஆற்றுக்குச் சென்றான். மகேஸ்வரன் அன்று தன் பாட்டி வீட்டிற்குச் சென்று விட்டான். சரவணனும் மற்ற சிறுவர்களும் ஆற்றங்கரையில் விளையாடிவிட்டு ஆற்றில் விளையாடச் சென்றனர். சிறிது நேரம் அங்கு மீன்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். பிறகு ஆற்றில் இறங்கி விளையாடினர்.

சரவணன் அவர்களிடம் தனக்கு நீந்தத் தெரியாது என்று சொன்னால் கேலி செய்வார்களே என்று எண்ணிச் சொல்லவில்லை. அவர்களில் கோபால் என்பவன் ''என்னடா சரவணா, அந்தப் பாறை மேல் ஏறிநிப்பியா?'' என்று கேட்டான்.

அதற்குள் இன்னொரு சிறுவன் ராஜேஷ் ''போடா, அது பெரிய பாறை அதுமேல போய் அவனை நிக்கச் சொல்றியே?'' என்றான்.

சரவணன் அவர்களை ஏளனமாகப் பார்ப்பது போலப் பார்த்துவிட்டு ''ப்பூ இவ்வளவுதானா'' என்று சொல்லி நீரில் இறங்கினான். இருந்தாலும் அவன் உள் மனதுக்குள் பயந்தான். ஏனெனில் அந்தப் பாறையின் பின்புறம் நீர் வேகமாக அடித்துச்செல்லும். அதில் விழுந்து விட்டால் அதிலிருந்து மீள்வது கடினம் நீந்தத் தெரிந்தால் கூட அது கடினமே!

அந்த நேரம் நாசசிமுத்து அங்கு தன் மாடுகளை ஓட்டி வந்தான். சரவணன் ''ஏண்டா கருப்பா, இங்க ஏண்டா ஓட்டி, வந்தே? அந்தப் பக்கம் தூரமா ஓட்டி விடு'' என்றான். நாச்சிமுத்து எதுவும் பேசாமல் சென்று விட்டான். நாச்சிமுத்துவுக்கு நன்றாக நீந்தத் தெரியும். ஏனென்றால்,அவன் ஒவ்வொரு நாளும் ஆற்றிலேயே இருப்பவன்.

சரவணன் அந்தப் பாறைக்குப் போக நீந்துவது போல கால்களையும் கைகளையும் அப்படியும் இப்படியும் ஆட்டினான். மற்ற இரு சிறுவர்களும் அவன் நீந்துவதாக எண்ணிக் கொண்டு அவனையே பார்த்தார்கள். சரவணன் எப்படியோ பாறையின் பக்கத்தில் சென்று விட்டான். நீர் வேகமாக அவனைப் பின்னுக்கு இழுத்தது. அவன் எட்டிப் பாறையைப் பிடித்து மேலே ஏறினான். அந்தப் பக்கம் நீர் திரண்டு

வேகமாகச் செல்வதைப் பார்க்கும் போதே பயமாக இருந்தது!

சரவணனின் கால்கள் இலேசாக வெடவெடத்தன. பாறையின் மேல் ஒரு அடி எடுத்து வைத்தான். மற்றொரு காலையும் எடுத்து வைத்தான். பாறை வழுக்கலாக இருந்ததால் கால் இடறி நீரில் விழுந்தான். அப்படியும் எப்படியோ இரண்டு கைகளாலும் பாறையைப் பிடித்துக் கொண்டான்.

நீரின் வேகம் அதிகமாக இருந்ததால் அவனால் பாறை மீது ஏறமுடிய வில்லை. கைகள் கூட வழுக்கிக் கொண்டே வந்தன. சரவணனுக்குக் கத்துவதை தவிர வேறு வழி ஒன்றும் தெரியவில்லை. ''ஐயோ காப்பாத் துங்க'' என்று அலறினான். கத்திக் கொண்டேயிருந்தான். அப்போது உதவிக்காக இரண்டு கருப்புக் கைகள் நீண்டன! அதைப் பார்த்த சரவணன் அது யார் என்று கூடப் பாராமல் கைகளைப் பற்றிக் கொண்டு பாறை மேல் ஏறினான். ஏறிய பிறகுதான் அந்த உதவிக் கரம் நாச்சிமுத்துவினுடையது என்பது தெரிந் தது. சரவணன் வெட்கத்தால் நாணி னான்!

பிறகு வாய் திறந்து, ''நாச்சிமுத்து என்னை மன்னிச்சுடு. நான் உன்னை எப்படியெல்லாம் திட்டியிருக்கிறேன்! வெறுத்திருக்கிறேன்! கருப்பா, கருப்பா என்று ஏளனமாகக் கூறியிருக்கிறேன்! ஆனால், உன்னுடைய கருப்புக் கைகள் தான் என் உயிரையே காத்தான். நான் உனக்கு மிகவும் கடமைப்பட்டவன்'' என்று கூறினான்.

அதற்கு நாச்சிமுத்து ''நீ நல்லவனாக மாறிவிட்டாய். இனியாவது ஒருவ ருடைய நிறத்தைப் பற்றி ஏளனமாகக் கூறாதே. அதுவே உன்னை உயர்த்தும்,'' என்றான். எல்லோரும் வாயடைத்து நின்றார்கள்.

-பி. சாமிநாதன்,,
மேட்டுப்பாளையம்.



''நூறு வாணவெடி வாங்கிட்டு வரச் சொன்னா, சும்மா வந்து நிக்கிறியே!''

''நீங்கதானே எல்லாத்தையும் நல்லா டெஸ்ட் பண்ணி வாங்கச் சொன்னீங்க... எல்லாமே சூப்பரா வெடிச்சதுங்க....!''

- செவல்குளம் 'ஆச்சா'.

புலிப் பொடி!




ஒரு நாள் முல்லா தம் வீட்டைச் சுற்றி ஒருவிதப் பொடியைத் தூவிக் கொண்டிருந்ததைக் கண்ட எதிர் வீட்டுக்காரர், ''முல்லா என்ன செய்கி றீர்கள்?'' என வினவினார். ''அற்புத சக்தி கொண்ட இந்தப் பொடியைத் தூவி வைத்தால், புலிகள் அருகே வராது'' என்று கூறினார் முல்லா.

''முல்லா, இங்கிருந்து ஐம்பது மைல் வரையில் புலிகள் கிடையாதே!'' என்று வியப்புடன் கேட்டார் எதிர் வீட்டுக் காரர்.


''பார்த்தீர்களா! இந்த அற்புதமான சக்திகொண்ட பொடிதான் புலிகளை ஐம்பது மைல் தொலைவுக்கு விரட்டி விட்டது'' என்று பெருமையுடன் கூறி னார் முல்லா!

-- வி. கே. குமரேசன்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.



சிரிப்...
ஏண்டா! பள்ளிகூடத்துக்கு இவ்வளவு லேட்டா வர்றியே என்ன காரணம்?
எங்க தாத்தாவை முதியோர் பள்ளிகூடத்திற்கு கொண்டு போய் விட்டுட்டு வர்றேன்!
ஒரே ஒரு சின்ன பூச்சியை இத்தனை பேர் தூக்கிட்டு வர்றாங்களே ஏன்?
அது மூட்டைப் பூச்சியாச்சே அதனாலதான்!
கடலூர் கன்னியப்பன்
அவனை கண்டாலே எனக்கு பிடிக்கல!
ஏன்?
எடுத்ததெற்கெல்லாம் 'ஈ'னு பல்லிளிக்கிறான்!
அவனிடம் சர்க்கரை இருக்கும் இடத்தை காட்டினது ரொம்ப தப்பாப் போச்சு!
ஏன்?
அந்த இடத்தை சதா 'எறும்பு' மாதிரி மொய்க்கிறான்
அவன் சுத்த மோசம்!
ஏன்?
எதை வாங்கினாலும் 'கொசுறு' கேட்கிறான்!

சிறையிலிருந்து தப்பியவர்!



அந்தப் பள்ளிக்கு ஒரு மாஜிக்காரர் வந்திருந்தார். மணலைக் கயிறாக்குவது, அந்தரங்கத்தில் அருவி கொட்டுவது, காலித் தொப்பிக்குள்ளிருந்து முயலை வரவழைப்பது என்று பல அதிசயங்களைச் செய்து மாஜிக்காரர் பள்ளிச் சிறுவர்களை அசத்தினார். பிறகு ஒரு கிளியை சாய்ந்த மரப் பலகையின் நடுவில் ஆணியில் உட்கார வைத்து விட்டுக் கத்தி வீசினார். கத்திகள் கிளியைச் சுற்றியிருந்த சிறு வட்டத்திற்குள் சென்று தைத்தன! பிள்ளைகள் மகிழ்ச்சியில் கை தட்டினர்.

மாஜிக்காரர் பிள்ளைகளைப் பார்த்தார்.

''பிள்ளைகளே, கத்தி வீச்சில் நான் எவ்வளவு திறமையானவன் என்பதை நீங்கள் பார்த்தீர்கள். கத்தி வீச்சில் எனது திறமையை இன்னொரு முறை காட்டப் போகிறேன். அதற்கு நீங்களும் ஒத்துழைக்க வேண்டும்'' என்று கூறி விட்டு ஒரு ஆப்பிளை எடுத்தார்.

''பிள்ளைகளே! உங்களில் யாராவது ஒருவர் இங்கு வர வேண்டும் . அவர்கள் தலையில் நான் இந்த ஆப்பிள் பழத்தை வைப்பேன். தூர இருந்து கத்தியை வீசுவேன். ஆப்பிள் பழம் பாதியாகச் சீவப்பட்டு விழும். என்னுடைய கத்தி வீச்சின் திறமையை சற்று முன்தான் நீங்கள் நேரில் கண்டீர்கள். அதனால், என்னுடைய திறமையில் யாருக்கு நம்பிக்கை இருக்கிறதோ, அவர்களில் ஒருவர் இங்கு வாருங்கள். ஆப்பிளைத் தலையில் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று அழைத்தார் மாஜிக்காரர்.

பிள்ளைகள் ஒவ்வொருவராக நழுவினர். ஆபத்துக்குத் துணிய யார் முன் வருவார்கள்? மாஜிக்காரருக்கு ஒரே ஏமாற்றமாக இருந்தது!

''என்னுடைய திறமையை நேரில் பார்த்து ரசித்தீர்கள்! கை தட்டி என்னை ஊக்கப்படுத்தினீர்கள்! இருந்தும் ஒருவர் கூடத் துணிந்து எனக்கு உதவ முன்வர மறுக்கிறீர்களே! இவ்வளவுதானா உங்களுக்கு என் மேல் உள்ள நம்பிக்கை? இங்கு ஒரு தைரியசாலி கூடவா இல்லை?'' என்று அவர் கேட்டார்.

''இதோ, நான் இருக்கிறேன்!'' என்று எழுந்து முன்வந்தான் ஒரு சிறுவன். மாஜிக்காரருக்கு ஒரே மகிழ்ச்சி!

சிறுவனைப் பாராட்டி உட்கார வைத்தார். அவன் தலையில் ஆப்பிள் பழத்தை வைத்தார். தூரத்தில் இருந்து கத்தியைச் சுழற்றி வீசினார். கத்தி ஆப்பிளைக் குறுக்காக இரண்டு துண்டாக்கி விழுந்தது!

எல்லோரும் மாஜிக்காரரைப் பாராட்டினர். பரிசும் பணமும் தந்தனர். ஆனால், மாஜிக்காரரோ அந்தத் துணிச்சல்காரச் சிறுவனைப் பாராட்டி மகிழ்ந்தார். அவன் முன் வரவில்லை என்றால், மாஜிக்காரரின் கத்தி வீச்சுத் திறமையை இரண்டாம் முறையாகக் கண்டுகளிக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்காதே!

அந்தத் துணிச்சல்காரச் சிறுவன் இளைஞனானான். அவனுக்குத் தனது நாட்டின் மீது அளவிட முடியாத பற்று. அந்த நேரத்தில் போயர்வார் என்று ஒரு சண்டை ஆப்பிரிக்காவில் மூண்டது. நேரடியாகச் சென்று நிகழ்ச்சிகளை



எழுதியனுப்ப ''மார்னிங் போஸ்ட்'' என்ற ஒரு பிரபல பத்திரிகைக்கு துணிச்சலான ஒரு நிருபர் தேவைப்பட்டார். அந்த அபாயப் பணிக்குக் கிளம்ப இளைஞன்தானே முன் வந்தான்! தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றான். காந்தியடிகள் கூட இந்த சண்டையில் பிரிட்டிஷ் இராணுவத்தினருக்காக சேவைப் பணிகளில் ஈடுபட்டிருந்தார். இளைஞனை எதிர்பாராத விதத்தில் பகை அணியினர் கைது செய்து காவலில் வைத்தனர். இவரைப் போலவே பலர் அந்தக் காவல் முகாமில் சிறையிருந்தனர்.

காவல் முகாமில் பலத்த காவல் இருந்தது. கைதிகள் யாராவது தப்ப முயன்றால் தயங்காது சுட்டு விட உத்தரவிடப்பட்டிருந்தது.

துணிச்சலுக்குப் பெயர் போன அந்த அதிசய இளைஞன் தப்பி விட முடிவு செய்தான்! உயிரைப் பணம் வைத்து, காவலாளிகள் சிகரெட் பற்ற வைக்க செலவழிக்கும் ஒருசில நொடி இடைவேளையைப் பயன்படுத்தி, மின்சாரம் பாய்ச்சப்பட்டிருந்த முள் வேலித் தடையை, ஒரேயடியில் ஓடும் ரயிலில் ஏறித் தாண்டி தப்பிச் சென்றான்! நிலக்கரி மூட்டைகளுக்குக் கீழே சில நாட்கள் கிடந்தான்! நிலக்கரி உடைக்கும் இயந்திரத்திற்குள் போக வேண்டிய நிலை! நிலக்கரிச் சுரங்க மேனேஜர் கண்ணில் பட்டு காப்பாற்றப்பட்டான்! அவருடைய கருணையினால், போர்த்துக்கீசியர் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதியிலிருந்து தப்பி வெளியே வந்தான்!

போர்த்துக்கீசிய அரசு சும்மா இருக்கவில்லை! அவன் தப்பியதை அது தனக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாக எண்ணிக் கொண்டது! இளைஞனைப் பற்றிய உருவ அடையாளங்களை வெளியிட்டு, உயிருடனோ இல்லை பிணமாகவோ பிடித்துக் கொடுப்போருக்கு கணிசமான தொகையைப் பரிசு தருவதாக அறிவித்தது! இந்த விளம்பரம் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது!

நல்ல காலம். அந்த நிலக்கரிச் சுரங்க மேனேஜர் அவனைக் காசுக்கு ஆசைப்பட்டுக் காட்டிக் கொடுக்காது, அவன் தப்பிச் செல்ல உதவினார். இங்கிலாந்திற்குள் அவன் அடியெடுத்து வைத்ததும், தான் ஏற்கெனவே அங்கு பிரபலமாகியுள்ளதைக் கண்டு திகைத்தான்! எல்லாம் போர்த்துக்கீசியர்கள், அவனைப் பிடிக்க வெளியிட்ட பரிசு விளம்பரத்தின் வேலை!

துணிச்சலுக்குப் பெயர் போன இந்த இளைஞன், தனக்குக் கிடைத்த விளம்பரத்தைப் பயன்படுத்திக் கொண்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றான். எதிர்காலத்தில் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாகி, இரண்டு உலகப் போர்களின் போதும் அரிய வழிகாட்டியாக இருந்து அழியாப் புகழ் பெற்றான். இந்தத் துணிச்சல்கார இளைஞன்தான் வின்ஸ்டன் சர்ச்சில்! இவர் பிறந்த நாள் நவம்பர் 30 (1874).



''பையன் ரொம்பப் பிடிவாதம்!''

''என்ன வேணுமாம்?''

''தீபாவளிக்கு சிங்கம் மார்க் பட்டாசுதான் வேணுமாம்!''

– விசலூர் ஜி. ஜி. கிருஷ்ணன்.

பட்டாசு வெடித்தேன்!

தீபாவளிக் கொண்டாட்டத்தில் பட்டாசுக்குத் தனி இடம் உண்டு. பட்டாசு இடம் பெறாத தீபாவளியும் உண்டோ? அதிலும் சிறுவர் சிறுமியர் உற்சாகத்தோடு, துணிச்சலோடு பட்டாசு வெடிப்பதே ஓர் அழகுதான். ஆபத்தான கேளிக்கைதான் என்றாலும் எச்சரிக்கையுடன் ஈடுபடும் போது மகிழ்ச்சி கூடுகிறதல்லவா? இங்கே சில தம்பி தங்கைகள் தாங்கள் பட்டாசு விட்டபோது ஏற்பட்ட அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள்.



ஒருத்தர் மேல பட்டுடுத்து! சட்டையை உதறினார்! காயம் படலே! சட்டைல கறுப்புக்கறை – மிட்டு



மத்தாப்பைக் கண்டாலே நடுக்கம்! பட்டாசைக் கண்டா கேட்கவா வேணும்? - சுஹாஸினி

வி. அமுதன் : எனக்கு ராக்கெட் விடறதுன்னா ரொம்பப் பிடிக்கும் முதல் வாட்டி ராக்கெட் விட்டபோது அது கர்ர்னு எதிர் வீட்டு மரத்திலே போய் மோதிடிச்சு. இத்தனைக்கும் எங்க வீட்டு மொட்டை மாடிலேருந்துதான் விட்டேன்! அப்படியும் இந்த மாதிரி ஆயிடுச்சு! நல்ல வேளையா அது மரத்துல மோதி நின்னதால யாருக்கும் ஆபத்து இல்லே. அதப் பார்த்து எங்க அப்பா நான் எப்படி ராக்கெட் விட்டேன்னு கேட்டார். பாட்டிலைத் தரையில் வைச்சு, அதுல குச்சி வெச்சு விட்டேன்னு சொன்னேன். உடனே அவர், வாய் குறுகலா ரொம்பச் சின்னதா இருக்கற பாட்டில்ல வைச்சு விடணும்; அப்பத்தான் ராக்கெட் நேரா மேல போகும்; அகலவாய் பாட்டில்ல வெக்கும்போது ராக்கெட் சாஞ்சாப்ல



கம்பு நுனியில ஊதுவத்தி கட்டி, தூரத்துல இருக்கிற பட்டாசை வெடிக்கச் சொல்லுவாங்க! - பி. முத்தழகன்



காம்பவுண்டு சுவர் மேல பட்டாசை வைச்சு திரிக்குத் தீ வைப்பேன்! - வி. அருண்மொழி



பக்கத்துல நின்னேனா? டமால்னு வெடிக்குது! - ஏ. திரவியச் செல்வி

நிக்குதா, அதனால பக்கவாட்ல பாய்ஞ்சிடும்' அப்படின்னு சொன்னார். அதுக்கப்புறம் அதே மாதிரி விடறேன். இப்ப பிரச்னையே இல்ல.

சுஹாஸினி : எனக்கு மத்தாப்பைக் கண்டாலே நடுக்கம்! பட்டாசு வெடிக்கறதுன்னா கேட்கவா வேணும்? வீட்ல அப்பா, பெரியவங்க எல்லாம் விடுவாங்க. நான் தலை மறைவா வீட்டுக்குப் பின்னால போயிடுவேன். அப்படியும் ரொம்பப் பயம்மா இருக்கும். அப். புறம் எங்க மாமாதான் எனக்கு தைரியம் சொன்னாங்க. நீளமான கம்பி மத்தாப்பு விடறதுக்குச் சொல்லிக் குடுத்தாங்க. ஒரு வழியா துணிஞ்சு நான் வாசல் வந்து அப்படி கம்பி



எதிர் வீட்டு மரத்துல போய் மோதிக்கிச்சு! - வி. அமுதன்

மத்தாப்பு விடும்போது, பக்கத்து வீட்டு வெடி 'டமால்'னு சத்தம் போடும். விட எடுத்து வந்த கம்பி மாத்தாப்பை அப்படியே போட்டிட்டு ஓடி வந்திடுவேன்! 'பயப்படாதே, ஒன்னோட மத்தாப்பு எப்படி அழகழகா பூப்பூவா வெளிச்சம் காட்டுது பாரு. இத மட்டும் பார்த்துகிட்டு இருந்தியானா பக்கத்து வெடி ஒன்னை பயமுறுத்தாது. அதே சமயம் தீப்பொறி படாம ஒன் டிரஸ்ஸையும் கவனமா பார்த்துக்க'ன்னு அட்வைஸ் பண்ணிட்டு என் கூடவே இருந்தார் மாமா. பயமெல்லாம் ஓடிப் போச்சு! இப்ப எப்படிங்கறீங்களா? இப்ப நான் வெடி கூட வெடிப்பேன்!

மிட்டு : ஒரு கொட்டாங்குச்சியை எடுத்துக்கிட்டேன். பட்டாசு மேல கவுத்தா மாதிரி மூடினேன். திரி. மட்டும் வெளிய தெரியும். அந்தத் திரிக்கு நெருப்பு வெச்சா டமால்னு பட்டாசு வெடிக்குமா, அப்ப கொட்டாங்குச்சியும் படீர்னு வெடிச்சு சிதறும். இதப் பார்க்க வேடிக்கையா இருக்கும். ஒருவாட்டி அப்படிப் பண்ணினப்போ தெருவிலே போய்கிட்டிருந்த ஒருத்தர் மேல கொட்டாங்குச்சி சில்லு பட்டுடுச்சு. அவர் பயந்து போய் சட்டையை உதறினார். நல்ல வேளை தீக்காயம் படலே. சட்டைல மட்டும் லேசா கறுப்புக்கறை. அவர்கிட்ட போய் மன்னிப்பு கேட்டுக்கிட்டேன். அதுக்கப்புறம் பட்டாசை சும்மாத்தான் வெடிக்கறேன். கொட்டாங்குச்சிக்கு டாட்டா சொல்லிட்டேன்.

ஏ. திரவியச்செல்வி : புஸ்வாணம் விடறது ரொம்ப அழகா இருக்கும். பூப்பூவா 'கொல்'லுனு மேலே கிளம்பி

பலபலன்னு கொட்டும் போது பார்த்துக்கிட்டே இருக்கலாம் போலத் தோணும். எனக்கு பூவாணம் விடறது ரொம்பப் பிடிக்கும்னு எங்க அப்பா எனக்கு நிறைய பூவாணமா வாங்கித் தருவார். 'பூ'தானேன்னு அலட்சியமா யாராவது பக்கதுல நின்னா, வாணம் விடுவேன். ஒருவாட்டி அப்படி நெருப்பு கொளுத்திட்டு பக்கத்திலயே நின்னேனா, 'டமால்'னு வெடிச்சுது புஸ்வாணம்! அவ்ளோதான், பயந்து அலறிட்டேன். புஸ்வாணம் எப்படி வெடிச்சுது? தயார் பண்ற எடத்ல ஏதோ தப்பு நடந்திருக்கு. அதனாலதான் வெடிச்சிருக்கு. அன்னியிலிருந்து கம்பி மத்தாப்பு விடறதுக்குக் கூட நான் தயங்க ஆரம்பிச்சுட்டேன்!

பி. முத்தழகன் : பட்டாசு வெடிக்கற சத்தம் என்னை ரொம்பப் பயப்படுத்தும். என்னோட ஃப்ரண்ட்ஸெல்லாம் அதை வெடிச்சேன், இதை வெடிச்சேன்னு ஆரவாரமா சொல்றப்போ எனக்கும் பட்டாசு வெடிக்கணும் போல ஆசையாயிருக்கும். ஆனா உடனே பயம் வந்துடும். இதப் பாத்த என்னோட அப்பா, நீளமான கம்பு நுனியிலே ஊதுவத்தி கட்டி வெச்சு அதை ஏத்தி அதால, தூரத்ல இருக்கற பட்டாசை வெடிக்கச் சொன்னார். மொதல் தரம் கை நடுக்கத்ல கம்பு, ஊதுவத்தி எல்லாம் ஆடிச்சு! ஆனாலும் ரெண்டு கையாலயும் கம்பைப் பிடிச்சுகிட்டு எலக்ட்ரிக் வெடி வெடிச்சேன். நெருப்பு பத்திக்கிட்டு படபடன்னு வெடிச்சபோது ஹைய்யா ஹையான்னு கத்தி சந்தோஷப்பட்டேன். இப்ப ஊதுவத்தியால தூரத்லேருந்து தானே வெடிக்கற தைரியம் வந்திட்டுது.

வி. அருண்மொழி : தரை சக்ரம், புஸ்வாணம் ஊசி பட்டாசு எல்லாம் வெடிக்கறதிலே திரில்லே இல்லே. யானை வெடி, லட்சுமி வெடின்னு வெடிக்கணும். அது தான்-ஜோர். தரையில வெடியை வெச்சுட்டு குனிஞ்சு தீ வெக்கும் போது, சில சமயம் நெருப்பு பத்திகிச்சா இல்லியான்னு தெரியாது, சந்தேகமா இருக்கும். இன்னும் குனிஞ்சு பார்க்கும் போது திடீர்னு பரபரன்னு திரில தீ பத்திகிட்டு டமார்னு வெடிச்சு நம்மளை திக்குமுக்காட வெச்சுடும். அதுக்குத்தான் நானே ஒரு ஐடியா பண்ணினேன். எங்கவீட்டு காம்பவுண்டு சுவத்து மேல பட்டாசை வெச்சு, ஊதுவத்தியால திரிக்குத் தீ வெச்சேன். நல்லாவும் பார்த்துக்கலாம். சந்தேகப்படாம, பயமில்லாம தைரியமா திரில நெருப்பு புடிச்சிகிச்சுன்னு தீர்மானமா தெரிஞ்சுகிட்டு வெடிக்கலாம்!

படங்கள், பேட்டி : பிரபுசங்கர்



மலைப் பாம்புகள்

★ ஆப்பிரிக்காவில் உள்ள மலைப் பாம்புகளைப் பிடிப்பது மிகவும் அபாய்கரமானது. சாவைத் தழுவிக் கொள்வது போல ஆகும். ஒரு சமயம் ஆப்பிரிக்காவில் பிடிக்கப் பட்ட ஒரு மலைப் பாம்பின் வயிற்றில் சுமார் 30 கிலோ நிறையுள்ள ஒரு மான் இருந்தது!

விந்தை அணில்

★ அணில் தனது வாலை, மரத்துக்கு மரம் தாவும் போது 'ஸ்டீரிங் வீலா'கவும் குறுகலான சுவரின் மீது நடக்கும் போது 'பாலன்ஸ்' கோலாகவும் மேலிருந்து குதிக்கும் போது 'பாராசூட்'டாகவும் பயன்படுகிறது. இதனால் அது 60 அடி உயரத்திலிருந்து குதித்தாலும் அதற்கு அடி ஏதும் படுவதில்லை!



6. சந்தேகம்

அவர்களை அங்கேயே கொண்டு வந்து குடியமர்த்தும் தனது திட்டத்திற்கு அவர்கள் எதிர்ப்பைக் காட்டியது பாஞ்சாவை ஆத்திரமடைய வைத்தது. ஆனாலும், சாதாரணமாக தனக்கு ஆத்திரம் வந்தால் கொடுங்கோலனாக நடந்து தண்டனை கொடுக்கும் பாஞ்சா, என்ன காரணமோ தெரியவில்லை, தனக்கு வந்த ஆத்திரத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அதோடு தன்னுடைய திட்டத்தில் உள்ள நன்மைகளை அவர்கள் உணரும்படி விளக்கத் தொடங்கினான். நாகராஜாவுக்கே அது அதிசயமாக இருந்தது.

''அந்த பாருங்க... அந்த மலைச் சரிவில் தான் இனி புதிய சந்திரகிரி கிராமம் உருவாகப் போகுது. நல்ல காற்று, சுத்தமான தண்ணீர், பகல்ல வேலை, இரவிலே நிம்மதியான தூக்கம், வேளைக்குச் சாப்பாடு... இனி என்ன வேணும்?'' என்று அக்கரையோடு கேட்டான் பாஞ்சா.

கூட்டத்தில் மறுபடி 'சலசல'ப்பு ஏற்பட்டது. ஒருவருக்கொருவர் தாழ்ந்த குரலில் ஏதோ பேசிக் கொண்டனர். அனேகமாக யாருக்கும் அந்தத் திட்டம் திருப்தியளிக்கவில்லை. அவர்கள் தங்கள் விருப்பமின்மையை எப்படி வெளியிடுவது என்று தெரியாமல் தவித்தனர்.

அவர்களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பாஞ்சா, ''என்ன யோசனை, என்னவானாலும் சொல்லுங்க?'' என்று கேட்டு விட்டு தீவட்டி ஒளியில் அவர்கள் முகத்தைத் தன் பார்வையால் ஆராய்ந்தான்.

கூட்டத்தில் துணிந்துவிட்ட ஒருவன், ''ஐயா செய்திருக்கிற ஏற்பாட்டைக் குறை சொல்றதா நினைக்க வேண்டாம்.... இந்த இடத்துல குடி வர்றதால நிறையப் பிரச்னை இருக்கு....'' என்று இழுத்தான்.

''என்ன பிரச்னை?'' என்று பாஞ்சாவின் குரல் எழ, அவன் தயங்கிக் கொண்டே, ''ஒரு நோய், நொடின்னு வந்தா, மருந்து மாத்திரைக்கு எங்கே போறது....? சந்திரகிரியிலேன்னா அந்தண்டை, இந்தண்டை போய் மருந்து வாங்கலாம்... புவனகிரியில பெரிய ஆசுபத்திரி இருக்கு'' என்றான்.

அதைக் கேட்ட பாஞ்சா தன் உடல் குலுங்க 'ஓ'வென்று சிரித்தான். ''அட,

மலைக்கோட்டை மர்மம்




காட்டுப் பயலே... உனக்கு அறிவு இவ்வளவுதான். உங்க கிராமத்து ஜனம் அவ்வளவு பேரையும் இங்க கொண்டு வந்து குடியேத்தறதுக்கு முயற்சி பண்ற நான், இதையெல்லாம் சிந்திக்காம இருப்பேனா...?'' என்றவன், தனக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த மீசைக்காரனைக் காட்டி, ''இதோப் பாருங்க, இவர்தான் இனி உங்களுக்கு வைத்தியர். இவரைப் பார்த்தா நோய், நொடியெல்லாம் சொல்லாம கொள்ளாம ஓடிப் போகும்.... அவ்வளவு கெட்டிக்காரர் மூலிகை வைத்தியத்துல....'' என்று சிரித்தான்.

''எங்க பொழைப்புத்தான் இப்படி ஆகிப் போச்சு. எங்க புள்ளை குட்டிங்களாவது நாலெழுத்து படிச்சு, நல்லா இருக்கணும்னு, வாயைக் கட்டி வயத்தைக் கட்டி... புவனகிரியில படிக்க வைக்கிறோம். அதுவெல்லாம் பாழாப் போகுமே?'' என்று இரண்டொருவர் அங்கலாய்த்தனர்.

பாஞ்சா நெற்றியைச் சுருக்கி அவர்களை உற்றுப் பார்த்தான். ''உங்களுக்கு என்னடா ஆகிப் போச்சு இப்ப....? குடிக்கக் கஞ்சி இல்லாம உடுக்கத் துணி இல்லாமயா இருக்கீங்க இப்போ? நாலெழுத்து படிச்சதுனால உடனே, உம் புள்ளைங்களெல்லாம் ஜனாதிபதி ஆகப் போவுதா...? சின்னப் பயலுகளுக்கு நானே வேற ஒரு ஏற்பாடு செய்திருக்கேன்'' என்றான்.

அவர்கள் புரியாமல் பார்க்க அவன் தொடர்ந்து, நம்ம சரக்கையெல்லாம் வெளியே அனுப்பறதுக்கு இனி சின்னப் பயலுகளைத் தான் பழக்கணும்..... கயிறு வீசறதுக்கு, இரயில்ல தாவறதுக்கு அவனுங்க தான் சரிப்படுவாங்க... அதுக்குத் தனியா கூலி உண்டு'' என்று சொல்லி . விட்டு, பின்னால் நின்று கொண்டிருந்த நாகராஜனை வரும்படி சைகை காட்டினான்.

நாகராஜன் முன்னால் வர, அவனை அவர்களிடம் காட்டி ''இவனைப் பாருங்க... ஆறே மாசத்துல கயிறு வீசறதுல கெட்டிக்காரனாயிட்டான். ஒரு தடவை வேலையை முடிச்சா இவனுக்கு என்ன கூலின்னு இவனையே கேளுங்க''



''என்னது! யானைங்களெல்லாம் இப்படி ஓடுது?''

''யாரோ வேண்டாதவங்க, யானை வெடி வெடிச்சாங்களாம். அதான்...''

- விசலூர் ஜி. ஜி. கிருஷ்ணன்.

என்றான் பாஞ்சா.

நாகராஜன் கூட்டத்தினரைப் பார்த்து உரத்தக் குரலில் ''ஐம்பது ரூபாய்'' என்று கத்தினான்.

கூட்டத்தினர் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்தனர். திருப்திக்கு அறிகுறியாகத் தலையை அசைத்துத் தங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தினர்.

பாஞ்சா அவர்களிடம், ''சரி, இப்ப எல்லோரும் திரும்பிப் போகலாம்.... நாளைக்கே இங்க குடிசை போடற வேலையை ஆரம்பிச்சுடப் போறேன். முக்கியமா ஒரு காரியம் ஞாபகம் வச்சிக்குங்க ...அந்த இன்ஜினியர் பிரேம்நாத் நிலம் வீடுன்னு கதையளப்பான்.ஏமாந்துடாதீங்க'' என்றான்.

சந்திரகிரி ஜனங்கள் 'சரி'யென்று தலையசைத்து விட்டு திரும்பிச் செல்ல ஆரம்பித்தனர். கிழக்கே வெளிச்சம் பரவி இருக்க, பறவைகளின் உதயகால ஆரவாரம் கேட்கத் தொடங்கியது.

மலை மீது ஏறிச் செல்லும் அவர்களை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு நின்ற பாஞ்சா, தன்னருகில் நின்ற நாகராஜன், ''ஐயா'' என்று அழைப்பதைக் கேட்டுத்

வி.ர.வசந்தன்

திரும்பிப் பார்த்தான்.

முகத்தில் அவநம்பிக்கை தோன்ற நாகராஜன், ''இந்த ஜனங்களைக் கொண்டு வந்து இங்கே குடியேத்தறது அவ்வளவு சுலபம்னு எனக்குத் தோணலே'' என்றான்.

பாஞ்சா வியப்புடன் அவனைப் பார்த்து, ''ஏன்டா, நீயே யோசனை சொல்லிட்டு, இப்ப நீயே நம்பிக்கை யில்லாம பேசறியே!'' என்று கேட்டான்.

''நீங்க அடிக்கடி, அந்த மணி மாறனை மறந்துடறீங்க'' என்று பாஞ்சா வின் முகத்தை நிமிர்ந்து பார்த்தான் நாகராஜன்.

பாஞ்சா சற்று எரிச்சலுடன், ''ஏன், அவன் குறுக்கே விழுந்து தடுத்துடு வான்னு சொல்றியா?'' என்று கேட் டான்.

சற்று நேரம் மௌனமாக நின்ற நாகராஜன், ''சர்க்காரு உதவியை இவங் களெல்லாம் வேண்டாம்னு திடீர்னு காணாமப் போனா, எங்கே போனாங்க, என்ன ஏதுன்னு கேள்வி எழும்பும்... அவங்க எங்கே போயிருப்பாங்கன்னு மணிமாறனுக்கு நல்லாவே தெரியும்.... ஏற்கனவே அவன் ஆனந்த்கிட்ட எல்லா விவரங்களையும் சொல்லியாச் சுன்னு நினைக்கிறேன். இதையும் சொல் விட்டான்னா, போலீசுக்காரங்க நேரே இங்க வர வேண்டியதுதான் பாக்கியாக இருக்கும்'' என்றான்.


பாஞ்சா திடுக்கிட்டவனாக, ''என் னடா உளர்றே?'' என்று பதறினான்.

''நான் உளறலே, உண்மையைத் தான் சொல்றேன். மண்டபத்துல படுத் திருந்த அவனை ஆனந்த் அழைச்சுட்டுப் போக வந்தான். அப்போ சந்திரகிரி ஜனங்க தீவட்டிகளைப் புடிச்சுக்கிட்டு மலை மேல ஏறி வரதை ஆனந்த் பார்த் துட்டான். எதுக்கு அவங்க மலை மேல போறாங்கன்னு மணிமாறனைக் கேட் டான்.... அவன் முதல்ல ஒண்ணும் சொல்லலை. இவன் விடாம நீ சொல்ல லேன்னா, நானே அவங்களைப் பின் தொடர்ந்து போய்த் தெரிஞ்சுக்கறேன்னு பிடிவாதம் பிடிச்சான்... அதைக் கேட்டு மணிமாறன் பதறிப்போய், எல்லாத் தையும் விவரமா சொல்றதா சொல்லி, அவன் வீட்டுக்குப் போயிட்டான்'' என்றான் நாகராஜன்.

பாஞ்சாவின் முகம் இறுகிப் போயிற்று. பல்லை 'நறநற'வென்று கடித்து, ''இனியும் அந்தப் பயலை அங்கே விட்டு வைக்கிறது நமக்கு நல்ல தில்லே'' என்று கோபவெறியோடு கடு கடுத்தான்.

நாகராஜன், ''ஐயா, இன்னும் ஒரு முக்கியமான காரியத்தை உங்ககிட்ட சொல்லணும்... இது என் மனசுல இருக் கற சந்தேகந்தான்..... ஆனா, நிச்சயமா நான் நினைக்கறது சரியா இருக்கும்னு தோணுது'' என்று தயங்கினான்.

''என்னத்தை நினைக்கிறே? அதை யும் சொல்லித் தொலை'' என்று அடிக்



குரலில் சலிப்போடு கேட்டான் பாஞ்சா.

நாகராஜன் குரலைத் தணித்துக் கொண்டு, ''நாம எல்லாம் யாரை செத்துப் போயிட்டதா நம்பிக்கிட்டிருக் கோமோ, அந்த மணிமாறனுடைய அப்பா - முத்தையா இன்னும் உயிரோட தான் இருக்கார்... வெள்ளியாற்றங் கரையில இருக்கிற காட்டுக்குள்ள,தலை மறைவா அலைஞ்சிட்டிருக்கார்'' என் றான் மெதுவாக.

பேயறை பட்டவனைப் போல் அதிர்ச்சியுடன் நிமிர்ந்தான் பாஞ்சா. என்ன கேட்பது என்று தெரியாமல் ஒரு நிமிடம் திணறியவன் ''இது... இது... உண்மையா? உனக்கு எப்படித் தெரி யும்?'' என்று தடுமாறினான்.

''அவர் மாதிரியே ஒரு ஆளை, ஒருநாள் வெள்ளியாற்றங்கரையில் பார்த்தேன்... அன்னைக்கு அந்த என்ஜி னியர் புள்ளைகளைப் படகோட ஆற்றுல அவுத்து விட்டேன்னு சொன் னேனே, இந்த ஆள்தான் வந்து அவங் களைக் காப்பாற்றியிருக்காரு! அது மட்டுமல்ல, ராத்திரி நேரங்கள்ல அவர் என்ஜினியர் வீட்டுப் பக்கம் சுத்தற தையும் நான் பார்த்திருக்கேன். நேத்து



ராத்திரி கூட அவரை நான் அவங்க வீட்டுத் தோட்டத்துல பார்த்தேன். தாடி மட்டும் புதுசா இருக்கு.... இல்லேன்னா அவர் ம ணி ம ா ற னோ ட அப்பா முத்தையாதான்'' என்றான் நாகராஜன்.

பாஞ்சாவுக்கு மு க ெம ல் ல ா ம் வியர்த்தது. அவன் அடிபட்ட வேங்கை போலச் சிலிர்த்து, ''டேய், மணி, மருதப்பா எல்லோரும் உடனே இங்க வாங்கடா'' என்று கூவினான்.

குடிலுக்குள்ளிருந்த அவனது அடியாட்கள் என்னவோ ஏதோவென்று ஓடிவர, ''நம்ம நாகராஜன் சொல்றதைக் கேட்டீங்களாடா! அந்த முத்தையா இன்னும் உயிரோட இருக்கானாம்! வெள்ளியாற்றுக் காட்டுக்குள்ள அவன் தலைமறைவா இருக்கான்னா என்னடா அர்த்தம்..? அங்கே இருந்து கொண்டு நம்மைக் கண் காணிக்கறான்னுதானே அர்த்தம்? இப்ப என்ன செய்யலாம்?'' என்று பதற்றத்துடன் புலம்பினான் பாஞ்சா.

முதலில் ஒன்றும் புரியாமல் விழித்த அவனது அடியாள் கூட்டம், நாகராஜனைப் பார்த்து, ''ஏண்டா, உனக்குப் பைத்தியம் ஏதாவது பிடிச்சிருக்கா...? அவன் தான் ரெண்டு வருஷத்துக்கு முந்தியே வெள்ளியாற்றுல மூழ்கி செத்துப் போயிட்டானே..? இப்ப என்ன புதுசா கதை விடறே?'' என்று உறுமினர்.

அதற்கு நாகராஜன் பதில் சொல்வதற்குள் பாஞ்சா முந்திக் கொண்டு, ''இவன் சொல்றது உண்மையாத்தான் இருக்கும்னு எனக்கும் இப்போ தோணுது...! முத்தையா ஆற்றுல மூழ்கிச் செத்துப் போயிட்டதா செய்தி வந்ததே, அதுக்கு ஒரு வாரத்துக்கு முன்னால என்ன நடந்ததுன்னு யோசிச்சுப் பாருங்க...? என் கூட வீணா சண்டை போட்டதுமில்லாம, இந்தச் சந்திரகிரி மக்களை உன்னோட பிடியில் இருந்து விடுவிக்கலேன்னா என் பேரு முத்தையா இல்லேன்னு சபதம் போட்டானில்ல? செத்துப் போயிட்டதா நமக்குப் போக்குக் காட்டிட்டு மறைவா இருந்து நம்மை மாட்டிவிட முயற்சி எடுக்கிறான்னுதான் நினைக்கிறேன்'' என்றான்.

அவனது அடியாட்கள் என்ன சொல்வதென்று தெரியாமல் நிற்க, பாஞ்சா சிந்தனையுடன் அங்குமிங்கும் நடந்தான். பின் ஒரு முடிவுக்கு வந்தவனாக நின்று, ''நீங்க என்ன செய்வீங்களோ தெரியாது. இன்னும் இரண்டே நாள்ல அந்த மணிமாறனை இங்கே கொண்டு வந்து சேர்க்கணும்'' என்றான்.

அவன் ஏன் அப்படிச் சொல்கிறான் என்று காரணம் புரியாத நாகராஜன் ''அவனை இங்கே கொண்டு வர்றதால என்ன லாபம்?'' என்று கேட்டான்.

பாஞ்சா அடிக்குரலில், ''அவனை இங்கே கொண்டு வந்திட்டா,முத்தையா உயிரோட இருந்தா மணிமாறனைத் தேடிக்கிட்டு இங்கே நிச்சயமா வருவான்... அப்படி வந்தான்னா அவங்க ரெண்டு பேரையும் அமுக்கிப் பிடிச்சு நம்ம ஆட்களோட சேர்க்க முயற்சி செய்வோம்... ஒத்து வரலேன்னா, பாஞ்சா என்கிற பாம்போட விளையாடின பலனை அப்பனும், மகனும் அனுபவிக்கட்டும்'' என்று பல்லைக் கடித்தான். அப்போது அவன் கண்கள் சிவந்து இரத்தம் போல் காட்சியளித்தன!

(வளரும்)



முட்டையும், மாவுச் சத்தும்!

கோழி முட்டையில் மாவுச் சத்து குறைந்த அளவு உள்ளது! மொத்த முட்டையில் 0.9 சதவீதம் மாவுச் சத்து உள்ளது! குளுக்கோஸ் (0.5 கிராம்) வெண்கருவில் 0.3 கிராம் மற்றும் மஞ்சள் கருவில் 0.2 கிராம் உள்ளது!

உனக்காகவே உழைக்கிறோம்!



திறந்திருக்கும் வாயைப் போல ஒரு சிறிய பள்ளம் இருந்தது. உள்ளே இருக்கும் நாக்கைப் போல, அந்தப் பள்ளத்துள் ஒரு மாஞ்செடி இருந்தது. வாயின் பற்களைப் போல, அந்தப் பள்ளத்தின் ஓரத்தில் வேலிக்காத்தான் செடிகள் இருந்தன. அவை, அந்த மாஞ் செடிக்குக் காவலாகச் சுற்றியிருந்தன.

மாஞ்செடியைத் தின்பதற்காக, ஆடுகள் அந்தப் பக்கம் வருவது வழக்கம். ஆனால், வேலிக்காத்தானின் முட்கள், அந்த இளஞ்செடியைக் காப்பாற்றி வந்தன. பகைவர்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்து உதவி செய்யும் தொண்டிற்காக, அந்த மாஞ்செடி, வேலிக்காத்தான் செடிகள் மேல் மிகுந்த மதிப்பும் பாசமும் வைத்துக் கொண்டிருந்தது. தன் நன்றியையும் கூறி வந்தது.

தோட்டக்காரன் அந்த மாஞ் செடிக்குத் தினந்தோறும் தண்ணீர் ஊற்றி வந்தான். அந்த நீரை வேலிக்காத்தான் செடிகளும் உறிஞ்சிக் குடித்தன. அந்தப் பள்ளத்தில் தண்ணீர் நிறையத் தேங்கியிருந்த காரணத்தால் தனக்குரிய நீரை, வேலிக்காத்தான் செடிகள் உறிஞ்சுவதற்காக, மாஞ்செடி வருத்தப்படவில்லை.

கோடைக்காலம் வந்தது. தோட்டக்காரன் ஊற்றும் தண்ணீரின் அளவும் குறைந்தது. ஆனால், வேலிக்காத்தான் செடிகள், நீரைக் குடிக்கும் வேலையைத் தவறாமல் செய்தன. தோட்டக்காரன் இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை நீர் ஊற்றும் நிலை வந்தது. அப்போதும் வேலிக்காத்தான்கள் வேகமாகத் தண்ணீரைக் குடித்தன. அதனால், சில சமயம் மாஞ்செடி பட்டினி கிடக்கும் நிலைமையைப் பெற்றது.

ஒருநாள் மாஞ்செடி, ''வேலிக்காத்தான் செடிகளே! என் உணவை நீங்கள் அபகரித்துக் கொள்கிறீர்களே! இது முறைதானா?'' என்று கேட்டது. ''மாஞ்செடியே, உனக்குக் கொஞ்சம் கூட நன்றியே இல்லை. உன்னைக் காப்பாற்றவே நாங்கள் இங்கே இருக்கிறோம். இங்கு ஊற்றப்படும் நீரைக் குடித்து விட்டு உனக்காகவே உழைக்கிறோம். நீ இதை, உணரவில்லை! 'என் பங்கையும் சேர்த்துச் சாப்பிடு' என்றல்லவா நீ சொல்லியிருக்க வேண்டும்? உனக்கு நன்றி உணர்ச்சியே இல்லை'' என்று வேலிக்காத்தான் பேசியது.

மாஞ்செடி ஒன்றும் பேசவில்லை. அ த னா ல் பேச முடியவில்லை. கோடைக்காலம் முடிவதற்குள் அதன் வாழ்க்கை முடிந்து விட்டது! ''உதவி செய்வதாகச் சொல்லிவிட்டு எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு அழிவு வேலை செய்வதே சிலரின் குணம்'' என்று ஒரு குருவி பக்கத்திலிருந்த மரத்திடம் சொன்னது.

– மலையமான்

கேளுங்கள் சொல்லப்படும்!



★ **எ. அபுபக்கர், காயல்பட்டினம்.**

சார்லி சாப்ளின் ஏதோ ஒரு நூல் எழுதியிருக்கிறாராமே? அதன் பெயர் என்ன?

தனது வாழ்க்கை வரலாற்றைத்தான் நூலாக எழுதி வெளியிட்டுள்ளார். இதன் தலைப்பு மை ஆட்டோபையாக்ரபி (MY AUTOBIOGRAPHY) வெளியான ஆண்டு 1964.

★ **ஊ. முத்துமணி, நாகர்கோவில் - 2.**

எல்லா நதிகளுமே மலைகளில் உற்பத்தியாகிக் கடலில்தான் கலக்குமா?

இது பொதுவான விதி. ஆனால் விதியை மீறிய நதியும் இருக்கிறது! ஆப்பிரிக்காவில் அங்கோலா (ANGOLA) என்று ஒரு பீடபூமி. இதில் உற்பத்தியாகிறது குபேங்கா (KUBENGA) நதி. இது கடலில் கலக்காது ஒரு பாலைவனத்தில் இறங்கி மறைந்து விடுகிறது! விதியை மீறிய நதி!

★ **வி. சுந்தர குமார், நாமக்கல்.**

ஹாலி வால் நட்சத்திரத்தைப் பற்றிச் சிறிது சுருக்கமாகக் கூறுங்களேன். எதற்காக ஹாலி என்று இதற்குப் பெயரிடப்பட்டது?

ஆயிரக்கணக்கான வால் நட்சத்திரங்கள் சூரியனை வலம் வருகின்றன. 7000 ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட சூரியனுக்கு அருகில் வரும் வால் நட்சத்திரங்கள் உண்டு! மிகக் குறைந்த கால அளவில் (76 ஆண்டுகளுக்கு ஒருமுறை) சூரியனை வலம் வந்து விடும் ஒரு வால் நட்சத்திரத்தை இனம் கண்டு குறிப்பிட்ட பெருமையும், குறிப்பிட்ட ஒரே வால் நட்சத்திரம்தான் இப்படி 76 ஆண்டுகளுக்கு ஒருமுறை வலம் வருகிறது என்பதைக் கண்டுபிடித்த பெருமையும் எட்மண்ட் ஹாலிக்குஉண்டு. அதனால்தான் இந்த வால் நட்சத்திரத்திற்கு 'ஹாலி'யின் பெயர் சூட்டப்பட்டது.

★ **வ. ஆரணி, வ. கௌதமி, திருவரங்கம்.**

அதிகமாக உப்பைத் தின்றாலோ, உணவில் சேர்த்துக் கொண்டாலோ தாகம் எடுக்கிறதே! என்ன காரணம்?

கரிக்கும்படி சேர்த்துக் கொள்ளப்படும் அதிக உப்பு நமது உடல் திசுக்களிலிருந்து அதிகமான நீரை உறிஞ்சிக் கொள்கிறது. இதன் காரணமாக நமக்கு தாகம் (அதிக நீர்த் தேவை உணர்வு) ஏற்படுகிறது.

★ **வ. கன்னிகா, திருநெல்வேலி - 6.**

மீன்கள் தூங்குமா?

கண்டிப்பாகத் தூங்கும்! ஆனால் அவைகளுக்குக் கண்ணிமைகள் கிடையாது என்பதால் கண்களை மூட முடியாது. திறந்தபடிதான் இருக்கும். அவை நீரில் அசையாது இருப்பதைக் கொண்டே தூங்குவதை அறியலாம். ஆனால், மீன்கள் மனிதர்களைப் போல் குறட்டை விடாது!

★ **மு. ராஜசேகரன், குண்டூர், ஆந்திரா.**

நான் ஒரு கையெழுத்து (ஆட்டோகிராப்) சேகரிப்பவன். இந்தப் பொழுது போக்கைப் பற்றி ஏதாவது புத்தகம்



இருக்கிறதா? எங்கு கிடைக்கும்?

கையெழுத்து சேகரிப்பது பற்றித் தமிழில் புத்தகம் வெளிவந்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஆங்கிலத்தில் "THE GUINNESS BOOK OF AUTOGRAPHS" என்று ஒரு பெரிய புத்தகம் (244 பக்கம்) பிரபலமானவர்களின் கையெழுத்துக்களைக் கொண்டது வெளிவந்துள்ளது. இதை எழுதி வெளியிட்டுள்ளவர் RAY RAWLINS, புத்தகம் கிடைக்குமிடம் GUINNESS SUPERLATIVES Ltd, 3, CECIL COURT, LONDON Rd, ENIFIELD, MIDDLESEX, GREAT BRITAIN.

★ கோ. பரிசுத்தம், நாகை.

தனது செயலில் தவறு உள்ளது என்பதை, காந்திஜியைத் தவிர வேறு யாராவது வெளிப்படையாக ஏற்றுக் கொண்டவர்கள் இருக்கிறார்களா?

ஓ! இருக்கிறார்களே! ஏழு ஆண்டுகள் இரவு பகல் கண்விழித்து முதல் ஆங்கில அகராதியைத் தொகுத்து சாதனை புரிந்தவர் ஜான்சன். இந்த அகராதி வெளியானதும் உலகம் முழுவதும் பாராட்டிப் புகழ் மாலை சூட்டிய போது, இதில் உள்ள இரண்டொரு தவறுகளை ஒரு பெண்மணி எடுத்துக் காட்டினாள்! 'அவை நான் செய்த தவறுகளே! அதற்கு முழுப் பொறுப்பும் நானே!' என்றார் ஜான்சன்! இந்தப் பெருந்தன்மை; தவறை ஒப்புக் கொள்ளும் குணம் எத்தனை பேருக்கு வரும்?

★ வ. கமலவல்லி, வ. கமலச் செல்வி, தரங்கம்பாடி.

தக்காளிப் பழம் எந்த நாட்டைச் சேர்ந்தது?

இதன் பிறப்பிடம் அமெரிக்கா. எல்லா நாட்டவரும் விரும்பி உண்ணும் இந்தத் தக்காளிப் பழம், பழவகையைச் சேர்ந்தது அல்ல என்று அமெரிக்க சுப்ரீம் கோர்ட் 1893-ல் தீர்ப்பு வழங்கியுள்ளது! அதனால் தக்காளியைக் காய் என்றே கூறிப் பழகிக் கொள்ளலாம்!

சேரநம்பி

★ து. தமிழ்ச் செல்வி, போடிநாயக்கனூர்.

ஓவியர்களில் பெண்கள் இருக்கிறார்களா? கல்கி நிறுவனப் பத்திரிகைகளில் (கோகுலம் உட்பட) படம் போடும் லதா, மாயா, செல்லம், கலா, லலிதா, சுமதி எல்லோரும் பெண்கள்தானே?

லலிதாவைத் தவிர மற்றவர்கள் எல்லாம் புனைபெயரில் படம் வரையும் ஓவியர்கள். அண்மைக்கால இந்திய ஓவியர்களில் உலகம் முழுதும் அறிமுகமாகியுள்ள அரச குடும்பத்தைச் சேர்ந்த ராணி ருக்மணி பாய், புகழ்பெற்ற ராஜா ரவிவர்மாவின் உறவினர். இவரது கேன்வாஸ் ஓவியங்களை மரபு மீறாத புதுமை என்கிறார்கள்.

★ சு. கதிரேசன், பவானி.


விண்வெளிப் பயணத்தில் "பிராமரோ" என்று அடிக்கடி குறிப்பிடுகிறார்களே, அது என்ன?

"பிராமரோ" என்பதை விண்வெளிப் பயணத்தில் கேட்டிருக்க மாட்டீர்கள். சந்திரனில் குடியேறுவதைப் பற்றி விளக்கும் போது கேட்டிருப்பீர்கள். அமெரிக்காவின் அப்பலோ-13 விண்வெளிக்கலம் சந்திரனில் தரையிறங்கியது தெரியுமல்லவா? இந்த இடம்தான் "பிராமரோ" என்று குறிப்பிடப்படுகிறது. இது கரடுமுரடான மேட்டுப் பகுதி. இதற்கு முன்பு சந்திரனில் தரை இறங்கிய விண்வெளிக் கலங்கள் சமதரையில்தான் இறங்கின.

★ க. கமலவேலன், குளித்தலை.

பாரதியாரின் எந்தப் பாடல் முதன் முதலாக திரைப் படத்தில் ஒலித்தது?

"வாழ்க நிரந்தரம்; வாழ்க தமிழ் மொழி" என்ற பாடல்தான் முதன் முதலில் ஒலித்தது. திரைப்படத்தின் பெயர் மேனகா. இது வெளிவந்த ஆண்டு 1935.









மறக்க முடியாதது!

பாரதத்தின் பிரதமரான பிறகு அமெரிக்காவின் விருந்தினராக நேரு நியூயார்க் சென்றிருந்தார். உலகப் புகழ் பெற்ற நிருபர்களின் இடுக்கிப் பிடிக் கேள்விகளுக்கு நேரு திறமையாகப் பதில்களைக் கூறி அயரவைத்துக் கொண்டிருந்தார்.

''உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத,மகிழ்ச்சியான சம்பவம் எது?''

தனக்குத் திருமணமானதையோ, பாரதம் சுதந்திரம் பெற்றதையோ நேரு குறிப்பிடப் போகிறார் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் நேரு என்ன கூறினார் தெரியுமா?

''எனது பிறந்த நாளன்று நான் குழந்தைகளுடன் கழித்த அந்த மகிழ்ச்சியான நிகழ்ச்சியே எனக்கு மறக்க முடியாதது; மகிழ்ச்சியானது!''

புனிதமான பேழை!

அமைதிப் பிரியரான நேருவுக்கு,

3,262 நாட்கள் சிறையிலிருந்தவர்!







புத்தரிடமும், சமாதானத்திற்கான அவரது போதனைகளிலும் ஈடு இணையற்ற பிடிப்பு இருந்தது.

கௌதம புத்தரின் தலைமைச் சீடர்களில் சாரீர புத்தன், மொக்கலான் ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் மறைந்ததும் அவர்களது புனித உடலின் எஞ்சிய எலும்புகள் ஓர் அழகான பேழையில் இடப்பட்டு சாஞ்சியில் உள்ள பௌத்த ஸ்தூபியில் புதைக்கப்பட்டு இருந்தது. இந்த அரிய செய்தி யாருக்குமே தெரியவில்லை. ஆனால், பிரிட்டிஷ் வரலாற்று ஆராய்ச்சியாளரான கன்னிங்ஹேம் பிரபு, இதைக் கண்டுபிடித்தார். வெளியார் யாரும் அறியு முன்பே, சாஞ்சியில் உள்ள ஸ்தூபியைத் தோண்டி அந்தப் புனிதப் பேழையை எடுத்து, இரகசியமாக இங்கிலாந்துக்கு அனுப்பி விட்டார். அது பிரிட்டிஷ் மியூசியத்தில் இடம்பெற்ற பிறகுதான் எல்லோருக்கும் தெரிந்தது.

கன்னிங்ஹேம் பிரபு இந்தியர்களை ஏமாற்றி விலை மதிக்க முடியாத, புனிதமான், அரிய பொக்கிஷத்தைத் தன் நாட்டுக்கு அகற்றி விட்டார் என்று நேரு வருந்தினார். பாரதம் சுதந்திரம் பெற்றதும், 'அந்தப் பேழையைத் திரும்ப பாரதத்திடம் ஒப்படைக்க வேண்டும்' என்று நேரு இங்கிலாந்து மன்னருக்கு விண்ணப்பித்துக் கொண்டு, விடாமல் கேட்டும் வந்தார். இறுதியில் இங்கிலாந்து விட்டுக் கொடுத்தது! பேழையைத் திரும்பத் தர இசைந்தது! 1949 ஆம் ஆண்டு இதற்கான விழா ஒன்று கல்கத்தாவில் சிறப்பாக நடைபெற்றது! புனிதப் பேழையை நேருவே விழாவில் பெற்றுக் கொண்டார்.

கிரிக்கெட் ஆடினார்!

நேருவுக்கு விளையாட்டில் ஈடுபாடு இருந்தது. கிரிக்கெட் போட்டிகள் நடக்கும் போது ஓய்வு கிடைத்தால் தவறாது போவார். ஒருமுறை பிரதமரின் வெள்ள நிவாரண நிதிக்குப் பணம் சேர்க்க கிரிக்கெட் போட்டியை நடத்த வேண்டும் என்ற யோசனை கூறப்பட்டது. நேரு இதை வரவேற்றார். அதோடு ஒரு அணிக்குத் தானே தலைவராக இருக்கவும் முன்வந்தார். எதிர் அணித் தலைவர் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதா கிருஷ்ணன்! நேரு தானே ஏற்பாடுகளைக் கவனித்தார்.

தலையில் கிரிக்கெட் தொப்பி



யோடு, கையில் கிரிக்கெட் மட்டையைப் பிடித்தபடி நேரு ஆடிய கிரிக்கெட் மேட்சிற்கு நல்ல வரவேற்பு. நிதி எதிர்பார்த்த அளவுக்கு மேல் குவிந்தது.

நகைச்சுவை ரசிகர்!

நேருவுக்கு நகைச்சுவையும், கேலியும் மிகவும் பிடித்தமானவை. ஒரு முறை நேரு, லால் பகதூர் சாஸ்திரியோடும், கோவிந்த வல்லப பந்தோடும் விமானத்தில் பயணம் செய்தார்.

சாஸ்திரி மெலிந்த உருவம் உடையவர். பந்த் கம்பீரமான பெருத்த உடல் கொண்டவர். விமானத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டது.. ஆபத்து ஏதும் இல்லாது டில்லி விமான நிலையத்தில் விமானத்தைப் பத்திரமாகக் கொண்டு வந்து 'சேர்க்க விமானி படாதபாடு பட்டார். ஆனால், தரையிறங்கும் போது விமானம் அதிர்ச்சிக்குள்ளாகி, அதன் உள்ளே இருந்தவர்கள் எல்லாம் புரண்டனர். நேருவும் உருண்டார். அவர் மேல் யாரோ வந்து விழுந்தார்கள்! நேரு சமாளித்துக் கொண்டு எழுந்தார். தன் மேல் விழுந்தவர் சாஸ்திரி என்பது தெரிந்தது.

''நல்லவேளை தப்பினேன்! சாஸ்திரி இல்லாமல் பந்த் என் மேல் விழுந்திருந்தால் என் கதி என்ன ஆகியிருக்கும்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார் நேரு.

ஆபத்தான நிலையிலும் கூட மனம் கலங்காது சிரிக்கும் துணிவு படைத்தவர் நேரு!


3,262 நாட்கள் சிறையிலிருந்தவர்!

விடுதலைப் போராட்டத்தில் நேரு சிறையிருந்த மொத்த நாட்கள் எவ்வளவு தெரியுமா? இலட்சுமணபுரியில் - 87, நாபாவில் - 265, நைனி (அகமதாபாத்)யில் - 12, பரேலியில் - 180, டேராடூனில் - 99, கல்கத்தாவில் - 612, அல்மோராவில் - 569, கோரக்பூரில் - 398, அகமது நகரில் - 1,040 நாட்கள். ஆக மொத்தம் 3,262 நாட்கள்!

குழந்தைகளுக்கும் நேரம் ஒதுக்கினார்!


எந்த நாட்டுக்குச் சென்றாலும் சரி, அந்த நாட்டுக் குழந்தைகளைச் சந்தித்து, அவர்களிடமிருந்து மலர்ச் செண்டுகளைப் பெற தனியாக நேரம் ஒதுக்கிய ஒரே உலகத் தலைவர் நேருதான்!

குழந்தைகள் தினத்தைக் கொண்டாடும் போது நேருவுக்கு இருந்த பரந்த மனம், நாட்டுப் பற்று, தியாக உணர்வு, நமக்கும் வர வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொள்வோம்!



'தன்னம்பிக்கை'
ஒரு நாள் காட்டில்- வழி தவறிச் சென்ற பசு ஒன்று வீடு திரும்பத் தெரியாமல் அலைந்து கொண்டு இருந்தது!
கடைசியில் ஒரு குளத்தில் தண்ணீர் குடித்துக் கொண்- டிருந்தது.
அப்போது- அந்த வழியாக வந்த புலி ஒன்று பசுவைக் கண்டது.
ஆஹா! நல்ல பசு! கொழுத்த பசு!
புலி தன்னைக் கொல்ல வருவதை அறிந்த பசு-
புத்தியில்லாத புலியே! நீயும் நானும் ராம ராஜ்யத்தில் எப்படியிருந் தோம் தெரியுமா?
1


ஒற்றுமையா இருந்தோம்!
பசு தப்பிக்க ஏதோ தந்திரம் சொல்வதை அறிந்த புலி—
நல்ல கற்பனை!
இதைக் கேட்ட பசு—
உனக்குக் கொஞ்சம் கூட ரசிக்கத் தெரியலையே!
என் ரசனை எல்லாம் உன்னைக் கொன்று தின்பதில் தான்!
புலி கூறியதைக் கேட்ட பசு பயந்து நடுங்கியது—
ஐயோ! கொல்லாதே! பாவம்!
சரி! என் பசியைத் திருப்தி படுத்தியாவது புண்ணியத்தை சம்பாதித்துக் கொள்...


முடியாது
நானும் பசியோடு இருக்க முடியாது!
வேதனையுடன் கடவுளை வேண்டியது பசு—
அடராமா! உன்னை நம்பிய எனக்கா இந்த கதி!
அப்போது— பசுவின் மீது பாய்ந்தது புலி—
உனக்கென்ன? தன்னை நம்பாத எவனுக்குமே இந்த கதிதான்! உன்னையும் உன் கொம்புகளையும் நம்பியிருந்தால் என்னை விரட்டி இருக்கலாமே எளிதில்.

உங்கள் நூலகம்



மலர்கள் சொன்ன கதை - ஜெ. எத்திராஜன், பக் 64, ரூ 10/- குழந்தை இலக்கியக் கழகம், 72, கிருஷ்ணா நகர், (மூவரசம்பட்டு அருகில்), சென்னை - 600 091.

இந்த நாவலைத் தந்துள்ள ஆசிரியர் சிறுவர் இலக்கியத்தில் 40 ஆண்டு கால அனுபவமுடையவர் என்பது நூலின் தனிச் சிறப்பு. ஐந்தாவதாக வேண்டாத பெண் குழந்தையாகப் பிறக்கும் தங்கையை, வறுமை நிலை காரணமாக ஒழித்து விட முயலும் தந்தையின் பிடியிலிருந்து காக்கவும் வேண்டாத குழந்தையிடம் அப்பாவை அன்பு செலுத்த வைக்கவும் நான்கு அக்காக்களும் எடுக்கும் முயற்சி தான் இந்த நாவல். நான்கு அக்காக்களும் நிகழ்ச்சிகளை மாறி மாறிக் கூறி கதையைச் சுவையாக ஒட்டுகிறார்கள். பெண் குழந்தைகள் ஆண்டுக்குப் பெருமை சேர்க்கும் நாவல். மறைந்த ஓவியர் விஜயாவின் ஓவியங்கள் நூலுக்கு அழகூட்டுகின்றன.

பூஞ்சிட்டுகள் ஆட தேன் சொட்டும் பாடல்கள் - எஸ். ஆர். ஜி. சுந்தரம் - பக். 80 விலை 9.50 - பாற்கடல் பதிப்பகம், 95/2 சபாபதி நகர் 4வது தெரு, மூவரசம்பேடு, சென்னை - 600 091.

குழந்தைகளுக்குப் பாடல்கள் எழுதத் தனித்திறமை தேவை. அந்தத் தனித்திறமை குழந்தைகளோடு பழகி, ஆடிப் பாடி, அவர்களுடைய நிலைக்கு இறங்கி மகிழ்ந்தால் மட்டுமே கிடைக்கும் அனுபவம். இந்த அனுபவத்தைப் பெற்றுள்ள விரல் விட்டு எண்ணக்கூடிய கவிஞர்களுள் எஸ். ஆர். ஜி. சுந்தரத்திற்குத் தனி இடமுண்டு. சென்னையை அடுத்துள்ள மூவரசம்பட்டில், பாற்கடல் சிறுவர் சங்கம் என்ற அமைப்பை நிறுவி பல ஆண்டுகளாகக் குழந்தைகளோடு பழகி வருபவர். அவர் படைத்துள்ள, விளையாட்டு- சிந்தனை மிளிரும் பாடல்களின் தொகுப்பே இந்த நூல். பாடல்களின் நயத்தை உணர இதோ ஒரு பாடல் :

அழகு மிக்க கிராமமாம்
அங்கே ஒரு எருமையாம்!
நிலத்தை உழும் எருமையாம்!
நீலன் வளர்க்கும் எருமையாம்!
....
நன்றி கொன்ற நீலனை
நல்ல எருமை பிரிந்ததாம்!
இரையை எங்கும் தேடியே
எருமை நாளும் இளைத்ததாம்!

இனிய சந்தங்கள் இயல்பாகவே தாளம் போட வைக்கின்றன. குழந்தைகள் கண்டிப்பாக மகிழ்ந்து பாடுவார்கள்.

ரோபோ எனப்படும் இயந்திர மனிதனைத் தெரிந்து கொள்ளுங்கள் - ஆசிரியர் குழு- பக். 102, ரூ. 10.50 மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17,

ரோபோ என்றாலே ஏதோ தொழிற்சாலைகளில் இயந்திரங்களோடு கடினமாக உழைக்க ஏற்படுத்தப்பட்ட இயந்திரப் படைப்பு என்ற எண்ணம் எவ்வளவு மடமையானது என்பதை இந்த நூல் காட்டுகிறது. செருப்புத் தைக்க, தாதியாகப் பணிசெய்ய, குழந்தைகளைக் கவனிக்க, காவல் காக்க, டாக்டருக்கு உதவ என்று இப்படி எவ்வளவோ எண்ணில்லாத பணிகளையும் ரோபோ செய்கிறது என்பதை நூல் உணர்த்துகிறது. புதிய தகவல்களைத் திரட்டுவதில் ஆசிரியரின் கடின உழைப்பை உணர முடிகிறது. எளிய நடை பாராட்டப்பட வேண்டிய ஒன்று. பயனுள்ள படைப்பு.

மதிப்புரைக்கு நூல் அனுப்புவோர் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். ஆசிரியர் கோகுலம், ரேஸ்கோர்ஸ் சாலை, சென்னை - 32.



காசுக்கா ஓசிக்கா?

பளபளக்கும் தார்ச் சாலையில் சரியான வெயில் நேரத்தில் அந்தக் கார் மதுரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

''பிரபு! காலையிலே தோசை சாப்பிட்டு விட்டுச் சரியாத் தண்ணி கூடக் குடிக்காம அவசர அவசரமா கிளம்பிட்டேன். இப்ப ஜில்லுனு சர்பத்தோ ஐஸ் மோரோ சாப்பிட்டா நல்லா இருக்கும். இல்லையா?'' என்று கேட்டான் பின் சீட்டில் இருந்த ராஜேஷ்.

''ஆமா, எனக்குக் கூட நாக்கெல்லாம் உலர்ந்து போச்சு,'' என்றான் அவனருகிலே இருந்த பிரபு.

''அதோ அந்த வேப்பமரத்துக்குப் பக்கத்திலே ஒரு இளைஞர் கையிலே குடத்தோட நிக்கறாரே, அவர்கிட்டே கேட்டுப் பார்ப்போம். டிரைவர்! காரை மெதுவா அவர் பக்கம் நிறுத்து.''

ராஜேஷ் சொன்னபடி டிரைவர் காரைக் கொண்டு போய் நிறுத்தினான்.

ஆனால், அந்த ஆளோ... இவர்களைக் கவனியாது எதிரே சைக்கிளில் இரட்டைக் குடத்தைக் கட்டி நீர் கொண்டு வந்து கொண்டிருந்த அந்தப் பதினைந்து வயதுச் சிறுவனைப் பார்த்து,

''கபில்.. டேய்... கபில்...! எனக்கு ஒரு தோண்டி தண்ணி ஊத்துடா'' என்று சற்று உரக்கக் கத்தினான்.

''மன்னிச்சுக்கங்க முனியாண்டி அண்ணே! காசு கொடுக்காம நான் தண்ணிய ஊத்தறாப்பலே இல்லே'' — படீரென்று பதில் சொல்லி விட்டு சைக்கிளில் ஏறி அமர்ந்து வலப்பக்கம் உள்ள பாதையை நோக்கி சைக்கிளைச் செலுத்தினான் கபில்.

ராஜேஷ், காருக்கு வெளியே தலையை நீட்டி முனியாண்டியைப் பார்த்து, ''பக்கத்திலே ஏதாவது சர்பத், இளநீர் விக்கற கடை இருக்கா?'' என்று வினவினான்.

''இங்கிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்திலே ஒரு பெட்டிக் கடை இருக்குங்க. அங்கே எல்லாம் விக்கறாங்க.''

கடை முன்னால் கார் நின்றது. ஆளுக்கு ஒரு இளநீரை வாங்கி உறிஞ்ச ஆரம்பித்தனர் நான்கு பேரும்.

அப்பொழுது,

''கடைக்கார அண்ணே! நீங்க சொன்னபடி ரெண்டு குடம் தண்ணிய உங்க வீட்டிலே கொடுத்துட்டேன். உங்களுக்குத் தண்ணி போதுங்களா?'' என்று யாரோ கேட்பது கேட்டு நால்வரின் கவனமும் குரல் வந்த பக்கத்தில் திரும்பியது.

அங்கே கபில்தான் சைக்கிளை நிறுத்தியபடி கடைக்காரரிடம் கேட்டுக் கொண்டிருந்தான்.

''என்ன கடைக்காரரே! இந்த ஊர்லே குடிக்கத் தண்ணி கூட காசு கொடுத்து வாங்கறீங்க? இதுக்கு எங்க டவுனே பரவாயில்லை போலிருக்கே'' - கடைக்காரரின் வாயைக் கிளறினான் ராஜேஷ்.

டி. ஜானகி

''அதை ஏன் கேட்கறீங்க? இந்த வருஷம் மழையே பெய்யலையே! இந்த ஊரிலே குடிநீர் கிடைக்கறது ரொம்ப கஷ்டம். பஸ் போற தடத்திலேயே இங்கேயிருந்து இரண்டரை கிலோ மீட்டர் தூரத்திலே ஆண்டவன் கேணின்னு ஒரு பழைய காலத்துக் கேணி இருக்கு. அதுக்குக் கைபிடிச் சுவரோ.. ராட்டினமோ கிடையாது. கல்லாலே படிக்கட்டு மாதிரி செதுக்கியிருக்காங்க. தண்ணி பாதாளத்திலே இருக்கும். ஜாக்கிரதையா ஏறி இறங்கணும். இப்ப நீங்க பாத்தீங்களே, இந்தப் பையன்தான் அங்கேயிருந்து நல்ல தண்ணியே கொண்டு வந்து கொடுக்கறான். ஒரு குடம் ரெண்டு ரூபாய்னு''கடைக்காரர் சொன்னார்.

கை வாட்சைப் பார்த்த ராஜேஷ், ''கிட்டத்தட்ட அரை மணி நேரமா உங்க கடையிலே இருந்திருக்கோம்! வர்றோம்'' என்று விடைபெற்றுக் கொண்டு காரை நெருங்கினர்.

''டிரைவர்! வண்டியை நான் ஓட்டறேன். நீ கொஞ்சம் ஓய்வு எடுத்துக்க'' என்று கூறிய ராஜேஷ், டிரைவர் சீட்டில் அமர்ந்தான். அவனுக்குப் பக்கத்தில் டிரைவர். பின் சீட்டில் பிரபுவும், வக்கீலும்.

எதிரே கார் மீது மோதுவதைப் போல அசுர வேகத்தில் ஒரு லாரி வந்து கொண்டிருந்தது. மோதலைத் தவிர்ப்பதற்காக இடது பக்கம் காரை வளைத்தான் ராஜேஷ். மோதல் தவிர்க்கப் பட்டது.

ஆனால்... காரைப் பார்த்தபடியே நீர் கொண்டு வந்து கொண்டிருந்த அந்த வயதான பெண்மணியின் மீது கார் லேசாக மோதி... அவள் தடாலென்று கீழே விழுந்தாள்.

காரை விட்டு இறங்கிய ராஜேஷின் உடம்பு பதட்டத்தினால் இலேசாக நடுங்கிக் கொண்டிருந்தது.

இதற்குள் அந்த மூதாட்டி தன்னை சமாளித்துக் கொண்டாள். புடைவை மீது படிந்திருந்த மண் துகள்களைத் தட்டி விட்டாள்.

''தம்பி. தப்பு பூரா உன் மேலே இருக்குன்னு நான் சொல்ல மாட்டேன். உன் காரைப் பார்த்துக்கிட்டே வந்தேனா, நீ திடீர்னு காரை திருப்பறதுக்கும் நான் கல் தடுக்கி விழப் போறதுக்கும் சரியா இருந்திச்சு. நல்ல காலம். ஆண்டவன் இந்த மட்டும் காப்பாத்தினாரு. இப்ப என்னோட கவலை எல்லாம் என்ன தெரியுமா? குடிக்கக் கொண்டு வந்த தண்ணியெல்லாம் கொட்டிப் போயிடுச்சேன்னுதான். இப்ப வூட்ல சொட்டுத் தண்ணி இல்லே. என்ன செய்யப் போறேனோ?'' - அவள் குரலில் ஆயாசம் தெரிந்தது. இயலாமை தொக்கி நின்றது.

அப்போது...

வியர்வை உடலைக் குளிப்பாட்ட... மூச்சு வாங்கியபடி கபில் இரண்டு குடங்களிலும் நீரை நிரப்பியபடி ரோடில் வந்து கொண்டிருந்தான். இவர்களைப் பார்த்ததும் சைக்கிளைக் கொண்டு வந்து நிறுத்தினான். முகத்து வியர்வையை சட்டையால் துடைத்துக் கொண்டான். நடந்ததை ஓரளவு அவனால் ஊகித்துக் கொள்ள முடிந்தது.

''பாட்டி! பெருமாள் அண்ணன் தானே தினம் உங்களுக்குத் தண்ணி கொண்டு வந்து கொடுக்கும்?''



''எம் மவன் பெருமாளைப் பத்திக் கேக்கறியா? அவனுக்குக் காய்ச்சல் அடிக்குதே?''


''அப்ப தண்ணியை நீங்க எங்கேந்து கொண்டு வந்தீங்க? ஆண்டவன் கேணி கிட்டேக் கூட நான் உங்களைப் பார்க்கலையே?''

''ஏண்டா கபிலு! என்னால அம்புட்டு தூரம் போய் அந்தக் கேணிக் குள்ளாற இறங்கி தண்ணி கொண்டு வர முடியுமா? எனக்கு வசதி பத்தாதுன்னு உனக்குத் தெரியும். ராசாத்தி இல்லே.. அவகிட்டேயிருந்து கடனா இந்தத் தண்ணியை வாங்கியாந்தேன். தண்ணிக்கு தண்ணி.. எம் மவன் குணமான பிறகு தர்றதா. ஆனா அது கூட எனக்கு ஒட்டலை பாரு''—அந்த மூதாட்டி புலம்ப ஆரம்பித்தாள்.

''பாட்டி! கவலைப்படாதீங்க. பெருமாள் அண்ணன் உடம்பு குணமாயி தண்ணி எடுக்கற வரைக்கும் நான் தினம் உங்களுக்குத் தேவையான தண்ணியைக் கொண்டு வந்து ஊத்தறேன். இப்ப நீங்க மெதுவா உங்க வீட்டுக்குப் போங்க. நான் பின்னாடியே வரேன்.''

ராஜேஷ் நீட்டிய ரூபாய் நோட்டைப் பாட்டி வாங்கிக் கொள்ளவில்லை. நாசூக்காக மறுத்து விட்டாள்.

''இந்தா தம்பி. பாட்டிக்கு இந்தக் காசை வாங்கிட்டு தண்ணி கொடுத்துடு'' பிரபு சொன்னான்.





''பட்டாசு வெடிச்சதாலே நேரமாச்சுன்னு சொல்றியே... பட்டாசு வெடிக்க இரண்டு மணியா?''

''இல்லே சார். வெடிச்சப்புறம் டாக்டர்கிட்டே போயிட்டு வரத்துக்குத்தான் ரெண்டு மணியாச்சு.''

- சி. அருள்மணி, மொரப்பூர்.

''தற்செயலாஏற்பட்ட விபத்து இது. கிழே கொட்டி விட்ட தண்ணிக்காக நான் காசு வாங்கறது பாவங்க'' - சிறுவன் கபில் நாசூக்காக மறுத்து விட்டான்.

ஒரு வினாடி அவனையே உற்றுப் பார்த்தான் ராஜேஷ். சரியாக வாரப் படாத கிராப்பு, கருத்த சுமாரான மேனி, கிராமத்துக்கே உரிய மினுமினுப்பு. பளிச்சிடும் பற்கள். சற்று எடுப்பான மூக்கு, வியர்வையில் சாயம் போன பழைய சட்டை. கிழிசலுக்கு ஒட்டுப் போட்ட காக்கி டிராயர்.

''கபில். நான் ஒன்று கேட்டா கோவிச்சுக்க மாட்டியே?''

''தாராளமாக் கேளுங்க சார்.''

''நாங்க வர்ற போது முனியாண்டிங்கற ஆளு ஒரு தோண்டி தண்ணி தரும்படி உங்கிட்டே கெஞ்சினாரு. ஊத்த மாட்டேன்னு சொல்லிட்டே. இப்ப பாட்டிக்கு சும்மாவே தண்ணி ஊத்தறேன்னு வலுவிலே வந்து சொல்றயே! ஏன்?''

கபில் ஒரு வினாடி மௌனமாக இருந்து விட்டுச் சொல்லலானான்.

''சார். நான் உங்களைப் போல அதிகம் படிச்சவன் இல்லே. ஆறாங் கிளாசு வரைதான் என் படிப்பு. நீங்க பார்த்தீங்களே, முனியாண்டி. அவர் இளைஞர். அவராலே ஓடியாடி வேலை செய்ய முடியும். ஆனா, உழைக்காம மற்றவங்க உழைப்பிலே சுகம் காண ஆசைப்படறார். உழைக்க சக்தியுள்ளவனுக்கு, உதவி செய்யறேன்னு சொல்லி.. அவரை சோம்பேறியாக்க நான் விரும்பலை. இப்ப பாட்டியை நீங்க பார்த்தீங்க. வயசானவங்க, முடியாதவங்க, வியாதி உள்ளவங்க. இவங்களுக்கு எந்தப் பலனையும் எதிர்பார்க்காம உதவி செஞ்சா ஆண்டவனுக்கே செஞ்ச உதவி மாதிரி. அது நம்ப சமூகக் கடமையும் கூட.''

பாட்டியோட காலி அலுமினிய குண்டானவை எடுத்தக் கொண்டு, பளிச் சென்று சிரித்தபடி விடைபெற்றுக் கொண்டான் கபில்!

கபில் சொல்வதையே பார்த்துக் கொண்டிருந்த ராஜேஷ் சொன்னான்.

''பிரபு. நாம இப்ப மதுரைக்குப் போகவேண்டாம். வண்டியை ஊருக்கே திருப்பு.''

''ஏண்டா! இந்த முடிவு?''

''எனக்குக் கொஞ்சமாகவும், எங் கண்ணனுக்கு அதிகமாகவும் தன் சொத்தை எழுதி வைத்திருக்கார்னு எங்கப்பா மேல எனக்குக் கோபம் இருந்தது உண்மைதான். சட்டப் பிரகாரம் சமமாகப் பிரிக்கத்தான் உங்களை எல்லாம் கூட்டிக் கொண்டு கிளம்பினேன். ஆனா... இப்ப.. இப்ப.. கபில் சொன்னபடி என்கிட்டே இளைஞனுக்கான தேக வலிமை இருக்கு. கல்வி அறிவு இருக்கு. ஆனா, நான் உழைக்காம எங்கப்பா சொத்துக்கு ஆசைப்பட்டேன். என்னை சோம்பேறியாக்காம இருக்கத்தான் எங்கப்பா எனக்குக் கொஞ்சமா பரம்பரை சொத்தை எழுதியிருக்கார். ஆனால்.. என்னை விட... என் அண்ணன் பத்து வயசு பெரியவன். வியாதிக்காரன். உடம்பு முடியாதவன். ஊனமுற்றவன். கபில் பரிதாபம் காரணமாகக் கிழவியிடம் காட்டிய கருணையைக் கூட நான் என் அண்ணனிடம் காட்டாம, பொறாமை வேறு பட்டேன். அதை நினைச்சா எனக்கே இப்போ அவமானமா இருக்கு. என் உள்ளத்திலே வரண்டு போயிருந்த கருணைங்கற, ஊற்றைத் தோண்டி விட்டு விட்டான் கபில்! எங்கப்பா செய்தது நியாயம்னு உணர்ந்து கொண்டேன். வாங்க போகலாம்.''

மனம் திருந்திய நண்பன் ராஜேஷைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தான் பிரபு.

பிருந்தாவனம்

நாய் எதற்கு?

★ துப்பறிவதற்கு நாய்களை ஏன் பயன்படுத்துகிறார்கள்?

நாயின் மோப்ப சக்தி அபாரமானது! திறமையான துப்பறியும் நாய்கள், 5 இலட்சம் வகையான வாசனைகளை இனம் பிரித்துக் கண்டுபிடித்து விடுகின்றன. நாய்களுக்கு அவ்வளவு மோப்ப சக்தி உண்டு.

- ஆறுபாதி புகழேந்தி, மயிலாடுதுறை.



பெரிய சரணாலயம்

• உலகிலேயே மிகப் பெரிய பறவைகள் சரணாலயம் அமெரிக்காவிலுள்ள ஓரியானாவில் உள்ளது. இச் சரணாலயம் ஒரு ஏரியின் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சுமார் 5 ஆயிரம் பறவைகள் தங்கலாம்.

- எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி - 14.



ரோட்ரன்னர்!

★ அமெரிக்காவின் நியூமெக்ஸிகோ மாநில அரசுப் பறவையின் பெயர் ரோட்ரன்னர் (Road Runner). சாலைக்ளில் ஓடும் கார்களைத் துரத்துவதில் இதற்கு அலாதிப் பரியம்.

- கனகா கெங்கை முத்து, அருப்புக்கோட்டை.



பிளாஸ்டிக் காகிதம்!

★ பிளாஸ்டிக் காகிதம் வந்து விட்டது. இங்கிலாந்து நாட்டிலுள்ள ஒரு கம்பெனி இந்த பிளாஸ்டிக் தாளைத் தயாரித்து இருக்கிறது. சாதாரணப் பேப்பரைப் போல இந்தப் பேப்பரையும் அச்சிடப் பயன்படுத்தலாம். தண்ணீர், எண்ணெய் பட்டாலும் கெடாது. சாதாரணத் தாளை நூறு தடவை மடித்தால் கிழிந்து விடும். ஆனால், இந்த பிளாஸ்டிக் பேப்பரை பத்தாயிரம் தடவை மடித்தாலும் கிழியாது.

- ஆறுபாதி புகழேந்தி, மயிலாடுதுறை.



எழுத்து இல்லாத மொழி

★ இமயமலைப் பகுதிகளில் பஹாடியாக்கள் என்ற பெயரோடு பழங்குடி மக்கள்

சிலர் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் பேசும் மொழிக்கு 'மால்தோ' என்று பெயர். இந்த மால்தோ மொழிக்கு எழுத்துக் கிடையாது. அதனால் இந்த இனத்தவர்களுக்கு எழுதவும் தெரியாது, படிக்கவும் தெரியாது.

- கோடை வ. பாஸ்கரன், தஞ்சை.



உப்பு நகரம்

★ போலந்து நாட்டில் உள்ள 'வெய்விச்கா' என்ற நகரில் மண்ணிற்கடியில் எங்கு பார்த்தாலும் உப்பே காணப்படுகிறது. இந் நகரின் பல்வேறு இடங்களில் 300 மீ ஆழம் வரை ஏராளமான உப்புச் சுரங்கங்கள் உள்ளன.

இந் நகரில் கிடைக்கும் உப்புதண்ணீரில் எளிதில் கரையாதது மட்டுமன்று. கல்லைப் போல் கடினமாகவும் இருக்கின்றது என்பது ஆச்சரியமான உண்மை.

- நாகை. கே. ரவி, கோவை - 18.



தெரியுமா?

★ ''மாடர்ன் ஆர்ட்''டின் 'தந்தை'யாகப் போற்றப்படுபவர் பாப்லோ பிகாஸோ என்பது உங்களில் சிலருக்குத் தெரிந்திருக்கும். அவரது முழுப் பெயர் தெரியுமா? அவர் பெயர், ''பாப்லோ டீகோ ஜோசே ஃபிரான்ஸிஸ்கோ டி பௌலா ஜீன் நெபொமியூசெனா கிறிஸ்பீனியோனோ டிலா சாண்டிஸிமா டிரினிடாட் ரைஸ் பிக்காஸோ!''

என்னங்க சீனப் பெருஞ்சுவர் ஞாபகத்திற்கு வருதா? ஒரு போனஸ் செய்தி. சமாதானத்தின் சின்னமாக வெண்புறாவை அமைத்துக் கொடுத்தவர் கூட இவரே!

- கே. ஜோதிப்ரகாஷ், நீலகிரி.

பரிசு வேண்டாம்!

★ நோபல் பரிசு பெற வேண்டும் என்று ரொம்பப் பேர் தவம் கிடக்கிறார்கள். ஆனால் நோபல் பரிசு கொடுக்கப்பட்ட போது வேண்டாம் என்று கூறி வாங்க மறுத்து விட்டவர்கள் கூட உண்டு! இலக்கியத்திற்காக ஜீன் பால் சார்த்தார் என்பவருக்கு 1964-ல் நோபல் பரிசு கிடைத்தது. வாங்க மறுத்து விட்டார். இவருக்கு முன்பு 1958-ல் போரிஸ் பாஸ்டர்னெக் என்ற ருஷ்ய எழுத்தாளரும் நோபல் பரிசை ஏற்க மறுத்து விட்டார். 1973-ல் லீடக் தோ என்பவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப் பட்டது. இவரும் பரிசை வாங்க மறுத்து விட்டார்.

- அரூர். மு. மதிவாணன்.

கால்வாய் அல்ல கடல்

★ ஆங்கிலக் கால்வாய் என்று கூறப் படுவது உண்மையில் கால்வாய் இல்லை என்ன தெரியுமா? இங்கிலாந்தையும் பிரிட்டனையும் இணைக்கும் கடல்தான் அது.

- எஸ். மகேஷ் பாபு, தஞ்சை மாவட்டம்.



★ தங்கத்தின் மதிப்பு இலண்டனில் நிர்ணயமாகிறது.

வைரத்தின் மதிப்பு ஹாலந்து நாட்டு 'ஆம்ஸ்டர் டாம்' நகரில் நிர்ணயிக்கப்படுகிறது.

- கே. ஆர். சந்திரன், மகிழஞ்சேரி.



★ நாம் குடிக்கும் காப்பிக்குக் காப்பி என்ற பெயர் எப்படி ஏற்பட்டது தெரியுமா? எத்தியோப்பியா நாட்டில் 'காப்பா' என்ற பகுதியில்தான் முதன் முதலில் காப்பிச் செடிகள் இயற்கையாகவே வளர்ந்து கிடந்தன. அந்தக் காப்பா என்ற சொல்லில் இருந்துதான் காப்பி என்ற சொல் பிறந்தது!

- தா. ஷேக் உசேன், செஞ்சி - 2.



★ இதோ பேனைப் பற்றிய ஒரு செய்தி! இறக்கையில்லாத மிகச் சிறிய பூச்சி இனம் பேன் இனம்தான். மனிதர்களின் தலை முடியில் வாழும் பேன் இனத்திற்கு 'பெடிகுலஸ் ஹ்யூமனஸ்' என்றும், மிருகங்கள் பறவைகளிடம் வாழும் பேன் இனத்திற்கு 'இப்திரியஸ் பியூபிஸ்' என்றும் பெயர் வழங்கப்படுகிறது. பேன் வகைகளில் 230 இனங்கள் இருக்கின்றனவாம்!

- சி. பன்னீர் செல்வன்.



மேற்கு ஜெர்மனியில், வீட்டில் வளர்க்கப்படும் தாவரங்களைக் கவனிப்பதற்கென்றே ஒரு மருத்துவமனையை ஆரம்பித்து இருக்கிறார்கள். வீட்டில் வளர்க்கப்படும் தாவரங்களுக்கு நோய் வந்துவிட்டால் அல்லது வளர்ச்சி சரியில்லை என்றால், அந்த மருத்துவமனையில் கொண்டு வந்து கொடுத்து விட்டால் போதும். மருத்துவமனையில் உள்ள தாவரவியல் விஞ்ஞானிகள் அவற்றைக் கவனித்து சிகிச்சை அளித்து திருப்பிக் கொடுக்கிறார்கள்.

- மயிலாடுதுறை, அறுபாதி புகழேந்தி.



★ இங்கிலாந்தில் நூலகங்களில் இருந்து ஆண்டுக்கு சுமார் இரண்டு இலட்சம் புத்தகங்கள் காணாமல் போய் விடுகின்றதாம்! இத் திருட்டைக் கண்டு பிடிக்க ஒரு புதிய கருவியைக் கண்டு பிடித்துள்ளார்கள். அனுமதியின்றி யாரேனும் புத்தகங்களை வெளியே எடுத்துச் சென்றால் எலக்ட்ரானிக் நுண்கருவிகள் தாமே இயங்கி நூலகத்தின் கதவுகளை மூடி விடச் செய்கிறதாம்.


கையில் புத்தகத்துடன் புத்தகத் திருடர்கள் தப்ப முடியாமல் மாட்டிக் கொள்கிறார்களாம்!

இம்முறை இந்தியாவில் இருந்தால் எவ்வளவோ சிறப்பாக இருக்கும் இல்லையா!

- ந. நவமணி, நல்லாலம்.

பிருந்தாவனக் கவியரங்கம்

கடிகாரம்




சின்னச் சின்ன கடிகாரம்
சுவரில் தொங்கும் கடிகாரம்
வண்ணம் மிக்க சுவரினிலே
வீற்றி ருக்கும் கடிகாரம்

அலாரம் உள்ள கடிகாரம்
அடித்து எழுப்பும் கடிகாரம்
விலைக்கு வாங்காக் கடிகாரம்
வேணு தந்த கடிகாரம்

சாவி கேட்கா கடிகாரம்
சொகுசாய் இசைக்கும் கடிகாரம்
எவரும் வியக்கும் கடிகாரம்
எங்கள் வீட்டுக் கடிகாரம்

– ச. ராஜேஷ்சிவா.





வானவில்

வானை நோக்கி பாரடா
வான வில்லைக் காணடா
காவடி போல் வளைந்துமே
காட்சி அளித்தல் காணடா!

வண்ணம் பற்பலவாகவே
வந்தது எப்படிக் கூறடா?
சின்னச் சின்ன தம்பியே
சிந்தித் ததனைச் சொல்லடா!

– எம். எஸ். ரவிச்சந்திரன்.

எங்கள் பாரதம்

பாரதம் எங்கள் பாரதம்
பாரோர் புகழும் பாரதம்
புரட்சி இன்றி விடுதலை
பெற்று உயர்ந்த பாரதம்!

காந்தி நேரு இராஜாஜி
கணக்கே இல்லாத் தியாகிகள்
வாங்கித் தந்த சுதந்திரம்
வாழ்க இதுவே நிரந்தரம்!

உலக மக்கள் வியக்கவே
உழைத்து உழைத்து உயருவோம்
வளங்கள் எல்லாம் பெருக்கியே
வாழ்த்தி இதனைப் போற்றுவோம்!

– எஸ். பிரதீப் குமார்.



எவ்வளவு பொருள்கள்? - போட்டி

படத்தை கவனமாகப் பாருங்கள். இதில் மூன்று எழுத்துக் கொண்ட எவ்வளவு பொருள்கள் இருக்கின்றன என்பதை எழுதியனுப்புங்கள். எங்கள் கணக்குப்படி 18 பொருள்களை நாங்கள் எழுதி வைத்திருக்கிறோம். இன்னும் அதிகமாகக் கூட இருக்கலாம். உங்கள் திறமையைப் பொறுத்தது. பரிசு கண்டிப்பாக உண்டு. கூப்பனை இணைத்து அனுப்ப வேண்டும்.

எவ்வளவு பொருள்கள்? - போட்டி

பெயர் : ....

வயது : ....

முகவரி : ....

....

பின்கோடு : ....

முடிவு தேதி: 16.11.91



பத்தாவது முட்டாள்



ஒரு ஊரில் ஓர் ராஜா இருந்தார். அவருக்கு திடீரென ஒரு ஆசை ஏற்பட்டது.

தன் மந்திரி மதிவாணனை அழைத்து ''அமைச்சரே! உடனே பத்து முட்டாள்களுக்கு விருந்து வைக்க வேண்டும்'' என்று தன் ஆசையை சொல்லிப் பத்து முட்டாள்களை அழைத்து வருமாறு கூறினார்.

மந்திரியும் ''சரி அரசே!'' என்றவாறு சென்றவர், அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் முட்டாள்களைக் கூட்டிக் கொண்டு வந்தார்.

''என்ன, அமைச்சரே! அதற்குள் முட்டாள்களைக் கண்டுபிடித்து விட்டீரா?'' என்றார் ராஜா வியப்புடன்.

''அரசே! புத்திசாலிகளைக் கண்டு பிடிப்பதென்றால்தான் தேட வேண்டும். முட்டாள்களைக் கண்டு பிடிப்பது என்பது அப்படியொன்றும் சிரமமான செயலல்ல'' என்றார் அமைச்சர்.

''சரி, அமைச்சரே! இவர்கள்தான் நாட்டிலேயே சிறந்த முட்டாள்களா? என்று கேட்டார் ராஜா.

''அரசே! முட்டாள்கள் என்றால் எல்லோரும் ஒரே மாதிரிதான் இருப்பார்கள். அவர்களில் உயர்ந்தவர், தாழ்ந்தவர், சிறந்தவர் என்றெல்லாம் இருக்க மாட்டார்கள்'' என்றார் அமைச்சர்.

அமைச்சரின் பதிலால் திருப்தியடைந்த அரசர் வந்திருந்த முட்டாள்களை எண்ணினார்.

''என்ன, அமைச்சரே! நான் பத்து முட்டாள்களை அல்லவா அழைத்து வரச் சொன்னேன். ஆனால்

நீங்களோ ஒன்பது முட்டாள்களைத் தானே அழைத்து வந்துள்ளீர்கள்?''

''அரசே, இங்குப் பத்து முட்டாள்கள் இருக்கிறார்கள்'' என்றார் அமைச்சர் அமைதியாக.

''என்ன, அமைச்சரே! உளறுகிறீர்! இங்கே இருப்பது ஒன்பது முட்டாள்கள் மட்டுமே. அப்படியானால் இன்னொரு முட்டாள் எங்கே?'' என்று கேட்டார் மன்னர் கோபத்துடன்.

''மன்னிக்க வேண்டும் அரசே! அந்தப் பத்தாவது முட்டாள் வேறு யாருமல்ல, நீங்கள்தான்!''

''இராஜாவான என்னையா முட்டாள் என்கிறாய்?'' - அரசர் கோபம் பொங்க அமைச்சரை நோக்கினார்.

''அரசே! நாட்டைக் காக்கும் மன்னரான தாங்கள், நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் செய்ய வேண்டிய எத்தனையோ முக்கிய வேலைகள் இருக்க, அவற்றையெல்லாம் விட்டு விட்டு முட்டாள்களுக்கு விருந்து வைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களே. முட்டாள்களுக்கு ஏற்படும் ஆசையலல்வா இது?'' என்று அமைச்சர் துணிவுடன் கேட்டார் பதிலுக்கு.

அரசர் உடனே தன் தவறை உணர்ந்து கொண்டு தலைகுனிந்தார்.

நாட்டில் நல்லாட்சி நடைபெற வேண்டும் என்பதில் அமைச்சருக்கு இருந்த அக்கறையையும், துணிவையும் பாராட்டினார்.

– மணிமேகலை ராமசாமி,
தாம்பரம்.





சோம்பேறிகளுக்குச் சரியான சூடு!

★ பிச்சை கேட்ட அரசன் தெரிந்த கதை என்றாலும், 'ஆனந்தி' அவர்கள் புதிய முறையில் நீதியைக் கூறியுள்ளது சுவையாக இருந்தது.
மீஞ்சூர், எஸ். என். சுலேகா.

★ எனக்குப் பிடித்த பொம்மை பகுதியில் நான்கு பேர் வெவ்வேறு விதமான கருத்துக்களை மிக அழகாக எடுத்துக் கூறினாலும், திவ்யா கூறிய கருத்துகளுக்கே என் முதல் மார்க்!
சிதம்பரம், என். ஆர். பாஸ்கரன்.

★ இரண்டு சிறு பாடல்கள் மூலம் கதை பண்ணியிருந்த விதம் (இட்லி ரங்கா முழிக்காதே) அருமை!
குத்தாலம், பி. பிரசாத்.

★ ''எனக்கு என்ன இருக்கு ?'' படக்கதை வேலை பார்க்காமல் சுற்றித் திரியும் சோம்பேறிகளுக்குச் சரியான சவுக்கடி!!!
கல்விடை, கே. எல். குமணன்.

★ ''முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும், என்னும் முதுமொழியை ஞாபகப் படுத்தி ஆழமாய் அடி மனதைத் தொட்டு விட்டார் ''அமெரிக்காவிலே வாங்கினது'' ஆசிரியை டி. ஜானகி.
தக்கோலம், அ. முஸ்தபா.

★ மூட்டைப் பூச்சிகளைப் பற்றிய அபூர்வத் தகவல்களைத் தந்த ஆசிரியருக்கு ஆயிரம் நன்றிகள் சொன்னால் கூடப் போதாது.
செஞ்சி - 2, சு. முரளிராசன்.

★ 'எனக்கு என்ன இருக்கு' படக்கதை! என்னையும் சிந்தித்துச் செயல்பட வைத்தது பாராட்டுக்கள்.
மகிழஞ்சேரி, கே. கணேசன்.

★ பிறருடைய கருத்தைக் காப்பியடிப்பவர்களுக்கு 'நெத்தியடி' தந்தது போல் இருந்தது 'நீயேவா எழுதினே!' சிறுகதை.
கோவை - 18, கே. ரவி.

★ 'நானா ஏழை?' சிறுகதை அற்புதமாய் இருந்தது.
குத்தாலம், குமரேசன்.

★ ''உலகப் பரிசுக்கு உயில் எழுதி வைத்தவர்'' கட்டுரை, ''ஆல்ஃப்ரெட் பர்னஹார்டு''டின் கொடைத் தன்மையை விளக்கியதோடு ''நோபல் பரிசி''ன் வரலாற்றையும் தெரிய வைத்தது. பாராட்டுக்கள்!
புஞ்செய்புளியம்பட்டி, பி. எல். கிரிஜா.

★ மலைக்கோட்டை மர்மம் திகில் படம் போல மிகுந்த மர்மம் நிறைந்த காட்சிகளுடன் தொடர்கிறது.
மணப்பாறை, வி. ஸ்ரீராம்.

★ முயற்சியும், தன்னம்பிக்கையும் இருந்தால் எப்படியும் முன்னேறலாமென்பதை விளக்கிய ''ஒரு காகப் பூனை'' மிக அழகாகவே பின்னப்பட்டிருந்தது!
குடந்தை, எஸ். கே. மூர்த்தி.

★ ''சிப்பிக்குள் முத்து'' பற்றி ''ஆழி'' கூறிய செய்திகள் அனைத்தும் முத்தானவை...!''

''டாக்டர்கள் தரும் மருந்துச் சீட்டில் ''R'' யென்ற குறியீடுக்கான ,விளக்கத்தை ''டாக்டரின் பதில்'' மூலம் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். டாக்டர் பதிலில் புத்தகத்தை 450 கோணத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று வந்துள்ளதே!
பரங்கிப்பேட்டை, பி. எஸ். மணிமாறன்.

(45 டிகிரியில் வைத்துக் கொண்டு என்று இருக்க வேண்டும். கோட்டை விட்டது ஆசிரியர்தான்! - ஆசிரியர்)

★ பிருந்தாவனப் பகுதியில் இடம் பெற்றிருந்த ஏழு செய்திகளும் ஏழேழு ஜென்மத்திற்கும் மறக்க முடியாத மகத்தான செய்திகளாக அமைந்திருந்தன.
மதுரை, மு. சுந்தரிப்ரியா.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்க்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.

ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 60/-; விமானத் தபால்: ரூ. 135/-.

ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 120/-; விமானத் தபால் ரூ. 270/-.



REGISTERED NO. TN MS (S) 281

Registered as a Newspaper in Srilanka



நீங்களே செய்யும் எலெக்ட்ரானிக் கிட்!

ஒரே 'சிப்' மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட பரிசோதனைகள்!

"சிப்-சாப்" நீங்களே செய்யும் எஜுகேஷனல் கிட் நூற்றுக்கும் மேற்பட்ட பகட்டான பரிசோதனைகள் கொண்டது. வித்தையை விளையாட்டாய் கற்பிக்கவென்றே திட்டமிடப்பட்டது!

உங்கள் குழந்தை நாளைய உலகில் வெற்றியடைய வழிசெய்யுங்கள்!

எலெக்ட்ரானிக் யுகத்தின் சவால்களை சமாளிக்கத் தகுதியான சாதனம் "சிப்-சாப்"!

அம்சங்கள்: பாட்டரியால் இயங்கக் கூடியது - பாதுகாப்பானது • எளிதில் எடுத்துச் செல்லக் கூடியது • ஸால்டரிங் இல்லை – கனெக்ஷனுக்கு "பேட்டென்டுடன்" கூடிய விசை • கையாள எளிது.

பரிசோதனைகள்: • மியூஸிகல் ஆர்கன் * ஷூட்டிங் விளையாட்டு • ஃபயர் அலாரம் * 'ஒயர்லெஸ் பீப்பர் * ஸிக்னல் டிரான்ஸ்மிட்டர் * லேட் ஆபரேட் அலாரம் இன்னும் பலப் பல.

ரூ. 375/- மட்டும் - வரிகள், அனுப்பும் செலவு தனி.

"எலக்ட்ரானிக்ஸ் எல்லோருக்கும்"

எஜுடெக்

187, முதல் மாடி, வீரபிள்ளை தெரு,
பெங்களூர் – 560 001. இந்தியா.
போன்: 568820

எனக்குத் தேவை "சிப்-சாப்" கிட் ஒன்றுக்கு ரூ. 425/- வரியும், அனுப்பும் செலவும் சேர்த்து. தயவு செய்து..................கிட்/கிட்கள் அனுப்பவும். இத்துடன் 'கிராஸ்' செய்யப்பட்ட டி.டி./போஸ்டல் ஆர்டர் (ஒரு கிட் ரூ. 50/- என்ற கணக்கில்) முன்பணமாக அனுப்புகிறேன். மீதித் தொகையை வி.பி.பி. வந்து சேர்ந்தவுடன் அனுப்புவதாக உறுதியளிக்கிறேன்.

பெயர் ....

விலாசம் ....

பள்ளி ☐ கல்லூரி ☐

Climb ads/Chip-Chap/8901